மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி

# MANONMANIAM SUNDARANAR UNIVERSITY

# TIRUNELVELI

தொலைநெறித் தொடர்கல்வி இயக்ககம்

## DIRECTORATE OF DISTANCE AND CONTINUING EDUCATION

# அற இலக்கியம்

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,

திருநெல்வேலி – 627 012.

**MSU / 2021 – 2022/ PG – Colleges/ M.A.Tamil/Semester-I/Ppr.no.4/Core-4**

## அற இலக்கியம்

**L T P C**

**4 0 0 4**

**நோக்கம்:**

1. அறஇலக்கியங்களை அறிந்து கொள்ளுதல்.
2. வாழ்வியலுக்கு அடிப்படை அறஇலக்கியங்கள் எண்ணத்தை வலியுறுத்தல்.
3. ஒழுக்க நெறிகளை வலியுறுத்தல்.
4. சமுதாய விழுமியங்களைப் பேணுவதற்கு வழிகாட்டுதல்.

**அலகு 1:**

அறம் - விளக்கம் - அறத்தின் இலக்கணம் - அறஇலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் - இலக்கியங்களில் அறிவியல் கூறுகள் - அறம் வாழ்க்கை நெறியாதல்.

(10 L)

**அலகு 2:**

திருக்குறள் - 10 அதிகாரங்கள்

அறத்துப்பால் - வான்சிறப்பு, புறங்கூறாமை, இன்னா செய்யாமை, வாழ்க்கைத் துணைநலம், பிறனில் விழையாமை

பொருட்பால் - கேள்வி, அறிவுடைமை, காலம் அறிதல், கண்ணோட்டம், அவை அஞ்சாமை.

நாலடியார் - 2 அதிகாரங்கள் - அறன் வலியுறுத்தல்,ஈகை

நான்மணிக்கடிகை - 10 பாடல்கள் (4,6,11,15,22,26,49,66,81,85)

இனியவை நாற்பது - 5 பாடல்கள் (1,4,8,16,24)

இன்னா நாற்பது - 5 பாடல்கள் (3,9,15,19,23)

(13L)

**அலகு 3:**

திரிகடுகம் - 5 பாடல்கள் (6,20,48,83,90)

சிறுபஞ்சமூலம் - 5 பாடல்கள் (11,26,48,83,90)

ஏலாதி - 5 பாடல்கள் (11,23,38,45,59)

பழமொழி நானூறு - 5 பாடல்கள் (6,11,25,36,54)

ஆசாரக்கோவை - 5 பாடல்கள் (3,17,19,28,55)

(12L)

**அலகு 4:**

முதுமொழிக்காஞ்சி - முழுவதும்

மூதுரை - 10 பாடல்கள் - 1 முதல் 10 பாடல்கள்

நல்வழி - 10 பாடல்கள் - 21 முதல் 30 பாடல்கள்

பாரதிதாசன் ஆத்திச்சூடி முழுவதும் (11L)

**அலகு 5:**

திருமூலர் - திருமந்திரம் - யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை

வெற்றிவேற்கை - முழுவம், குணங்குடி மஸ்தான் சாகிபு – பராபரக்கண்ணி.

(14L)

(Total 60L)

# அலகு – 1

அறம் என்ற சொல் அறு என்ற வினைச் சொல்லின் அடியாகப் பிறந்தது. இதற்கு அறுத்துச் செல், வழியை உண்டாக்கு, உருவாக்கு, துண்டி, வேறுபடுத்து என பல வகைப் பொருள்கள் வழங்கிவருகின்றன. மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே முழுநிறை வடிவமே இறம் என்று கூறுவர். பிறவிதோறும் மனிதனைப் பற்றிக் கொண்டு வரும் தீவினையை அறுத்தெறிவதே அறம் என்றதன் விளக்கம்.எதிக்ஸ் என்னும் ஆங்கிலச் சொல்லின் விளக்கம் நல்ல அல்லது தீய செயல்கள் மூலம் தானே வெளிப்படும் மக்களுடைய நடத்தையைப் பற்றிய ஆய்வில் கலையே என்பதாகும். இதனை தமிழில் அறவியல் எனலாம்.தனி மனித நடத்தை பெரும்பாலோரால் பின்பற்றப்பட்டபொழுது ஒழுக்கமெனும் பண்பாக மலர்கிறது.அறம் என்பது செயலா, சொல்ல, எண்ணமா என்றால் செயலுக்கு அடிப்படையாக இருப்பது எண்ணமாகும். எண்ணம் தூய்மையாக இருந்தால் தான் சொல்லும் செயலும் தூய்மையாக அமைய முடியும். எண்ணம் எழுவதற்கு இடமான மனது மாசு இல்லாதாக இருக்க வேண்டும்.

இயற்கை நெறிக்காலக் கருத்துக்களை அறியப் புறநானூறு எவ்வளவுக்கு உதவுகின்றதோ, அவ்வளவுக்கு அறநெறிக்காலக் கருத்துக்களை அறியத் திருக்குறள் உதவுகின்றதெனலாம். புறநானூறு பல புலவர் பாடிய செய்யுட்களின் தொகுதியாக அமைந்துள்ளது. திருக்குறள் ஒருவர் பாடிய நூலாகும். திருக்குறளை விட, வேறு பத்து அறநூல்களும் பதிணென்கீழ்கணக்கிற் காணப்படுகின்றன. அவற்றுள் நாலடியார் ஒன்றே பல புலவர் பாடிய செய்யுட்களின் தொகுதி; ஏனையவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு புலவரியற்றியது. வாழ்க்கை பற்றிய கருத்துக்கள் பலவற்றையும் ஒருவர் சிந்தித்து அவற்றை ஒழுங்குபடத் தொகுத்து ஒரு நூல் வடிவத்தில் கூறும் நிலை அறநெறிக் காலத்திற் காணப்பட்டது. இவ்வறநூல்களுள்ளே, திருக்குறள் முதலிலே தோன்ற, ஏனையவை பின் தோன்றின என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. திருக்குறளின் கருத்துக்களையும் திருக்குறளை பின்தொடர்ந்து தோன்றிய அறநூல்களின் கருத்துக்களையும் திருக்குறளைப் பின்தொடர்ந்து தோன்றிய

அறநூல்களின் கருத்துக்களையும் ஒப்பிட்டு நோக்குவது, அறநெறிக்காலத்தில் முக்கியத்துவம் பெற்ற கருத்துக்களை அறியத்துணை செய்கிறது.

புறநானூற்றுள்ளும் ஏனைய சங்க நூல்களுள்ளும் அறக்கருத்துக்கள் சில ஆங்காங்கே காணப்பட்டபோதும், அறக்கருத்துக்களை மட்டும் எடுத்துக் கூறும் நூல்கள் சங்கமருவிய காலத்திலேயே எழுந்தன. சங்ககாலச் சூழல் சங்கமருவிய காலச் சூழலாக வேறுபட்டபோது, இலக்கியப் போக்கிலும் இத்தகைய வேறுபாடு ஏற்பட்டது. தமிழிலக்கியப் பரப்பில் அறநூல்கள் ஒரு கணிசமான பகுதியாக இருக்கின்றன. சிலப்பதிகாரம் முதலிய நூல்களில், அறங்கள் கதைப்போக்கில் அமைந்து காணப்படுகின்றன. மணிமேகலை முதலிய நூல்களில், அறக்கருத்துக்கள் கதையினிடையே வலிந்து புகுத்தப்பட்டன போலக் காணப்படுகின்றன. மக்களாற் போற்றப்பட்டு, நீண்ட கால வாழ்வுபெற்றுள்ள இலக்கியங்கள் யாவும் அறத்தையடிப்படையாகக் கொண்டவையென்றும், அவ்வாறில்லாதன நிலைபேறில்லாது அழிந்தொழிந்துவிடுமென்றும் கருதும் இலக்கிய விமர்சகர் பலருளர். ஆனால், அறநூல்கள் என்று பொதுவாகக் கொள்ளப்படுவன நீதி முறைகள், ஒழுக்கநெறிகள் என்பவற்றை நேரே எடுத்துக்கூறும் நூல்களே. இவ்வாறமையும் நூல்கள் ஏனைய மொழிகளிலுங் காணப்பட்ட போதும், இந்நூல்களே இலக்கியங்களெனக் கொண்டு போற்றுவது தமிழுக்குள்ள ஒரு சிறப்பியல்பாகும். இலக்கியம் என்ற தமிழ்ச்சொல் லட்சியம் என்ற வடசொல்லின் திரிபென்பர். அறநூல்கள் போதிக்கும் வாழ்க்கைமுறை உயர்ந்த இலட்சியம் என்று கருதிப் போலும் தமிழர் அறநூல்களை இலக்கியங்களாகப் போற்றினர்.

சங்கமருவிய காலத்திற் களப்பிரராகிய அன்னியர் தமிழ் நாட்டைக் கைப்பற்றியாண்டு கொடுங்கோன்மை செய்ய, அவர்கள் காலத்திலே தமிழ்ச் சமுதாயம் சீர்கேடடைந்ததால், தமிழ்மக்கள் வாழ்க்கையை உயரச் செய்வதற்காகவே, திருக்குறள் முதலிய அறநூல்கள் தோன்றின என்று ஒரு சாரார் கருதுவர். இக்கருத்து ஓரளவு ஏற்கக் கூடியது நாட்டில் வெளிநாட்டார் படையெடுப்பு நிகழ்ந்த காரணத்தால், அமைதியின்மை முதலியன நிலவும்போது, மக்கள் ஒழுக்கம் குன்றுவதியல்பு

அக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கமாக, ஒழுக்கத்தை வலியுறுத்தும் நூல்கள் தோன்றுவது எதிர்பார்க்கக் கூடியதே. அன்னியரான களப்பிரரின் வாழ்க்கை முறையும் தமிழர் வாழ்க்கை முறையுங் கலந்தபோது, சிறந்த ஒழுக்கம் எது என்பது பற்றி மக்களிடையே மயக்கம் ஏற்படுவதும் இயல்பானதே. ஆளப்படுவோருக்கு ஆளுவோரின் அந்த மயக்கத்தைத் தீர்த்துவைக்கும் வகையில், அக்கால்களில் அறநூல்கள் தோன்றின எனக் கொள்ளலாம். சமண பௌத்தர்கள் களப்பிரரின் பேராதரவைப் பெற்றார்களென்றும், அது காரணமாக, அவர்கள் அறநூல்கள் பல எழுதினார்களென்றும் கூறுவர் சிலர்.

இத்தகைய காரணங்கள் மட்டும் ஒரு சமூகத்தின் வாழ்க்கை பற்றிய கருத்துக்களை மாற்றியமைக்கக் கூடியன என்று கொள்ளவியலாது. மக்கள் பறநானூற்றுக் கால வாழ்க்கை முறையிலே திருப்தியடைந்தவர்களாக இருந்திருந்தாற் புதுமையை ஏற்றிருக்கமாட்டார்கள். தம்முடையவும் தம்முன்னோருடையவும் வாழ்க்கை முறையில் அதிருப்தி ஏற்பட்டிருக்காவிட்டால், புறநானூறு தோன்றிய தமிழ்நாட்டிலே திருக்குறள் தோன்றியிருக்க முடியாது. அரசாள்வோரில் ஏற்பட்ட மாற்றம் மட்டும் மக்கள் வாழ்க்கையை அதுவும் நிறுவனங்கள் முதலியன வளர்ச்சியடையாத பூர்வீகசட சமுதாயத்தில் பெருமாற்றமுச் செய்திருக்க முடியாது. சங்ககால வாழ்க்கைமுறையிற் காணப்பட்ட குறைபாடுகளால் மனம் நொந்த மக்களுக்கு வேறு வாழ்க்கைமுறை தேவைப்பட்டது. பொறியாலும் புலனாலம் கவர்ச்சியுற்று, காதல் வாழ்க்ககை, வீரவாழ்க்கைகளில் ஊக்கம் மேலிட்டு நின்று வாழ்ந்து அவ்வாழ்க்கைகளிலே துன்பத்தைக் கண்ட தமிழ்மக்கள் கட்டுபாடுகள் நிறைந்த வாழ்க்கையையும் ஒழுக்கத்தையும் அவாவினர். சமண பௌத்தக் கொள்கைகள் செல்வாக்குப் பெற்ற நிலை இவ்வாறு தான் ஏற்பட்டிருத்தல் வேண்டும்.

வைதிக சமயத்தவரைச் சமணபௌத்தரோடு ஒப்பிடும போது, வைதிக சமயத்தவர், மன அமைதியோடு வாழ்தற்குரிய ஒழுக்கத்துக்கு அடிப்படையான பொதுவகையறங்களைப் பெரும்பான்மையளவில் விதந்தெடுத்து வற்புறுத்தாதாலும், பிராமணரின் நன்மையையே ஏற்றமான அளவிலே கருத்திற் கொண்டிருந்ததாலும்,

சங்கமருவிய காலத்தமிழ் மக்களிடையே அதிக அளவிற் செல்வாக்குப் பெறமுடியவில்லை. கட்டுப்பாடான வாழ்க்கையை வற்புறுத்துவதிற் பௌத்தரிலும் கூடிய அளவு சமணர் தீவிரவாதிகளாக இருந்தமையினாற் போலும், சமணரே தமிழ் மக்களிடம் மிகுமளவினதாகிய செல்வாக்கைப் பெற்றனர். தமிழ்மக்களிடையே சமண பௌத்தர் பெற்ற செல்வாக்கே களப்பிரரும் சமணபௌத்தரை ஆதரித்து நின்றதற்குக் காரணமாகலாம். தமிழ்நாட்டிலிருந்து களப்பிரராட்சியை ஒழித்த பாண்டியரும் பல்லவரும் கி.பி.ஏழாம் நூற்றாண்டிற் சமணத்தை ஏற்றது, தமிழ் மக்கள் மத்தியிற் சமணம் பெற்றிருந்த செல்வாக்கைக் கண்டமையாற்றான் நேர்ந்திருத்தல் வேண்டும். களப்பிரர் காலத்திலும் இதே சூழ்நிலை நிலவியிருக்கலாம்.

வடஇந்தியாவில் வைதிக சமயத்திற்கு எதிராக எழுந்த சமணமும் பௌத்தமும் அக்கால வைதிக சமயத்தைச் சீர் திருத்த எழுந்தவையென்று கருதுவோருமுளர். அது எவ்வாறாயினும், இம்மூன்று சமயங்களுக்கிடையே பூசல்நிலவியதும், ஒவ்வொரு சமயவளர்ச்சியும் ஏனைய இரு மதங்களும் அங்கு அருகிப் போனதும் வரலாற்றுண்மைகள். பிராமணரின் மதமாக இருந்த வைதிக சமயம் இந்திய மக்களின் இந்து மதமாக மாறுவதற்குச் சமணபௌத்த இயக்கங்கள் பெருந்தொண்டாற்றின. வேள்வியையும் வருணாசிரம தருமத்தையும் அடிப்படையாகக் கொண்டிருந்த வைதிக மதத்திற்கு மகா வீரரும் புத்தர் பெருமானும் செய்த எதிர்ப்புப் பிரசாரம் வைதிக மதத்தைக் கலக்கிக் கொண்டிருந்தது.

வட இந்தியச் சமயங்களாகிய சமணம், பௌத்தம், வைதிகம் என்ற மூன்றும் அறக் கருத்துக்களைப் போற்றும் நிலை சீக்கிரத்தில் உருவாகியது. அசோகன் முதலிய பேரரசரின் ஆதரவு பெற்ற பௌத்தமும் சந்திரகுப்தமோரியன், சம்பிரதி முதலிய பேரரசரின் ஆதரவு பெற்ற சமணமும் பரப்பிய அறக்கருத்துக்கள் இந்தியா எங்கனும் செல்வாக்குப் பெற்றன. புதிய சூழ்நிலைக்கேற்ப, வைதிக சமயம் நடந்து கொள்ளத்தொடங்கியது. வைதிக சமயத்தினர் ஸ்மிருதி நூல்களை எழுதத் தொடங்கினர். மனு, யாக்ஞவல்க்கியர், நாரதர்,போதாயனர் முதலியோர் எழுதிய அற நூலகள் இந்தவகையில் அடங்கும். வேதங்களிற் கூறப்படும் அறக்கருத்துக்கள்

இந்நூல்களிலேயே திரட்டித் தரப்படுகின்றன எனக் கூறி வைதிக சமயத்திற்குப் பெருமை தேடினர் இந்நூலாசிரியர்கள். இந்தத் தரும சாத்திரங்களிற் கூறப்படும் அறங்கள் சமண பௌத்தருக்குச் சிறப்பாக உரிய அறங்களல்ல. ஆனால், சமணபௌத் இயக்கங்களின் தூண்டுதலாலேயே இந்நூல்கள் தோன்றின எனலாம். வருணாசிரம தருமம், இத்தரும சாத்திரங்களில் முக்கியத்துவம் பெறுகிறது. உதாரணமாக, விவசாயம் சூத்திரர்களுக்கேயுரிய தொழிலென்று வரையறுக்கப்படுகிறது. சமணம், பௌத்தம், வைதிகம் முதலிய வடநாட்டுச் சமயங்கள் இந்த நிலையில் இருந்த போதிலேதான், தமிழ்நாட்டில் அறநூல்கள் தோன்றுவதாயின.

தமிழ்நாட்டில் சங்க மருவிய காலத்திலே தோன்றிய தொடர் நிலைச் செய்யுட்களிற் சிலப்பதிகாரம் சமணராலும் மணிமேகலை பௌத்தராலும் பாடப்பட்டவை. சிலப்பதிகாரத்தில், கவுந்தியடிகள் என்ற சமணசமயப் பெண்பாற்றுறவியும், சாரணர்களும் சமணசமயக் கொள்கைகள் சிலவற்றை எடுத்துக்கூற இளங்கோவாற் பயன்படுத்தப்படுகின்றனர். சமணசமயக் கருத்துக்களைச் சிறப்பாக எடுத்துக்கூறிய போதிலும், ஆசிரியர் சமயப் பொது நோக்குடையவராகக் காணப்படுகிறார். மணிமேகலை பிற சமயங்களை இகழும் நோக்கமும் கொண்ட. இந்நூல் பௌத்த சமயப் பிரசாரத்தை முக்கிய நோக்கமாகக் கொண்டு எழுதப்பட்டதென்பது தெளிவு. பௌத்த சமயக் கருத்துக்கள் நூல் முழுவதும் ஆங்காங்கே காணப்படுகின்றன.

அறநெறிக் காலத்திலே தமிழ்நாட்டில் இடம்கொண்ட பல்வேறு சமயங்களைப் பற்றியும் மணிமேகலையிலிருந்து அறியமுடிகிறது. இந்நூலிலுள்ள கடைசி மூன்று காதைகள் அந்நாளிலே தமிழ்நாட்டில் வழங்கிய சமயத்தத்துவங்களை எடுத்துக் கூறுகின்றன. சமயக்கணக்கர் தந்திறங்கேட்ட காதையிற் பத்து வகைச் சமயங்கள் கூறப்பட்டபோதிலும் காதை முடிவில் மணிமேகலையால் நிராகரிக்கப்படுகின்றன. வைதிகம், உலோகாயுதம், ஆசிவகம், நிகண்டவாதம், சாங்கியம், நைநாகியம் என்பதில் அளவைவாதி, சைவவாதி, வைணவவாதி, பிரமவாதி, வேதவாதி என்போர் அடக்கப்படுகின்றனர்.

களப்பிரர் ஆட்சிக் காலத்தில் சமணமும் பௌத்தமுமே சக்திவாய்ந்தது. இந்தியாவில் இராசஸ்தான், குசராத்து, மகாராட்டிரம், கருநாடகம், தமிழ்நாடு என்னும் பகுதிகளில் சமணம் செல்வாக்குடன் விளங்கியது. தமிழ்நாட்டுக்கு வடஎல்லையில் அமைந்த ஆந்திர நாட்டில் பௌத்தம் செல்வாக்குப் பெற்றிருந்தது. சங்கம் என்ற சொல், சமண பௌத்தருக்குரியதன்றிச் சைவ வைணவருக்கு ஆதியில் உரியதன்று. தமிழ்நாட்டு வரலாற்றை நுணுகி ஆராய்ந்தால், களப்பிரரின் படையெடுப்புக்குப் பின்பும் பல்லவா் காலத்திற்கு முன்பும் இடையிலிருந்த சில நூற்றாண்டுகள் சங்ககாலம் எனக் குறிப்பிடப்படுவதற்கு ஒரு வகையிலே தகுதி உள்ளன என்பது தெரியவரும். அறநெறிக்காலத் தமிழகத்தில், சமணபௌத்த சங்கங்கள் செல்வாக்கு மிக்கு விளங்குகின்றன. சமணபௌத்த சங்கங்கள் அறத்தையே உயிர்நாடியாகவுடையன. பௌத்த மதத்தவா் போற்றும் மும்மணிகளுட் சங்கம், தருமம் என்பன இருமணிகளாகக் கொள்ளப்படுவதால், பௌத்ர் இவற்றுக்குக் கொடுக்கும் சிறப்புப் புலனாகிறது. இவற்றிலிருந்து சங்கத்துக்கும் அறத்துக்குமுள்ள தொடர்பு புலப்படுகின்றது.

பதினெண்கீழ்கணக்கு நூல்களுட் காணப்படும் அறநூல்கள் சமணச் சார்புடையன எனக் கூறப்படுகிறது. திருக்குறளே தமிழிலே தோன்றிய முதல் அறநூல். திருவள்ளுவரின் சமயம் என்ன என்பது பற்றி விவாதம் நடந்துவருகிறது. திருக்குறள் சமயக்கணக்கா் தம் வழி செல்லவில்லை என்பதை இதே காட்டுகிறது. திருவள்ளுவா் சமண சமயத்தவராதல் வேண்டும் என்பதற்கு அறிஞா் காட்டும் நியாயங்கள் பொருத்தமானவையாகக் காணப்படுகின்றன. கடவுள் வாழ்த்திலே கடவுளைக் குறித்து அவா் வழங்குந் தொடர்களும், கொல்லாமை, புலாலுண்ணாமை என்பனபற்றி அவா் வற்புறுத்திக்கூறும் முறையும், திருவள்ளுவா் தம்காலத்து வைதிகத்தையும் பௌத்தத்தையும் சேர்ந்தவரல்லா் என்பதைக் காட்டுகின்றன. இந்தியச் சமய வரலாற்றில், ஒரு சமயத்துச் சிறப்பிடம் பெறுங்கொள்கையை மற்றச் சமயமும் காலப்போக்கில் ஏற்று, அமைதி காண்பது பலமுறை நிகழ்ந்ததால், பிற்காலத்திற் பிற சமயங்களிற் காணப்பட்ட கொள்கைகளைக் கொண்டு, வள்ளுவரை அவ்வச்சமயத்தைச் சேர்ந்தவரென நிறுவமுடியாது.

வள்ளுவர் குறள்கள் சிலவற்றைக் கொண்டு அவர் சமணரெனக் கொள்ள இடமுண்டு; எனினும் அவர் நூல் பொது நோக்குடையது என்பதை ஏற்கத்தான் வேண்டும். நாலடியார், பழமொழி நானூறு, சிறுபஞ்சமூலம், ஏலாதி என்னும் நூல்களும் சமணரால் இயற்றப்பட்டன. திருக்குறள், நாலடியார் முதலியன காலத்தின் தேவைக்கேற்ப எழுந்து மக்களிடம் செல்வாக்குப் பெறுதலைக்கண்ட வைதிய சமயத்தினர், அந்நூல்கள் வழியிற் சென்று தாமும் அறநூல்கள் இயற்றத் தொடங்கினர். நான்மணிக்கடிகை, முதுமொழிக்காஞ்சி, திரிகடுகம், இன்னாநாற்பது, இனியவை நாற்பது என்னும் அறநூல்கள் வைதிக சமயத்தாரால் இயற்றப்பட்டன. இவை இவ்வாறு வெவ்வேறு சமயத்தாரால் இயற்றப்பட்டனவென்பது இவற்றிலுள்ள கடவுள் வாழ்த்துச் செய்யுட்களிலிருந்தும் பாயிரச் செய்யுட்களிலிருந்ம் தெரியவருகிறது. நான்மணிக்கடிகை, திரிகடுகம் என்பன வைணவராலும், ஆசாரக்கோவை சைவராலும் இயற்றப்பட்டன. நூல்களின் உள்ளடக்கத்தில், சமணர் இயற்றிய நூல்களுக்கும் வைதிக சமயத்தவர் இயற்றிய நூல்களுக்கும் குறிப்பிடத்தக்க வேறுபாடின்மை, இந்நூல்கள், காலத்தின் தேவையை ஒட்டி எழுந்தனவாக இருக்கவேண்டும் எனக்கொள்ள இடந்தருகின்றது.

சமணம் கடுந்துறவையும் பௌத்தம் கடுந்துறவுக்கும் உலகியலுக்கும் இடையிலான நடுவழியையும் வற்புறுத்துவன. உறுதிப் பொருள் வீடேயெனக் கொண்ட சமணம், கடுந்துறவே அதற்கு வழியெனக் கொண்டு, அந்த வழியையே வற்புறுத்தி வந்தது. காலப்போக்கில், சமணசமயம் இல்லற வாழ்வு வாழ்வோருக்கும் வழிகாட்ட முனைந்தது. மக்கள் யாவருந் துறவை ஏற்கத் தக்க மனவலிமையுடையவர்களல்லரெனவும் சமணத்துறவிகளை ஆதரிக்கச் சமண இல்லறத்தார் வேண்டுமெனவும் உணர்ந்த சமணம் காலப்போக்கிலே, சமண இல்லறத்தாராகிய சாவகருக்கு வேண்டிய ஆசாரங்களை வகுக்கத் தொடங்கியது. இல்லறம் துறவறத்திலும் ஓரளவு குறைந்த படி என்ற கருத்துத் தோன்றியது, கிறித்தவ ஆண்டுக்கு முன்பின்னாகவே, சமண நூல்களில், சாவகருக்குரிய ஆசாரங்கள் கூறப்படத் தொடங்கின.

அறத்தை ஏற்று வாழ்பவன் இவ்வுல கநன்மையடையாமற் போவதுண்டு. அவன் அறவாழ்க்கையிலே தொடர்ந்து நிற்க வேண்டுமென அவனைத் தூண்டுவதற்காக, மறுமையின்பம், மோட்சம் முதலியவற்றை விதந்து கூறி நீதியறங்கள் கற்பிக்கப்பட்டன. மோட்சத்தை நாடாமல் உலகியலின்பங்களை அதிக அளவில் துய்க்க விரும்புவர்களுக்காகத் தேவலோகம், போகபூமி என்பன எடுத்துக் கூறப்பட்டன. கற்பகதரு, காமதேனு என்பன தேவலோகத்தில் விரும்பியவர் விரும்பியனவெல்லாம் கொடுக்கும் கவர்ச்சிப் பொருள்களிற் சில. அறவழியை ஏற்காது தம் ஆற்றலால் உலக இன்பங்களைத் துய்ப்பவர்களுக்கு நரகத்துன்பம் நூல்களிற் கற்றுணர வழிகோலப்பட்டது. அறவாழ்க்கையை மக்கள் ஏற்பதற்கு இப்போதனைகளும் ஓரளவு காரணமாயிருந்தன. அறக்கருத்துக்களை ஏற்று வாழ்பவரை மக்கள் நம்புதலும் மதித்தலும் உண்டு. அறக்கருத்துக்கள் சில போற்றப்படுவதற்கு மனசாட்சியே காரணம் எனலாம். உள்ள்திலே தோன்றும் கடமையுணர்வு, அறங்கள் சில, நிலைபெற உதவுகின்றது.

அறங்கள் போற்றப்படுவதற்குக் காரணம், அவ்வாறு அவற்றைப் போற்றுவது சமூகத்தில் மரபாக இருப்பதனாலாகும். அவற்றைப் போற்றுபவர், அவ்வாறு போற்றுமாறு பயிற்றப்பட்டிருப்பர். பிறர் கூற்றுக்களையும் செயல்களையும் பின்பற்றியும், சிலர் அறக்கருத்துக்கள் சிலவற்றைப் போற்றுகின்றன. அறங்கள் வேறுசில, சமூகப் பொருளாதாரக் காரணங்களால், வெவ்வேறு சமூகங்களில் வெவ்வேறாக அமைகின்றன.

பதினெண்கீழ்கணக்கில் உள்ள அறநூல்களை இரண்டாக வகுத்து ஆராயலாம். அறநூல்களுள் திருக்குறளுக்குத் தனியிடம் உண்டு. திருக்குறள் தோன்றிய காலத்திலிருந்து இன்று வரை திருக்குறளைக் கற்றுப் போற்றாத தமிழறிஞர் இல்லை என்ற கூற்று எழத்தக்கவகையில் இந்நூல் சிறப்புப் பெற்றிருக்கிறது. தமிழ்ப் பெரும்புலவர்கள் திருக்குறளைத் தம் நூல்களில் எடுத்தாண்டுவருகின்றனர். திருக்குறள் தமிழ்மக்களின் உயர்ந்த பண்பாட்டு விளக்கமாக அமைந்திருக்கிறது. அறநெறிக் காலத்தில் மட்டுமன்றி, அதைத் தொடர்ந்து வரும் காலங்கள் அனைத்திலும் இந்நூலும் இந்நூற் கருத்துக்களும் சிறப்புற்று விளங்குகிறது.

**திருக்குறள்**

திருக்குறள் இயற்கைநெறிக் கால வாழ்க்கை முறையைக் கன்னடனஞ் செய்ய எழுந்த நூல் என்று கூறலாம் எனத் தெரிகிறது. இயற்கைநெறிக் கால இலக்கியங்களிலிருந்து அக்கால வாழ்க்கை முறையை வகுத்தால், திருக்குறள் அந்த வாழ்க்கைமுறையைக் குறை கூறுவதுபோல அமைந்துள்ளது. போர், காதல்,இறைச்சியும், மீன்உண்ணல், மதுவருந்துதல் முதலியன இயற்கை நெறிக்காலம் செய்யுட்களிற் சிறப்பாகக் பேசப்பட்டன.கொலை, காமம், களவு, புலால், கள் என்பன குறளுட் கடியப்பட்டன. புறநானூறு வீரத்தைப் பாட, திருக்குறள் அன்பைப் பாடுகிறதெனலாம். இயற்கைநெறிக் கால அம்சங்களில் வேறு சில அம்சங்களும் குறளில் கண்டிக்கப்படுகின்றன. புலவர் முதலியோர் வள்ளல்களிடம் இரவலாக ஒழுகியமை இரவச்சம் என்ற பகுதியில் இழித்துக் கூறுப்படுகிறது. அறநூல்களில் பெண்ணுக்கு கட்டுப்பாடு விதிக்கப்படுவதைக் காணலாம். சமூக வாழ்வில் ஓர் ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக, எல்லாச் சமூகங்களும் கற்பை ஒவ்வொரு வகையிற் பேணுகின்றன. அறநெறிக்காலத்துக் கற்பில் கட்டுப்பாடுகள் கூடியவளவில் இருந்தன. வீட்டு வாழ்க்கை புனிதமாக அமையவும் கணவனது உடைமையுணர்வு திருப்தியுறவும் மக்கட்பேறு முறையானதாக ஏற்படவும் பெண்ணுக்குக் கற்பு வற்புறுத்தப்படுகிறது. பெண்ணானவள் தெய்வத்தைத் தொழாது கணவனை் தொழவேண்டும் என்று வள்ளுவரும் கூறியுள்ளார்.காதல் ஒழுக்கத்தை அறநூல்கள் நேரடியாகக் கண்டிக்கவில்லை. அறநெறிக் காலத்தில் ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது,திணைமாலை நூற்றைம்பது, திணைமொழி ஐம்பது, கைந்நிலை, கார்நாற்பது முதலிய அகத்திணை நூல்கள் தோன்றுகின்றன. இவை சங்ககால அகத்திணை மரபின் தொடர்ச்சி எனலாம்.

சமயங்கள் வாழ்க்கையைச் சீர்திருத்தியமைக்க முயன்றன எனலாம். வாழ்க்கைச் சுகங்களில், அளவிருந்த பற்று வைப்பதனால், ஏற்படும் அநர்த்தங்களை அவதானித்து வாழ்க்கையில் ஓர் ஒழுங்கை நீதியை நிலைநாட்டச் சமயங்கள் முயன்றன. ஒழுங்காக வாழ்ந்து உலகியலின்பங்களைத் துய்க்க வேண்டும் என்றே சமயங்கள் கூறவிரும்பின

போல் தெரிகிறது. திருக்குறள் என்னும் நூலின் அமைப்பே, உலக வாழ்வு பற்றிய வள்ளுவரின் பார்வையைத் தெளிவாக்குகிறது. தலைவனும் தலைவியும் கூடிக்களிக்கும் இன்பத்தை வள்ளுவர் காமத்துப்பாலில் இருபத்தைந்து அதிகாரங்களில் எடுத்துக்கூறியுள்ளார். ஏனைய பல அறநூல்களும் சமய நூல்களும் கூறுவது போல அவர் இத்தகைய இன்பத்தைச் சிற்றின்பமென இழித்துரைக்கவில்லை. களவொழுக்கத்தைக் கூட அவர் கடிந்துரைக்கவில்லை.

இல்லற வாழ்க்கை திருக்குறளுட் சிறப்பிடம் பெறுகிறது. குடும்ப வாழ்க்கைச் சிறப்பு இருபது அதிகாரங்களில் எடுத்துக்கூறப்படுகிறது. திருக்குறள் மனைவியை வாழ்க்கைத்துணையெனக் கூறுதல் மிகவும் சிறப்பானது. குடும்ப வாழ்விலும் சமூக வாழ்விலும் பெண் பெற வேண்டிய முக்கியத்துவத்தையும் ஆணுடைய வாழ்விற் பெண் வகிக்க வேண்டிய பங்கினையும் இது உணர்த்துகிறது. அறவழியில் இல்வாழ்க்கையை நடத்திப் பெற முடியாத ஒன்றையும் துறவறத்திற் சென்று பெற்றுவிட முடியாது என்ற வள்ளுவரின் துணிகரமான கருத்து இந்தியச் சிந்தனையின் பழைய வரலாற்றில் ஒரு புதுமை. உலக வாழ்க்கைக்கு பெருந்துணையாக வேண்டப்படுவதாகிய பொருட்பால் எழுபது அதிகாரங்களில் பரந்து காணப்படுகிறது. திருக்குறள் கடவுள் வாழ்த்தோடு தொடங்குகிறது. அறத்துப்பாலின் இறுதியில் ஊழ் அல்லது விதி கூறப்பட்டுள்ளது. எனினும், இந்நூலை முழுவதுமாகப் பார்க்கும்போது, மக்கள் ஒழுங்காக வாழ்ந்து உலகியலின்பத்தைத் துய்க்கவேண்டும் என்பது தான் வள்ளுவர் காட்டும் வாழ்க்கைத் தத்துவம் என்பது தெரிகிறது.

### பிற அறநூல்கள்

திருக்குறள் அமைந்த அறவாழ்வின் அடிப்படையிலே பதினெண் கீழ்கணக்கு நூல்களாகவுள்ள ஏனைய அறநூல்கள் எழுந்தன. திருக்குறள் காட்டிய வழியில் திருக்குறள் கூறும் அறங்கள் சிலவற்றுக்குக் கூடிய முக்கியத்துவம் வழங்கி, சில சாதாரணமான அறச் செயல்களினையும் கோவைப்படுத்திச் சேர்த்க் கூறுவனவே பிற அறநூல்கள். ஏனைய அறநூல்களுக்குள்ளே தனிச் சிறப்புப் பெறுவது நாலடியார். இது திருக்குறளோடு ஒப்ப நோக்கிச் சேர்த்து மதிக்கப்பட்டு வருகிறது. திருக்குறள்

உலகிலுள்ள பல மொழிகளிலும் பெயர்க்கப்பட்ட நாலடியாரும் ஆங்கிலத்தில் போப்பையரால் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இரு நூல்களையும் மொழிபெயர்த்துப் பிற நாட்டாருக்கு நல்கும் பணியைச் சிறிதுகாலத்க்கு முன்பு வரை செய்தோர் கிறித்தவ மத போதகர் ஆவர். திருக்குறளும் நாலடியாரும் சமணசமயச் செல்வாக்குடன் காணப்பட்ட போதும், அந்நூல்கள் கூறும் அறங்களில் மிகப் பெரும்பாலன கிறித்தவருக்கும் உடன்பாடாகக் காணப்பட்டமையால் அந்நூல்கள் இவ்வாறு பிரபலமெய்தின.

நாலடியார் சமண முனிவரியற்றிய பாடல்களின் தொகுதி என்ற கருத்து ஏற்கப்படுகிறது. நாலடியார் வேளாண் மரபுக்கு வேதம் என்றொரு தனிச் செய்யுள் கூறுகிறது. வேளாளர் இராசத குணத்திற்குப் பதிலாகச் சாத்துவிக குணத்தைப் போற்றியதை இது குறிப்பிட்ட போதிலும் போர் முதலியவற்றால் வேளாண்மைக்கும் நாகரிகத்துக்கும் அழிவு ஏற்பட்டதால் அமைதியான வாழ்க்கையை வேளாளர் விரும்பினர் போலும். மருதநிலம் நீர்வளம் நிலவளம் மிக்கு உழவுத் தொழில் செழிக்க இடமளித்ததால், புலாலுண்ணாமை முதலிய அறங்களும் போற்றப்பட்டன. நாலடியார் சிறந்த உவமைகளாலும் ஆற்றலுள்ள சொற்களாலும் உலக நடைமுறையைக் காட்டுதலிலும், பழமொழிகளாலும் பண்டைக் கதைகளாலும் உறுதிப் பொருள்களை எடுத்து வற்புறுத்துதலிலும் ஈடும எடுப்புமற்று விளங்குகின்றது.

திருக்குறளிலும் நாலடியாரிலும் உலகியலின்ப வாழ்க்கை மீது வெறுப்பு முக்கியத்துவம் பெறுகிறது. நாலடியார் முழுவதிலும் நிலையாமைக் கொள்கை ஊடுருவிச் செல்கிறது. உலகவாழ்க்கை வெறுப்பு நூல் முழுவதும் தொனிக்கிறது. உலக வாழ்க்கையில் ஏமாற்றம் அடைந்தவர்களுக்கு ஆறுதல் அளிக்கவல்ல பல பாடல்கள் நாலடியரிற் காணப்படுகின்றன. உலக வாழ்க்கையிற் காணப்படக் கூடிய குறைபாடுகளை எடுத்துக்காட்டி, உலக வாழ்விலுள்ள பற்றை அறச் செய்கிறது நாலடியார்.பொது மகளிர் ஒழுக்கத்தைக் கண்டிப்பதிலும் திருக்குறளுக்கும் நாலடியாருக்கும் வேற்றுமை காணப்படுகிறது. நாலடியார் களவொழுக்கத்தை ஏற்றற்க்குச் சான்றில்லை. திருமணத்தின் பின் மட்டுமே காம இன்பம் நுகர வேண்டும்

என்பது நாலடியார் கருத்து. உலக வாழ்க்கையில் அறவழியில் நிற்போர் சிலர் தாழ்வதும் தீயவர் சிலர் வளமுற்று வாழ்வதும் என்றும் காணக் கூடியன. கலைமகளின் அருளுக்குப் பாத்திரமானவரைப் பூமகள் சேர விரும்பாததால் கல்வியும் பண்பும் மிக்கோர் வறியோராகின்றனர்.

பழமொழி நானூறு என்ற நூலொன்றும் அறங்களை வலியுறுத்துவதாக முன்றுரையரையனார் என்ற சமணரால் அக்காலத்து எழுதப்பட்டது. பழமொழிகள் எனப்படுபவை புதியனவாக அமைக்கப்படாது வழிவழியாக மக்களிடையே வழங்கிவரும் சுருதியுக்தியனுபவங்களுக்கு இயைந்த அறிவுரை வாக்குக்களாகும். பழமொழிகள் சில, குறுந்தொகை, அகநானூறு என்பவற்றிலும் பிற்கால இலக்கியங்களிலும் கையாளப்பட்டுள்ளன. ஆனால், நூல் முழுவதிலுமையுமாறு பழமொழிகளைத் தேர்ந்தெடுத்து அவற்றை ஏதுவாசகமாக அமைத்து அவற்றால் நிலை நாட்டிக் கூறப்படும் நீதிகளையும் அறங்களையும் விதந்து கூறி ஒவ்வொரு செய்யுளிலும் விளக்கிய நூல் இதுவே.சோழன், கரிகாலன், பாரி, பேகன் முதலியோரைப் பற்றிய முற்கால நிகழ்ச்சிகளும் பொற்கைப் பாண்டியன், மனுநீதிச் சோழன் முதலியோரைப் பற்றிய பிற்காலக் கதைகளும் பிற்கால மொழி வழக்குகளும் இந்நூலிற் காணப்படுகின்றன. இந்நூற்பாடல் ஒவ்வொன்றும் தனித்தனியே ஒவ்வொரு பொருள் தரும் முறையினது. அதிகார முறைபோன்ற பொருட்டொடர்புடையதாக அமைக்கப்படவில்லை.

அறக்கருத்துக்களை ஏற்றிடாத சமுதாயம் நோய் கொண்டது என நினைத்து அறக்கருத்துக்களை மருந்தாகக் கொண்டு, மருந்துப் பெயர்களில் அறநூல்களை எழுதி வெளியிடும் முயற்சியும் அறநூல்கள் காலத்தில் நடந்தது. சமண பௌத்த துறவிகள் மக்களுக்கு மருந்து தானஞ் செய்வதிலும் கவனஞ் செலுத்தினர். அசோகன் தமிழ்நாட்டுக்குத் தருமப் பிரசாரகர்களை அனுப்பினபொழுது மருந்து செய்ய வல்லவர்களையும் அனுப்பினார் என்று அவனுடைய சாசனங்களிலிருந்து தெரியவருகிறது. திரிகடுகம், சிறுபஞ்ச மூலம், ஏலாதி என்ற அறநூல்கள் இவ்வகையில் எழுந்தன. நோய் என்பது தளர்ச்சி, மெலிவு நொய்மைச் செய்வது

நோய். வந்த நோயை நீக்குவதும் நோயை வராமல் தடுப்பதும் மருந்து. திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம் என்ற மருந்துகள் உடல் நோயைத் தீர்ப்பது போல, அதே பெயர்களில் நல்லொழுக்க முறைகளைத் தொகுத்தமைக்கப்பட்ட அறநூல்கள் உளநோயைத் தீர்க்க உதவின.

திரிகடுகம் பாடியவர் ஒரு வைணவராகலாம் எனக் கடவுள் வாழ்த்திலிருந்து தெரியவருகிறது. மும்மூன்று செய்திகளை ஒரு பொதுக்கருத்தோடு இணைத்துக் கூறும் முறை இந்நூலிற் காணப்படுகிறது. துறவறத்திலும் பார்க்க, இல்லறமே சிறப்பித்துக் கூறப்படுகிறது. இல்லறம் நல்லறமாக மலர்வதற்கு வாழ்க்கைத் துணையின் முக்கியத்துவத்தை உணர்ந்த இவர் முப்பத்தைந்து இடங்களில் இல்லாளைப் பற்றிக் கூறுகிறார். நூலில் உள்ள நூறுபாக்களில் நன்மை தருவன எவையென்று கூறுவனவாக முப்பத்திநான்கும் அமைத்திருக்கிறார். வைதிக சமயத்தவர் எழுதிய நூலாதலினாற்போலும் பிராமணரைப்பற்றிய குறிப்புகளும் காணப்படுகிறது. அகிம்சையை போற்றுதல், கல்வி பற்றிய குறிப்புகள்,அறநெறி சார்ந்து வாழ்தல் பற்றி கூறப்படுகின்றன.

சிறுபஞ்சமூலம் சமணர் இயற்றிய நூலென்பர். கொல்லாமையாகிய அறத்தைச் சமண தத்துவம் கூறுகிற மாதிரி விரித்துக் கூறியுள்ளார். கொன்றானுக்கும் கொலைக்கு உடன்பட்டானுக்கும் கொல்லப்பட்டன் ஊனைக் கொண்டானுக்கும் பாவம் கிடைக்கும் எனவும், கொன்று உண்பான் நாச்செத்து விடும் எனவும், கொல்லுதல் நஞ்சு: ஊனைத் துய்த்தல் கொடு நஞ்சு எனவும் கூறப்படுகிறது.இவ்வாறு கொல்லாமை மற்றும் புலாலுண்ணாமை இரண்டும் பலபடியாக மீளமீள வற்புறுத்தப்படுகின்றன. பார்ப்பனரைப் பற்றிய சில செய்திகள் உள. சமூகத்தில் பார்ப்பனரும் குறிப்பிடத்தக்க அளவு தொகையினராக இடம் பெற்றதனாற்போலும், சமணசமய அறநூல்களும் அவர்களைப் பற்றிக் கூறுகின்றன. அறநூல்கள் ஒரு சமயப் பிரிவினரை நோக்கி அன்றிச் சமுதாயம் முழுவதையும் நோக்கி எழுந்தன எனக் கொள்வதற்கு இதுவும் ஒரு சான்று.

ஏலாதி இயற்றியவரும் சமணர் ஆவர். நாடகம் காம உணர்ச்சியை வளர்க்கும் என்று கொண்ட சமணர், நாடகத்துக்கு எதிராகப் பிரசாரஞ்செய்தனர். நாடகம்

சேர்ந்தால்,பகை, பழி, தீச்சொல், சாக்காடு முதலியனவரும் எனப்படுகிறது. சமூக சேவையை செய்வதால் ஏற்படும் நன்மையை இந்நூல் எடுத்துரைக்கிறது. மண்ணாளும் மன்னராதற்கு ஏற்ற ஒழுக்கமுறையினை இருபத்தொரு வெண்பாக்களில் ஆசிரியர் வகுத்துக்கூறியுள்ளார்.

நான்மணிக்கடிகையின் ஆசிரியர் வைணவரென்பர். இல்லறம் இந்நூலிற் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. இல்வாழ்வாரில்லா வழி அரசனுக்கு உயித் வாழ்தலில்லை எனவும், அரசனில்லாவழி தவத்தினர் உயிர்வாழ்தல் இல்லையெனவும், தவத்தினரில்லா வழி மழையில்லை எனவும் மழையில்லா வழி மாநிலத்தார் உயிர் வாழ்தலில்லை எனவும் இந்நூல் கூறுகிறது. மனைக்குப் பாழ் மனைவியின்மை எனவும் பாழ் ஒக்கும் பண்புடையாள் இல்லாமனை எனவும், மனைக்கு விளக்கம் மடவாள் எனவும் கூறப்படுகின்றன. பெண் பத்தினியாக காண வேண்டும் என்ற இலட்சியம் இங்கும் காணப்படுகிறது. கல்வியை வற்புறுத்திக் கூறுவதிலும் இந்நூல் ஆசிரியர் சிறப்பிடம் பெறுகிறார். வைதிக சமய நூலாதலால் அந்தணர் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. அகிம்சை கொள்கை இங்கும் சிறப்பிடம் பெறுகிறது.

முதுமொழிக்காஞ்சி ஆசிரியர் வைதிக சமயத்தவர் ஆவர். இன்பம் விரும்புவர் துன்பத்தை அடைதலும் துன்பத்தை விரும்பியவர் இன்பத்தை அடைதலும் எளிது என்று எளிய பத்து கூறுகிறது. ஒழுக்கமுடைமை கற்றலிலும் சிறந்தது என்று சிறந்த பத்தின் கூற்று. நல்ல குலத்தவளாயிருப்பதிலும் கற்புடையவளாயிருத்தல் சிறப்பு என்று அதே பத்திலிருந்து தெரிய வருகிறது. அறியாத தேசத்து ஆசாரத்தைத் தவறாக மதிப்பிட்டுப் பழித்தல் தகாது. வறியவன் கொடையாளியாயிராமையைப் பழித்தல் தவறு. மிக மூத்தோன் காமம் கண்டிக்கப்படுகிறது. புகழ் விரும்பி முயல்வோர் தேவலோகத்தை அடைதல் எளிது. மறுபிறப்பைப் பற்றியறியாதவர் மூத்தவரெனப்படார்.

இன்னா நாற்பது வைதிக சமயத்தவர் நூல் என்பர். இன்னாதவை என்று ஆசிரியர் கருதும் நந்நான்கு பொருள்கள் நாற்து பாடல்களில் தொகுத்துக் கூறப்பட்டன. அந்தணர் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இயற்கை நெறிக் காலத்துக் கூறப்பட்ட சில காரியங்களை இன்னா என்று இந்நூல் எடுத்துக் கூறுகின்றதெனலாம்.

இனியவை நாற்பது வைதிக சமயத்தது. இன்னா நாற்பதை ஒத்தது. ஆனால் இனியவைகளைத் தொகுத்து கூறுவது இன்னா நாற்பதில் இன்னா என்று கூறுப்படுபவை சிலவற்றின் எதிரிடையான கருத்துக்கள் இனியவை என்று கூறப்படுகிறது. கொல்லாமை, புலாலுண்ணாமை, அந்தணர் பற்றிய கருத்துக்கள் அத்தகையன. பிறர் மனைவியரை நாடாத அறம் இந்நூலிற் பல இடங்களில் எடுத்துக் கூறப்படுகிறது.

ஆசாரக்கோவை பாடியவர் ஒரு சைவராக இருக்கலாம் என்று அந்நூற் கடவுள் வாழ்த்திலிருந்து தெரியவருகிறது. ஆசாரக்கோவை என்றால் அறங்களின் தொகுதி எனலாம். ஏனைய அறநூல்கள் பெரும்பாலும் பொதுவான ஒழுக்கங்களைக் கூறுவன. இந்நூலாசிரியர் அவற்றை மாத்திரமன்றி நாள் தோறும் வாழ்க்கையிற் பின்பற்றி நடக்கவேண்டிய கடமைகளை நித்திய ஒழுக்கங்களையும் கூறியுள்ளார். அகத்தூய்மை அளிக்கும் அறங்களோடு உடல்நலம் பேணும் புறத் தூய்மையை வற்புறுத்திக் கூறும் பகுதிகளும் பலவாகும்.

அறநூல்களின் காலத்திலே சமயக் கொள்கைகளின் தத்துவக் கருத்துக்கள் எந்த அளவுக்கு இடம்பெற்றுள்ளன என்பது ஆராயப்படவேண்டும். மணிமேகலையிலே சமயங்களின் தத்துவக் கருத்துக்கள் பல காணப்படுகின்றன. ஆனால், அறநூல்களின் காலத்தில் இந்நூல் ஒன்றே ஓரளவு விரிவாகப் பல சமயங்களின் தத்துவம் பற்றிப் பேசுகிறது. சிலப்பதிகாரத்தில் கவுந்தியடிகள், சாரணர் கூற்றுகளிற் சமயக் கருத்துக்கள் சில காணப்படுகின்றன. அறக்கருத்துக்களின் செல்வாக்குத் தமிழர் பண்பாட்டின் வளர்ச்சியைக் காட்டுகிறது. தனி மனிதனது நலன் பற்றிய போக்கு, காலகதியில் விரிவடைந்ததாக, சமூக நலன் பற்றிய போக்கு உதிக்கறதெனலாம். தன் நலம் பேணும் உளப்பான்மையால் தொடக்கத்தில் நல்வினை நடைபெற, அவற்றைக் கருத்து வளர்ச்சியுற்ற காலத்தில் வெளியுலகினரையும் பேணும் கருத்தோடும் நல்வினையானது நடைபெறுவதாயிற்று. முந்திய ஆக்கிரமிப்பு மனப்பான்மையாக மாறுவதாயிற்று. வாழ்வில் அச்சம் நீங்கிப் பாதுகாப்பு ஏற்படுகிறது.

அறநூல்கள் காலத்திலே தொடர்நிலைச் செய்யுட்களும் அகப்பொருள் புறப்பொருள் நூல்களும் எழுந்தன. அறநூல்கள் வாழ்க்கையைச் சீர்திருத்தவே

எழுந்தன. வாழ்க்கையை முழுமைபெற எடுத்துக் கூறுவதற்கு இயற்கைநெறி நூல்களும் வேண்டும். இயற்கை நெறியை ஒழுங்குபடுத்தவே அறநெறி வகுக்கப்பட்டது. மேலும் இயற்கை நெறிக்காலம் அறநெறிக் காலமாக மாறியபோது தமிழ்ச் சமுதாயம் முழுவதும் மாறியிருக்கும் என்று கொள்ளமுடியாது. சமுதாயத்திற் சில பகுதியினா் பழைமை போற்றுபவராக இருந்த அக்காலத் தமிழ்நாட்டிற் சில பகுதிகலாவது பழைமை நிலை பெற்றிருந்திருக்கும்.

## வினாக்கள்

1. அறம் என்றால் என்ன? அதன் இலக்கணத்தை கூறுக.
2. அறஇலக்கிய தோற்றத்திற்கான காரணத்தை ஆராய்க.
3. பதினெண்கீழ்கணக்கு நூல்களில் அறநூல்கள் பெறுமிடம் குறித்து விவரிக்க.
4. மனித நோய் போக்கும் மருந்துகள் பெயரில் அமைந்த அறநூல்கள் கூறும் அறத்தை கூறுக.
5. அறம் வாழ்வியல் நெறியாவது எங்ஙனம்?

# அலகு – 2

# திருக்குறள்

உலகப் புகழ் பெற்ற திருக்குறள் 80க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூல். வடமொழியின் ஸ்மிருதிகளோடு இந்நூலை ஒப்பிடுவர். திருவள்ளுவம், உத்திரவேதம், பொய்யாமொழி, தெய்வநூல் என பல பெயர்களில் சிறப்பிக்கப்படுகிறது. அறத்துப்பால் முப்பெத்தெட்டு அதிகாரங்களையும் பொருட்பால் எழுபது அதிகாரங்களையும் கொண்டுள்ளது.

## வான்சிறப்பு

வான்சிறப்பாவது மழையினது தலைமை கூறுதல்இது கடவுட் செய்கைத்தாதலான் அதன்பிற் கூறப்பட்டது.

1. **சிறப்பொடு பூசனை செல்லாது வானம்**

   **வறக்குமேல் வானோர்க்கு மீண்டு.**

   சிறப்புச் செய்யப்படுகின்ற விழவு பூசனை நடவாது வானம் புலருமாகில் தேவர்களுக்கும் இவ்வுலகின் கண் மழை பெய்யாக்கால் வருங்குற்றங் கூறுவார் முற்பட நான்கு வகைப்பட்ட அறங்களில் பூசை கெடுமென்றார்.

2. **தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்**

   **வானம் வழங்கா தெனின்.**

   தானமுந் தவமுமாகிய இரண்டறமு முளவாகா அகன்ற உலகத்துக்கண் மழை பெய்யாதாயின் தானமும் தவமும் கெடுமென்றது.

3. **நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்**

   **வானின் றமையா தொழுக்கு.**

   நீரையின்றி உலகம் அமையாதாயின் யாவர்க்கும் மழை இன்றி ஒழுக்கம் உண்டாகாது.

4. **விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்**

   **துண்ணின் றுடற்றும் பசி.**

வானமானது நிலைநிற்கப் பொய்க்குமாயின், விரிந்த நீரினையுடைய அகன்ற உலகத்திடத்தே பசியானது நின்று வருந்தா நிற்கும் எல்லா உயிர்களையும்.

**5. விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே**

**பசும்புற் றலைகாண் பரிது.**

வானின்று துளிவீழினல்லது அவ்விடத்துப் பசுத்த புல்லினது தோற்றமுங் காண்டல் அரிது.

**6. நெடுஞ்கடலுற் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி**

**தானல்கா தாகி விடின்.**

நிலமேயன்றி நெடிய கடலும் தனது தன்மை குறையும். மின்னிமழையானது பெய்யாவிடின் நீருள் வாழ்வனவும் கெடுமென்நது. இவை நான்கினாலுதட பொருட்கேடு கூறினார்.

**7. ஏரி னுழாஅ ருழவர் புறலென்னும்**

**வாரி வளங்குன்றிக் கால்.**

ஏரினுழுதலைத் தவிர்வாருழவர் புயலாகிய வாரியினுடைய வளங் குறைந்தகாலத்து. இஃது உழவரில்லை என்றது.

**8. கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே**

**எடுப்பதூஉ மெல்லா மழை.**

பெய்யாது நின்று எல்லாப் பொருளையுங் கெடுப்பதும் அவை கெடப் பட்டார்க்குத் துணையாய்த் தான் பெய்து பொருள்கள் எல்லாவற்றையும் அவ்விடத்தே உண்டாக்குவதுமம் மழை.

**9. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**

**துப்பாய தூஉ மழை.**

பிறிதொன்றுண்பார்க்கு அவருண்டற்கான உணவுகளையும் உண்டாக்கித் தன்னை உண்பார்க்குத் தானே உணவாவதும் மழையே.

**10. வானின் றுலகம் வழங்கி வருதலாற்**

**றானமிழ்த மென்றுணரற் பாற்று.**

மழைவளம் நிலை நிற்றலானே உலகநடை தப்பாது வருதலான், அம்மழைதான் உலகத்தார் அமுதமென்றுணரும் பகுதியது.

இஃது அறம் பொருள் இன்பம் ஆகியவற்றை உண்டாக்குதலானும் பலவகைப்பட்ட உணவுகளை நிலை நிறுத்தலானும் இம்மழையினை மற்றுள்ள பூதமாத்திரமாக நினைக்கப் படாதென்ற நிலைமை கூறிற்று.

## 2. புறங்கூறாமை

புறங்கூறாமையாவது யாவரையும் இகழ்ச்சியானவற்றைப் புறத்துரையாமை.

1. **கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க**
   **முன்னின்று பின்னோக்காச் சொல்.**

ஒருவன் கண்ணெதிரே நின்று கண்பார்த்தல் ஒழியச் சொல்லினும் அமையும். பிற்காலத்து அவன் முன்னே நின்று எதிர் முகம் நோக்க வொண்ணாத சொல்லைச் சொல்லா தொழிக.

2. **புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாத**
   **லறங்கூறு மாக்கற் தரும்.**

காணாவிடத்துப் புறஞ் சொல்லிக் கண்டவிடத்துப் பொய்செய்து உயிரோடு வாழ்தலின், புறங்கூறாதிருந்து நல்குரவினாற் சாதல் அறநூல் சொல்லுகின்ற ஆக்க மெல்லாந் தரும்.

3. **அறங்கூறா னல்ல செயினு மொருவன்**
   **புறங்கூறா னென்ற லினிது.**

ஒருவன் அறத்தை வாயாற் சொல்லுதலுஞ் செய்யானாய்ப் பாவஞ் செய்யினும் பிறரைப் புறஞ் சொல்லானென்று உலகத்தாரால் கூறப்படுதல் நன்றாம்.

4. **அறஞ்சொல்லு நெஞ்சத்தா னன்மை புறஞ்சொல்லும்**
   **புன்மையாற் காணப் படும்.**

ஒருவன் அறத்தை நினைக்கின்ற மனமுடையனல்லாமை, அவன் பிறரைப் புறஞ்சொல்லும் புல்லியகுண மேதுவாக அறியப்படும்.

5. **அறனழீஇ யல்லவை செய்தலிற் றீதே**

**புறனழீஇப் பொய்த்து நகை.**

அறத்தை அழித்து அறமல்லாதவற்றைச் செய்வதனினும் தீது, ஒருவனைக் காணதவிடத்து இழித்துரைத்துக் கண்டவிடத்துப்பொய் செய்து நகுதல்.

6. **பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி**

**நட்பா டேற்றா தவர்.**

நீங்கும்படி சொல்லித் தங்கேளிரானாரைப் பிரிப்பர். மகிழச் சொல்லி நட்பாடலை உயர்வு பண்ணமாட்டாதார்.

7. **துன்னியார் குற்றமுந் தூற்று மரபினா**

**ரென்னைகொ லேதிலார் மாட்டு.**

தம்மோடு செறிந்தார் குற்றத்தையும் பிறர்க்கு உரைக்கின்ற சேதியையுடையார், செறிவில்லாதார் மாட்டு யாங்ஙனஞ் செய்வரோ? இது யாவரோடும் பற்றிலரென்றது.

8. **அறனோக்கி யாற்றுங்கொல் வையம் புறநோக்கிப்**

**புன்சொ லுரைப்பான் பொறை.**

பிறனில்லாதவிடம் பார்த்துப் புறஞ்சொற் கூறுவானது உடற் பாரத்தை நிலம் தானே அறத்தை நோக்கிப் பொறுத்ததாம் அல்லது போக்கும்.

9. **பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளுந்**

**திறன்றெரிந்து கூறப் படும்.**

பிறனுடைய பழியைச் சொல்லுமவன் தனக்குண்டான பழிகளிலுஞ் சிலவற்றை வேறுபடத் தெரிந்து பிறராற் சொல்லப்படுவன்.

10. **ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பிற்**

**றீதுண்டோ மன்னு முயிர்க்கு.**

அயலார் குற்றம் போலத் தமது குற்றத்தையுங் காண வல்லாராயின் நிலைபெற்ற உயிர்க்கு வருந் தீமை உண்டோ?

## 1. இன்னா செய்யாமை

இன்னாசெய்யாமையாவது தமக்கு இன்னாதவற்றைப் பிறர்க்கு செய்யாமை. இது வெகுளி மறந்து நிகழ்வதொன்றாதலின், அதன் பின் கூறப்பட்டது.

1. **இன்னா வெனத்தா னுணர்ந்தவை துன்னாமை**

   **வேண்டும் பிறன்கட் செயல்.**

   தான் இன்னாதன இவையென்று அறிந்தவற்றைப் பிறர்க்குச் செய்தலை மேவாமை வேண்டும்.

2. **கறுத்தின்னா செய்தவற் கண்ணு மறுத்தின்னா**

   **செய்யாமை மாசற்றார் கோள்.**

   தாம் செய்த குற்றத்தினாலே வெகுண்டு இன்னாதவற்றைத் தமக்குச் செய்தவன் மாட்டும், தாம் அதற்கு மாறாகப் பின்பு இன்னாதவற்றைச் செய்யாமை குற்றமற்றார் கோட்பாடு.

3. **செய்யாமை செற்றார்க்கு மின்னாத செய்தபி**

   **னுய்யா விழுமந் தரும்.**

   தானொரு குற்றஞ் செய்யாதிருக்க, தனக்கு இன்னாதவற்றைச் செய்தவர்க்கும், இன்னாதவற்றைச் செய்யின், அஃது உய்வில்லாத நோயைத் தரும்.

4. **சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா**

   **செய்யாமை மாசற்றார் கோள்.**

   மிகுதியைத் தருகின்ற செல்வத்தைப் பெறினும், பிறர்க்கு இன்னாதவற்றைச் செய்யாமை குற்றமற்றார் கோட்பாடு.

5. **எனைத்தானு மெஞ்ஞான்றும் யார்க்கு மனத்தானு**

   **மாணாசெய் யாமை தலை.**

   யாதொன்றாயினும் எல்லாநாறும் யாவர்மாட்டும் இன்னாதவற்றை மனத்தினாலும் செய்யாமை நன்று.

6. **அறிவினா னாகுவ துண்டோ பிறிதின்நோய்**

**தன்னோய்போற் போற்றாக் கடை.**

பிறிதோருயிர்க்குஉறும் நோயைத் தனக்கு உறும் நோய் போலக் காவாதவிடத்து, அறிவுடையனாகியவதனால் ஆகுவதொரு பயன் உண்டாகாது.

7. **தன்னுயிர்க் கின்னாமை தானறிவா னென்கொலோ**

**மன்னுயிர்க் கின்னா செயல்.**

தன்னுயிர்க்கு உற்ற இன்னாமையை உயிரில்லாப் பொருள்கள் போல அறியாது கிடத்தலன்றித் தான் அறியுமவன், பின்னைப் பிறவுயிர்க்கு இன்னாதவற்றைச் செய்கின்றது யரினைக் கருதியோ?.

8. **பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா**

**பிற்பகற் றாமே வரும்.**

பிறர்க்கு இன்னாதவற்றை முற்பொழுது செய்யின், தாமே பிற்பொழுது தமக்கு இன்னாதனவாய் வரும்; மற்றொருவன் செய்யாமல்.

9. **நோயெல்லா நோய்செய்தார் மேலவா நோய்செய்யர்**

**நோயின்மை வேண்டு பவர்.**

இக்காலத்து நுகர்கின்ற துன்பமெல்லாம் முற்காலத்துப் பிறர்க்குத் துன்பம் செய்தார் மாட்டேயுளவாம். ஆதலால் இக்காலத்துப் பிறர்க்குத் துன்பத்தைச் செய்யார் வருங்காலத்துத் தமக்குத் துன்பம் வாராமையை வேண்டுபவர்.

10. **இன்னாசெய் தாரை யொறுத்த லவர்நாண**

**நன்னயஞ் செய்து விடல்.**

இன்னாதன செய்தாரை ஒறுக்குமாறு என்னையெனின் அவர் நாணும்படியாக நல்ல நயமுடையவற்றைச் செய்துவிடுக.

## 2. வாழ்க்கைத் துணைநலம்

வாழ்க்கைத் துணைநலமாவது வாழ்க்கைக்குத் துணையாகிய மனையாளது பெண்மையிலக்கணங் கூறுதல்.

1. **மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்**

   **வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.**

   தான் பிறந்த குடிக்குத்தக்க ஒழுக்கத்தை உடையவளாய்த் தன்னைக் கொண்டவனது வருவாய்க்குத் தக்க செலவினை உடையவள் இல்வாழ்க்கைக்கு துணையாவாள்.

2. **மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை**

   **யெனைமாட்சித் தாயினு மில்.**

   குடிக்குத்தக்க ஒழுக்கம் மனையாள் மாட்டு இல்லையாகில் அவ்வில்வாழ்க்கை எத்துணை நன்மைகளை உடையதாயினும் ஒரு நன்மையும் இன்றாம்.

3. **சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்**

   **நிறைகாக்குங் காப்பே தலை.**

   மகளிரைச் சிறைசெய்து காக்குங்காவல் யாதினைச் செய்யும்? அவரது கற்புக் காக்குங் காவலே தலையான காவல்.

4. **பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்**

   **திண்மையுண் டாகப் பெறின்.**

   பெண் பிறப்புப் போல மேம்பட்டன யாவையுள? கற்பாகிய திண்மை உண்டாகப் பெறின்.

5. **புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்**

   **னேறுபோற் பீடு நடை.**

   புகழ் பொருந்தின மனையாளை இல்லாதார்க்கு இல்லையாம். தம்மை இகழ்ந்துரைப்பார் முன் ஏறு போல நடக்கும் மேம்பட்ட நடை.

6. **இல்லதெ னில்லவண் மாண்பானா லுள்ளதெ**

   **னில்லவண் மாணாக் கடை.**

   ஒருவனுக்கு மனையாள் மாட்சிமையுடையாளானால், எல்லா மிலனேயாயினும் இல்லாதது யாது? மனையாள் மாட்சிமை இல்லானானால், எல்லா முடையானாயினும் உண்டானது யாது?.

7. **தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற**

**சொற்காத்துச் சோர்விலாள் பெண்.**

தன்னையுங் காத்துத், தன்னைக் கொண்ட கணவனையும் பேணி நன்மையமைந்த புகழ்களையும் படைத்துச் சோர்வின்மையுடையவளே பெண்ணென்று சொல்லப்படுபவள்.

8. **தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்**

**பெய்யெனப் பெய்யு மழை.**

தெய்வத்தைத் தெய்வமென்று தொழாளாய் எல்லாத் தெய்வமுந் தன்கணவனென்றே கருதி அவனை நாடோறுந் தொழு தெழுமவள் பெய்யென்று சொல்ல மழை பெய்யும்.

9. **பெற்றாற்ப் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்**

**புத்தேளிர் வாழு முலகு.**

பெண்டிரானவர் தம்மை மனைவியராகப் பெற்றவரையே தமக்குத் தலைவராகப் பெறின், தேவர் வாழும் பெரிய சிறப்பினையுடைய உலகத்தைப் பெறுவர்.

10. **மங்கல மென்ப மனைமாட்சி மற்றத**

**னன்கல நன்மக்கட் பேறு.**

ஒருவனுக்கு அழகென்று சொல்லுப, மனையாள் ஒழுக்கமுடையாளாதலை அவ்வழகின் மேலே நல்ல அணிகலனென்று சொல்லுப நல்ல புதல்வரைப் பெறுதலை.

## 3. பிறனில் விழையாமை

பிறனில் விழையாமையாவது பிறனுடைய மனையாளது தோள் நலம் விரும்பாமை.

1. **அறனியலா னில்வாழ்வா னென்பான் பிறனியலாள்**

**பெண்மை நயவா தவன்.**

அறநெறியானே யில்வாழ்வானென்று சொல்லப்படுவான், பிறன்வழியானவளது பெண்மையை விரும்பாதவன்.

2. **பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதமை ஞாலத்**

**தறம்பொருள் கண்டார்க ணில்.**

பிறனுடைய பொருளாயிருப்பவளை விரும்பியொழுகுகின்ற அறியாமை உலகத்து அறமும் பொருளும் அறிந்தார்மாட்டு இல்லையாம்.

3. **அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை**

**நின்றாரிற் பேதையா ரில்.**

காமத்தின் கண்ணே நின்றார் எல்லாரினும், பிறனொருவன் கடைத்தலை பற்றி நின்றவர்களைப் போல் அறியாதாரில்லை.

4. **எனைத்துணைய ராயினு மென்னாந் தினைத்துணையுந்**

**தேரான் பிறனில் புகல்.**

எல்லாவமைதியினையும் உடையராயினும் தினையளவுந் தேராது பிறனுடைய இல்லிலே புகுதல் யாதாய்ப் பயக்குமோ?.

5. **விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரிற்**

**றீமை புரிந்தொழுகு வார்.**

தம்மைத் தெளிந்தா ரில்லின்கண்ணே தீமையைப் பொருந்தி ஒழுகுவார் மெய்யாக, செத்தாரின் வேறல்லர்.

6. **எளிதென வில்லிறப்பா னெய்துமெஞ் ஞான்றும்**

**விளியாது நிற்கும் பழி.**

தனக்கு எளிதென்று நினைத்துப் பிறனுடைய இல்லின் கண்ணே மிகுமவன் எல்லா நாளும் அழியாது நிற்கும் பழியைப் பெறுவான்.

7. **பகைபாவ மச்சம் பழியென நான்கு**

**மிகவாவா மில்லிறப்பான் கண்.**

பகையும் பாவமும் அச்சமும் பழியுமென்னும் நான்கு பொருளும் நீங்காவாம். பிறனில் கண்ணே மிகுவான் மாட்டு.

8. **பிறன்மனை நோக்கா பேராண்மை சான்றோர்க்**

**கறனொன்றோ வான்ற வொழுக்கு.**

பிறனது மனையாளைப் பாராத பெரியவாண்மை தானே, சான்றோர்க்கு அறனும் அமைந்த ஒழுக்கமாம்.

9. **நலக்குறியார் யாரெனி னாமநீர் வைப்பிற்**

**பிறற்குதியா டோடோயா தார்.**

நலத்துக்கு உரியார் யாரெனின், நினைத்ததைத் தருகின்ற நீர் சூழ்ந்த உலகத்தில் பிறனுக்கு உரியவளது தோளைத் தீண்டாதார்.

10. **அறன்வரையா னல்ல செயினும் பிறன்வரையாள்**

**பெண்மை நயவாமை நன்று.**

அறத்தை வரையாதே அறமல்லாதன செய்யினும் பிறனிடத்து ஆளானவளது பெண்மையை விரும்பாமை நன்று.

## பொருட்பால்

## 4. கேள்வி

கேள்வியாவது கேள்வியாமாறும் அதனானாகிய பயனும் கூறுதல். நூல்களைக் கற்கமாட்டாதார் அவற்றைக் கற்றார் மாட்டுக் கேட்டலும் அறிவுக்குக் காரணமாமென்பதால் இது கூறப்படுகிறது.

1. **கற்றில னாயினுங் கேட்க வ∴தொருவன்**

**ஒற்கத்துக் கூற்றாந் துணை.**

கற்கமாட்டானாயினுங் கேட்க, அக்கேள்வி ஒருவன் தளர்ச்சிக்குத் தாங்குவதொரு துணையாம்.

2. **செவிக்குண வில்லாத போழ்து சிறிது**

**வயிற்றுக்கு மீயப் படும்.**

செவிக்கு உணவாகிய கேள்வி இல்லாதபோது வயிற்றுக்கும் சிறிது உணவு கொடுக்கப்படும்.

3. **எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு**

**மான்ற பெருமை தரும்.**

எவ்வளவிற்றாயினும் நல்ல நூல்களைக் கேட்க, அக்கேள்வி அவ்வளவிற்றே ஆயினும் நிரம்பின பெருமையைத் தரும்.

4. **இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே**

**யொழுக்க முடையார்வாய்ச் சொல்.**

வழுக்குத லுண்டான விடத்து உதவும் ஊன்றுகோல் போலும் ஒழுக்கமுடையார் கூறுஞ் சொற்கள்.

5. **நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய**

**வாயி னராத லரிது.**

நுண்ணிதாகிய கேள்வியை யுடையாரல்லாதார், தாழ்ந்த சொற் கூறும் நாவுடையராதல் இல்லை.

6. **பிழைத்துணர்ந்ம் பேதமைம சொல்லா ரிழைத்துணர்ந்**

**தீண்டிய கேள்வி யவர்.**

ஒரு பொருளைத் தப்ப உணர்ந்தாலும் அறிவின்மையாயின் சொல்லார். ஆராய்ந்துணர்ந்து நிரம்பிய கேள்வியையுடையார்.

7. **செவியுணவிற் கேள்வி யுடையா ரவியுணவி**

**னான்றாரோ டொப்பர் நிலத்து.**

செவிக்கு உணவு போன்ற கேள்வியை உடையவர் நிலத்தின் கண்ணே இருப்பினும் அவியை உணவாக உடைய தேவரொடு ஒப்பர்.

8. **செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்**

**செல்வத்து ளெல்லாந் தலை.**

ஒருவற்குச் சிறப்புடைய செல்வமாவது செவியான் வருஞ்செல்வம். அச்செல்வம் பிறசெல்வங்கள் எல்லாவற்றினும் தலையாகலான்.

9. **செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்க**

**ளவியினும் வாழினு மென்.**

செவியால் நுகரும் இன்பத்தை அறியாத வாயால் நுகரும் இன்பத்தையறியும் மாக்கள் செத்தால் வருந்தீமையாது? வாழ்ந்தால் வரும் நன்மை யாது? உலகத்தார்க்கு.

**10. கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற்**

**றோட்கப் படாத செவி.**

ஓசை மாத்திரம் கேட்டனவாயினும், அதுவுங் கேளாத செவிபோலும் நல்லோர் கூறுஞ் சொற்களால் துளைக்கப்படாத செவி.

## 5. அறிவுடைமை

அறிவுடைமையாவது அறிவாவது இன்னதென்பதும் அதனாலாகிய பயனும் கூறுதல்.

1. **அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலா**

**ரென்னுடைய ரேனு மிலர்.**

அறிவினை உடையார் யாதொன்றும் இல்லாராயினும் எல்லாமுடையர். அறிவிலார் எல்லாப் பொருளும் உடையராயினும் ஒரு பொருளும் இலர்.

2. **எவ்வ துறைவ துலக முலகத்தோ**

**டவ்வ துறைவ தறிவு.**

யாதொருவற்றா லொழுகுவது உலகம் அதனோடு கூடத் தானும் அவ்வாற்றா னொழுகுதல் அறிவாவது.

3. **உலகந் தழீஇய தொட்ப மலர்தலுங்**

**கூம்பலு மில்ல தறிவு.**

ஒருவனுக்கு ஒள்ளிமையாவது உலகத்தோடு பொருந்தினது அதனை நீர்ப்பூப்போல மலர்தலுங் குவிதலுமின்றி ஒரு தன்மையாகச் செலுத்துதல் அறிவு.

4. **எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்**

**மெய்ப்பொருள் காண்ப தறிவு.**

யாதொரு பொருளை யாவர் சிலர் சொல்லக் கேட்பினும், அப்பொருளினது உண்மையை ஆராய்வது அறிவாவது.

5. **எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்**

**நுண்பொருள் காண்ப தறிவு.**

அறிதற்கரிய பொருளவாகிய சொற்களைத் தெளியப் பொருளாம்படி பிறரிசையச் சொல்லி, பிறர் சொல்லுஞ் சொற்களின் நுண்ணியவாகிய பொருள்களை அவர் சொல்லாமல் தானே காண்பது அறிவாவது.

6. **சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ**

**நன்றின்பா லுய்ப்ப தறிவு.**

உள்ளஞ் சென்ற விடத்தே உடம்பையுஞ் செல்லவிடாது, தீமையை நீக்கி, நன்மைப்பகுதியிலே செலுத்துவது அறிவாவது.

7. **அஞ்சுவ தஞ்சாமை பேதமை யஞ்சுவ**

**தஞ்ச லறிவார் தொழில்.**

அஞ்சத் தகுவதனை அஞ்சாதொழிதல் ஒருவர்க்கு அறிவின்மையாதல், அஞ்சத்தகுவதனை அஞ்சுதல் அறிவுடையார் தொழில்.

8. **அறிவுடையார் ராவ தறிவா ரறிவிலா**

**ர.்.தறி கல்லா தவர்.**

பிற்பயக்குமது அறிவார் அறிவுடையாராவார். அதனை அறியாதவர் அறிவில்லாதவராவர்.

9. **அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கு**

**முள்ளழிக்க லாகா வரண்.**

ஒருவனுக்குக் குற்றமறைக்குங் கருவியாவது அறிவு. பகைவராலும் உட்புகுந்து அழிக்கலாகா அரணும் அதுதானே.

10. **எதிரதாக் காக்கு மறிவினார்க் கில்லை**

**யதிர வருவதோர் நோய்.**

துன்பம் வருவதற்கு முன்பே வருமென்று நினைத்துக் காக்கும் அறிவுடையார்க்கு நடுங்க வருவதொரு துன்பம் இல்லை.

## 6. காலமறிதல்

1. **பகல்வெல்லுங் கூகையைக் காக்கை யிகல்வெல்லும்**

   **வேந்தர்க்கு வேண்டும் பொழுது.**

   இராப்பொழுது வெல்லுங் கூகையைக் காக்கை பகற்பொழுது வெல்லும். ஆதலான், மாறுபாட்டை வெல்லும் அரசர்க்குக் காலம் வேண்டும்.

2. **காலங் கருதி யிருப்பர் கலங்காது**

   **ஞாலங் கருது பவர்.**

   செய்யுங்காலம் வருமளவு நினைத்து அசைவின்றி இருப்பார். ஞாலத்தைக் கொள்ளக் கருதுபவர்.

3. **ஊக்க முடையா னொடுக்கம் பொருதகர்**

   **தாக்கற்குப் பேருந் தகைத்து.**

   மனமிகுதி உடையவன் காலவரவு பார்த்து ஒடுங்குதல், போரைக் கருதின தகர்வலிபெறத் தாக்குதற் பொருட்டுப் பெயர்ந் தாற்போலும்.

4. **பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம்பார்த்**

   **துள்வொப்ப ரொள்ளி யவர்.**

   கதுமென அவ்விடத்தே உடம்புவேரார், தமக்குச் செய்யலாங் காலம் வரவு பார்த்து மனமொப்பர் ஒள்ளியர்.

5. **செறுநரைக் காணிற் சுமக்க விறுவரை**

   **காணிற் கிழக்காந் தலை.**

   பகைவரைக் கண்டானாயின், தலையினாற் சுமக்க இறுமளவாகின் தலை கீழாய் விடலாம்.

6. **கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்**

   **குத்தொக்க சீர்த்த விடத்து.**

   காலம் பார்த்திருக்குமிடத்துக் கொக்குப் போல ஒடுங்கி இகழ்வின்றி இருக்க வினை செய்தற்கு வாய்த்தகாலம் வந்தவிடத்து அக்கொக்குக் குத்துமாறுபோலத் தப்பாமல் விரைந்து செல்க.

7. **எய்தற் கரிய தியைந்தக்கா லந்நிலையே**

**செய்தற் கரிய செயல்.**

பெறுதற்கு அரிய காலம் வந்தால் அப்பொழுதே தன்னாற் செய்தற்கு அரியவாகிய வினைகளைச் செய்து முடிக்க வேண்டும்.

8. **பருவத்தோ டொட்ட வொழுக றிருவினைத்**

**தீராமை யார்க்குங் கயிறு.**

காலத்தோடு பொருந்த ஒழுகுதல், செல்வத்தை நீங்காமல் கட்டுவதொரு கயிறாம்.

9. **அருவினை யென்ப வுளவோ கருவியாற்**

**கால மறிந்து செயின்.**

அரிய வினையென்று சொல்லப்படுவன உளவோ? முடிக்கலாங் கருவியோட கூடக் காலத்தை அறிந்து செய்ய வல்லாராயின்.

10. **ஞாலங் கருதினுங் கைகூடுங் காலங்**

**கருதி யிடத்தாற் செயின்.**

உலகமெல்லாம் பெறுதற்கு நினைத்தானாயினும் பெறலாம். காலத்தைக் குறித்து இடனறிந்து செய்வனாயின் மெய்யென்றது.

## 7. கண்ணோட்டம்

கண்ணோட்டமாவது கண்ணாற் காணப்பட்டாரை அருள் செய்தல்.

1. **கண்ணோட்ட மென்னுங் கழிபெருங் காரிகை**

**யுண்மையா னுண்டிவ் வுலகு.**

கண்ணோட்டமாகிய பெரிய அழகு அரசன்மாட்டு உண்டானபடியினாலே, இவ்வுலகநடையாகின்றது.

2. **ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணுங்கண் ணோடிப்**

**பொறுத்தாற்றும் பண்பே தலை.**

தம்மை யொறுத்துச் செய்யும் இயல்புடையார் மாட்டும் கண்ணோடிப் பொறுத்துச் செய்யும் குணமே தலையான குணம்.

3. **பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க**

**நாகரிகம் வேண்டு பவர்.**

நஞ்சு பெயக்கண்டும் அதனை மாற்றாது உண்டு அமைவர், எல்லாராயினும் விரும்பத்தக்க நாகரிகத்தை விரும்புவார்.

4. **கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்**

**குரிமை யுடைத்திவ் வுலகு.**

தங்கருமத்திற்கு அழிவு வராமற் கண்ணோடட வல்லவர்க்கு, இவ்வுலகம் உரிமையாதலை உடையது.

5. **கண்ணோட்டத் துள்ள துலகிய ல.ஃ.திலா**

**ருண்மை நிலக்குப் பொறை.**

உலகநடை கண்ணோட்டத்தின் கண்ணது. ஆதலால், அ.ஃ.திலார் உளராயிருத்தல் நிலத்துக்குப் பாரமாம்.

6. **கண்ணோட்ட மில்லவர் கண்ணிலர் கண்ணுடையார்**

**கண்ணோட்ட மின்மையு மில்.**

கண்ணோட்டமில்லாதவர் கண்ணிலரே. கண்ணுடையார் கண்ணோட்டமிலாராதலும் இல்லை.

7. **பண்ணென்னாம் பாடற் கியைபின்றேற் கண்ணென்னாங்**

**கண்ணோட்ட மில்லாத கண்.**

பண் என்ன பயனுடைத்தாம் பாடலோடு பொருதாயின் அதுபோல, கண் என்ன பயனுடைத்தாம். கண்ணோட்டமில்லாத காலத்து.

8. **உளபோன் முகத்தெவன் செய்யு மளவினாற்**

**கண்ணோட்ட மில்லாத கண்.**

அவரவர் வாழ்வு காரணமாகக் கண்ணோடு தலைச் செய்யாத கண்கள், முகத்தின் பண் உள்ளன போன்று இருப்பதன்றி வேறென்ன பயனைச் செய்யும்?

**9. கண்ணிற் கணிகலங் கண்ணோட்ட ம.்.தின்றேல்**

**புண்யென் றுணரப் படும்.**

கண்ணிற்கு அழகு செய்யும் அணிகலமாவது கண்ணோட்டமுடைமை. அ.்.தில்லையாயின், அவை புண்ணென்றறியப்படும்.

**10. மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ**

**டியைந்துகண் ணோடா தவர்.**

சுதைமண்ணோடு கூடச் செய்த மரப்பாவையோடு ஒப்பார். ஒருவன் கண்ணோடு தங்கண் கலந்த பின்பு கண்ணோட்டத்தைச் செய்யாதவர்.

## 8. அவைஅஞ்சாமை

அவையஞ்சாமையாவது அவையின் கண் அஞ்சாமற் சொல்லுதல்.

**1. பகையகத்துச் சாவா ரெளிய ரரிய**

**ரவையகத் தஞ்சா தவர்.**

பகையின் கண் அஞ்சாது நின்று சாவார் பெறுதற்கு எளியர். அவையின்கண் அஞ்சாது சொல்ல வல்லவர் அறிதற்கு அரியர்இ

**2. கற்றார்முற் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற**

**மிக்காருண் மிக்க கொளல்.**

தாம் கற்றதனைக் கற்றவர் முன்பு இசையச் சொல்லி, தரம் கற்றதினும் மிகக்கற்றார் மாட்டு அவர் மிகுதியாகக் கூறும் பொருளைக் கேட்டுக் கொள்ளுதல் அவையஞ்சாமையாவது.

**3. கற்றாருட் கற்றா ரெனப்படுவர் கற்றார்முற்**

**கற்ற செலச்சொல்லு வார்.**

கற்றாரெல்லாரினும் கற்றாரென்று சொல்லப்படுவார். தாம் கள்ளதனைக் கற்றார் முன்பு அவர்க்கு ஏற்கச் சொல்லவல்லார்.

**4. பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையு**

**ணன்கு செலச்சொல்லா தார்.**

பலநூல்களைக் கற்றாலும் ஒரு பயனில்லாதவரே நல்லவையின் கண் நன்றாக அவர்க்கு ஏற்கச் சொல்லமாட்டாதார்.

5. **வாளொடென் வன்கண்ண ரல்லார்க்கு நூலொடென்**

**னுண்ணவை யஞ்சு பவர்க்கு.**

வன்கண்ணரல்லாதவர்க்கு வாளினாற் பயனென்னை? அதுபோல நுண்ணிய அவையின்கண் அஞ்சுவார்க்கு நூலினாற் பயனென்ன?

6. **பகையத்துப் பேடிகை யொள்வா ளவையகத்**

**தஞ்சு மவன்கற்ற நூல்.**

பகையின் கண் அஞ்சுமவன் பிடித்த கூர்வாள் போலும். அவையின்கண் அஞ்சுமவன் கற்ற நூலும்.

7. **கல்லா தவரிற் கடையென்ப கற்றறிந்து**

**நல்லா ரவையஞ்சு வார்.**

கல்லாதவரினும் கடையரென்று சொல்லப்படுவர். உலக நூல் கற்றறிந்துவைத்தும், நல்லாரிருந்த அவையின்கண் சொல்லுதலுஞ்சுவார்.

8. **உளரெனினு மில்லாரோ டொப்பர் களனஞ்சிக்**

**கற்ற செலச்சொல்லா தார்.**

உளராயினும் செத்தாரோடு ஒப்பார். அவைக்களத்தை அஞ்சித் தாம் கற்றதனை அதற்கு இசையச் சொல்லமாட்டாதார்.

9. **ஆற்றி னளவறிந்து கற்க வவையஞ்சா**

**மாற்றங் கெடுத்தற் பொருட்டு.**

அவையஞ்சாது மறுமாற்றம் சொல்லுதற்காக, நெறிமையானே நூல்களை அளவறிந்து கற்க வேண்டும்.

10. **வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்**

**றொகையற்ந்த தூய்மை யவர்.**

தப்பினால் வருங் குற்றவகைளை அறிந்து கற்றுவல்ல அவையின்கண் அஞ்சுதலால் சோர்வுபடச் சொல்லார். சொற்களின் தொகுதியை அறிந்த தூய்மையுடையவர்.

## நாலடியார்

நானூறு வெண்பாக்கள் கொண்டது. நாலடி நானூறு என்றும் வழங்கப்படும். பல சமணமுனிவர்களால் பாடப்பட்டது. தொகுத்தவர் பதுமனார். திருக்குறளைப் போல் இதுவும் அறம், பொருள், இன்பம் எனும் முப்பாலினை எடுத்துரைக்கிறது.

### 1. அறன்வலியுறுத்தல்

1. **அகத்தாரே வாழ்வார்என் றண்ணாந்து நோக்கிப்**
**புகத்தாம் பெறாஅர் புறங்கடை பற்றி**
**மிகத்தாம் வருந்தி இருப்பாரே மேலைத்**
**தவத்தால் தவஞ்செய்யா தார்.**

முன்னைப் பிறப்பில் செய்த தவத்தால் வாய்த்த செல்வத்தினால் பின்னைப் பிறப்புக்கு நன்மையாகும் தவத்தைச் செய்து கொள்ளாதவர் 'இவ்வில்லத்து வாழ்வாரே வாழ்வார்' என்று நிமிர்ந்து பார்த்து அவ்வீட்டுள் நுழையப் பெறாதவராய் அதன் வாயிலைப் பற்றிக் கொண்டு வருந்தி நிற்பவர்.

2. **ஆவாம்நாம் ஆக்கம் நசைஇ அறம்மறந்து**
**போவாம்நாம் என்னாப் புலைநெஞ்சே – ஓவாது**
**நின்றுஞற்றி வாழ்தி எனினும்நின் வாழ்நாள்கள்**
**சென்றன செய்வ துரை.**

புல்லிய நெஞ்சமே! அழியா அறத்தை அறவே மறந்து, அழியும் செல்வத்தையே விரும்பி 'இச்செல்வத்தை அடைவோம்; இதனால் மேல்நிலைக்குப் போவேம்' என்று தொடர்ந்து பொருள் சேர்க்க முயல்கின்றாய். நீ இவ்வாறு செலவிட்ட வாழ்நாட்கள் வறிதே சென்றன. இனிவ் செய்யக் கூடிய தென்ன என்று உரைப்பாயாக!

3. **வினைப்பயன் வந்தக்கால் வெய்ய உயிரா**
**மனத்தின் அழியுமாம் பேதை – நினைத்ததனைத்**

**தொல்லைய தென்றுணர் வாரே தடுமாற்றத்**

**தெல்லை இகந்தொருவு வார்.**

முன்னைத் தீவினையின் பயன் வந்தபோது வெதும்பிப் பெரு மூச்சு விட்டுத் தன் மனம் நைவான அறிவிலி. அத்தீவினைப் பயனை நன்கு ஆராய்ந்து கொள்ளத் தக்கவர். 'முன்னை வினையின் பயன்' என்று உணர்வர். அத்தகையவர்களே பிறவி என்னும் தடுமாற்றத்தின் எல்லையை எளிதில் கடந்து இனிது தப்பிச் செல்வர்.

4. **அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தால்**

**பெரும்பயனும் ஆற்றவே கொள்க – கரும்பூர்ந்த**

**சாறுபோல் சாலவும் பின்உதவி மற்றதன்**

**கோதுபோல் போகும் உடம்பு.**

பெறுதற்கு அரிய மனித உடலைப் பெற்ற நற்பயனால் பெருமைமிக்கதாம் அறப்பயனை மிகக் கொள்வீராக. கரும்பை ஆட்டி எடுத்த சாற்றைப்போல் அறப்பயன் பிற்காலத்துக்கு மிகவும் உதவியாகும். பின்னர் அக்கரும்புச் சக்கையைப் போல் இவ்வுடலும் பயனின்றி வறிதே கழிந்து போகும்.

5. **கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்**

**துரும்பெழுந்து வேம்கால் துயராண் டுழவார்**

**வருந்தி உடம்பின் பயன்கொண்டார் கூற்றம்**

**வருங்கால் பரிவ திலர்.**

கரும்பை ஆலையில் இட்டு ஆட்டி அதன் சாற்றில் இருந்து சருக்கரைக் கட்டியை முன்னே எடுத்துக் கொண்டவர், பின்னே அக்கரும்புச் சக்கையில் தீப்பற்றி எரியும் போது அவ்விடத்துத் துன்பம் எய்தார். அதுபோல் உடலால் ஆகிய அறப்பயனை முயன்று கைக்கொண்டவர் கூற்றுவன் வரும்போது வருந்தார்.

6. **இன்றுகொல் அன்றுகொல் என்றுகொல் என்னாது**

**பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி**

**ஒருவுமின் தீயவை ஒல்லும் வகையான்**

**மருவுமின் மாண்டார் அறம்.**

‘இன்றைக்கோ’‘நாளைக்கோ’‘அன்றி என்றைக்கோ’ என்று கருதிக்கொண்டு இருக்காமல் தன் பின்னையே நிற்கின்றது கூற்று என்று கருதித் தீச்செயல்களைச் செய்யாது ஒழிக. தன்னால் இயலும் வகைகளிலெல்லாம் பெரியவர்களால் பேணிச் செய்யப்பெறும் அறச்செயல்களை மேற்கொண்டு செய்க.

7. **மக்களா லாய பெரும்பயனும் ஆயுங்கால்**
**எத்துணையும் ஆற்றப் பலவானால் - தொக்க**
**உடம்பிற்கே ஒப்புரவு செய்தொழுகா தும்பர்க்**
**கிடந்துண்ணப் பண்ணப் படும்.**

ஆராயும் போது, மக்கட் பிறப்பால் ஆகிய மிகுந்த பயன் எவ்வளவும் மிகப் பலவாகும். ஆதலால், பலவகை உறுப்புக்களின் கூட்டாக அமைந்த உடம்பிற்கே பயனாம் நன்மைகளைச் செய்து கொண்டு இருக்காமல், அவ்வுடம்பால் வானுலகிற் போய் இன்பம் நுகர்தற்காம் அறச் செயல்களை ஆய்ந்து செய்தல் வேண்டும்.

8. **உறக்கும் துணையதோர் ஆலம்வித் தீண்டி**
**இறப்ப நிழல்பயந் தாஅங் - கறப்பயனுந்**
**தான்சிறி தாயினுந் தக்கார்ப் பட்டக்கால்**
**வான்சிறிதாப் போர்த்து விடும்.**

நகத்தால் கிள்ளி எடுக்கும் அவ்வளவு மிகச்சிறிய ஆலம் வித்து முளைத்துப் பெரிதாய் வளர்ந்து மிகுந்த நிழலைத் தந்தாற்போல், நல்லறத்தால் உண்டாகும் பயனும் அதன் அளவாற் சிறிதாக இருந்தாலும் தகுதி உடையவரிடத்துப் படுதலால் வானும் சிறிதாகுமாறு விரிந்து அதனை மூடிக்கொள்ளும் அளவு பெரிதாகிவிடும்.

9. **வைகலும் வைகல் வரக்கண்டு ம.ஃ.துணரர்**
**வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்**
**வைகலும் வைகல்தம் வாழ்நாள்மேல் வைகுதல்**
**வைகலை வைத்துணரா தார்.**

நாள்தோறும் நாள் புதிது புதிதாக வருவதைக் கண்டும், அதனை உணராதவராய் நாள்தோறும் நாளை நிலைத்திருக்கும் என்று எண்ணி இன்ப

நுகர்ச்சிகளில் ஈடுபடுபவர் நாள்தோறும் நாள் கழிதலைத் தம்முடைய வாழ்நாளின் மேல்வரும் செலவு நாளாக வைத்து அந்த நாட்களைக் கழித்து அறியாதவர் ஆவர்.

10. **மான அருங்கலம் நீக்கி இரவென்னும்**

**ஈன இளிவினால் வாழ்வேன்மன் - ஈனத்தால்**

**ஊட்டியக் கண்ணும் உறுதிசேர்ந் திவ்வுடம்பு**

**நீட்டித்து நிற்கும் எனின்.**

இழிந்த செயல்களில் ஈடுபட்டு உணவு கொண்டு உண்பித்த போதும் உறுதியமைந்து இவ்வுடல் நெடிது நாள் நிற்கு மென்றால் மானம் எனப்படும் பெறுவதற்கு அரிய அணிகலத்தைக் கழற்றி எறிந்து, இரத்தல் என்னும் இழிந்த செய்கையால் கூட உயிர் வாழ்வேன். ஆனால் உடல் அவ்வாறு நிலைப்பது அன்றே.

## 2. ஈகை

1. **இல்லா இடத்தும் இயைந்த அளவினால்**

**உள்ள இடம்போல் பெரிதுவந்து – மெல்லக்**

**கொடையொடு பட்ட குணனுடைய மாந்தர்க்கு**

**அடையாவாம் ஆண்டைக் கதவு.**

பொருள் தம்மிடம் இல்லாத காலத்திலும் பொருள் உள்ள காலம்போல் தம்மால் இயன்ற அளவில் மிகவுவந்து ஆராவரம் சிறிதும் இல்லாமல் கொடுக்கும் இயல்பமைந்த ஈகையாளர்க்கு, எய்துதற்கு அரிய துறக்க உலகத்தின் வாயிற் கதவுகள் அடைக்கப்படுவது இல்லை; வரவேற்கத் திறந்தே இருக்கும்.

2. **முன்னரே சாநாள் முனிதக்க மூப்புள**

**பின்னரும் பீடழிக்கும் நோயுள – கொன்னே**

**பரவன்மின் பற்றன்மின் பாத்துண்மின் யாதுங்**

**கரவன்மின் கைத்துண்டாம் போழ்து.**

வெறுக்கத்தக்க முதுமைப் பருவமும், நம் கண் முன்னரே சாவும் நாளும் உள; மேலும் தம்பெருமை வலிமை முதலியவற்றை அழிக்க வல்ல நோய்களும் உள; ஆதலால், கையில் உள்ளபோது வீணே அதனைப் பெருக்க அலையாதீர்; இறுக்கிப் பிடிக்காதீர்; பகுத்துத் தந்து உண்பீர்; எதனையும் ஈயாது மறைத்து வைக்காதீர்.

3. **நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார்**
**கொடுத்துத்தாம் துய்ப்பினும் ஈண்டுங்கால் ஈண்டும்**
**இடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம்**
**விடுக்கும் வினையுலந்தக் கால்.**

பிறருக்குத் தந்து தானும் நுகர்ந்தாலும் செல்வம் பெருகும் காலத்தில் பெருக்கமுற்றே தீரும். ஈயாது எவ்வளவு இறுக்கிப் பிடித்துக் கொண்டாலும் நல்வினை தீர்ந்தபோது செல்வம் தன்னைவிட்டு நீங்கியே போகும். இவ்வாறாக, வறுமையால் நடுங்கித் தன்னை இரந்தவர் துயரை நீக்காதவனாக இருப்பது ஏன்?

4. **இம்மி அரிசித் துணையானும் வைகலும்**
**நும்மில் இயைவ கொடுத்துண்மின் - உம்மைக்**
**கொடாஅ தவரென்பர் குண்டுநீர் வையத்து**
**அடாஅ அடுப்பி னவர்.**

மிகச் சிறிய புல்லரிசி அளவே ஆயினும் நாள்தோறும் உங்களுக்குக் கூடுவதைப் பிறர்க்குக் கொடுத்து அதன்பின் உண்பீராக. ஆழ்ந்த நீர் நிரம்பிய கடல் சூழ்ந்த உலகில் உள்ள சமைத்தலை அறியாத அடுப்பை உடைய வறியவர், முற்பிறப்பில் பிறர்க்குக் கொடுத்துண்ணாதவர் என்று அறிந்தோர் கூறுவர்.

5. **மறுமையும் இம்மையும் நோக்கி ஒருவற்கு**
**உறுமா றியைவ கொடுத்தல் - வறுமையால்**
**ஈதல் இசையா தெனினும் இரவாமை**
**ஈதல் இரட்டி யுறும்.**

இப்பிறப்பில் வரும் புகழையும் மறுமையில் உண்டாகும் வீடு பேற்றையும் நோக்கி ஒருவர்க்குத் தம்மால் இயலுவதைத் தரவேண்டும். தம் வறுமையால் அவ்வாறு

தர இயலாது என்றாலும், தாம் பிறரிடம் சென்று ஒன்றை இரந்து வாங்காமல் இருப்பது ஈவதைக் காட்டிலும் இருமடங்கு பெருமை தரும்.

6. **நடுவூருள் வேதிகை சுற்றுக்கோட் புக்க**

**படுபனை அன்னர் பலர்நச்ச வாழ்வார்**

**குடிகொழுத்தக் கண்ணுங் கொடுத்துண்ணப மாக்கள்**

**இடுகாட்டுள் ஏற்றைப் பனை.**

பலரும் விரும்புமாறு ஈகைத் தன்மையுடன் வாழ்பவர் ஊர் நடுவே அமைந்த பொது மன்றத்தினால் சூழப்பெற்ற பயன்தரும் பெண் பனையைப் போல்வர். தம் குடும்பம் செல்வத்தால் செழிப்புற்ற போதும் பிறருக்குக் கொடுத்துண்ணாதவர், இடுகாட்டில் உள்ள காய்க்காத ஆண் பனைக்கு ஒப்பானவர்.

7. **பெயற்பான் மழைபெய்யாக் கண்ணும் உலகம்**

**செயற்பால செய்யா விடினும் - கயற்புலால்**

**புன்னை கடியும் பொருகடல் தண்சேர்ப்ப!**

**என்னை உலகுய்யும் ஆறு.**

மீனின் புலால் நாற்றத்தைப் புன்னைப் பூவின் நறுமணம் நீக்கும் அலைமோதும் குளிர்ந்த கடற்கரைத் தலைவனே, பெய்ய வேண்டிய பருவ காலத்தில் மழை பெய்யத் தவறினாலும், உயர்ந்த பெரியவர்கள் தாம் செய்ய வேண்டியதைச் செய்யத் தவறினாலும் இவ்வுலகம் எவ்வாறு பிழைக்கும்?

8. **ஏற்றகை மாற்றாமை என்னானும் தாம்வரையாது**

**ஆற்றாதார்க் கீவதாம் ஆண்கடன் - ஆற்றின்**

**மலிகடல் தண்சேர்ப்ப! மாறீவார்க் கீதல்**

**பொலிகடன் என்னும் பெயர்த்து.**

வளம் மலிந்த குளிர்ந்த கடற்கரைத் தலைவனே, தாம் ஒரு வரையறை செய்யாதவராகத் திருப்பித் தரும் ஆற்றல் இல்லாதவர்க்கு அவர்கள் இரந்த கையில் மறுக்காமல் எவ்வளவேனும் வழங்குதல் முயற்சியாளர் கடமை; அவ்வாறு

கொடுக்குங்கால் திருப்பித் தருவார்க்குக் கொடுத்தல் ‘வளர்கடன்’ என்னும் பெயர்பெறும்.

9. **இறப்பச் சிறிதென்னா தில்லென்னா தென்றும்**

**அறப்பயன் யார்மாட்டுஞ் செய்க – முறைப்புதவீன்**

**ஐயம் புகூஉந் தவசி கடிஞைபோற்**

**பைய நிறைத்து விடும்.**

தம்பொருளை மிகச் சிறியது என்று கருதாதும் ‘இல்லை’ என்று சொல்லாதும் எந்நாளும் பயன்படும் ஈகையை எவரிடத்தும் செய்க. அவ்வாறு செய்யின், முறை முறையே மனையின் வாயில்தோறும் பிச்சை எடுக்கும் துறவியின் உண்கலம் மெதுவாக நிரம்புவது போல் அறத்தின் பயனை அச்செயல் மெதுவாக நிரப்பிவிடும்.

10. **கடிப்பிடு கண்முரசம் காதத்தோர் கேட்பர்**

**இடித்து முழங்கியதோர் யோசனையோர் கேட்பர்**

**அடுக்கிய மூவுலகும் கேட்குமே சான்றோர்**

**கொடுத்தா ரெனப்படும் சொல்.**

குநற்தடியால் அறையப்படும் கண்ணையுடைய முரசின் ஒலியைக் ‘காத’ தொலைவில் உள்ளோரே கேட்பர்; முகில் இடித்து முழங்கிய ஒலியை ‘யோசனை’ என்னும் தொலைவில் உள்ளோரே கேட்பர்; ‘இவர் கொடுத்தார்’ என்று உயர்ந்தோரால் சொல்லப்படும் சொல், அடுக்காக அமைந்த மூவுலகிலுள்ளோர்க்கும் கேட்கும்.

## நாண்மணிக்கடிகை

106 வெண்பாக்கள் உள்ளன. நான்கு மணிகள் பதித்த நகை என்பது நான்மணிக்கடிகை என்பதற்கு பொருள். ஆசிரியர் விளம்பிநாகனார்.பொருளும் நடையும் எளிமையாக அமைந்த நூலாகும்.

1. **கள்ளி வயிற்றி னகில்பிறக்கு மான்வயிற்றின்**

**ஒள்ளரி தாரம் பிறக்கும் பெருங்கடலுள்**

**பல்விலைய முத்தம் பிறக்கு மறிவார்யார்**

**நல்லாள் பிறக்குங் குடி.**

நறுமணமிக்க அகில் கள்ளிச் செடியில் தோன்றும்; ஒளியுடைய அரிதாரம் மானின் வயிற்றில் தோன்றும்; மிகுவிலையுடைய முத்து பெரிய உவர்க்கடலில் தோன்றும்; நன்மக்கள் பிறக்கும் குடியை எவரே அறிவார்.

2. **கற்றார்முற் றோன்றா கழிவிரக்கங் காதலித்தொன்**

**றுற்றார்முற் றோன்றா வுறாமுதல் - தெற்றென**

**அல்ல புரிந்தார்க் கறற்தோன்றா வெல்லாம்**

**வெகுண்டார்முற் றோன்றாக் கெடும்.**

இழந்துவிட்ட ஒன்றற்கு வருந்துதல் கற்றவர்க்கு இல்லை; ஒன்றைப் பெற்றாக வேண்டும் என்று அயராது முயல்வார்க்கு அது கிட்டவில்லை என்பது தோன்றாது. தெளிவாக அறிந்தே தீமை செய்பவர்க்கு அறம் தோன்றாது. பெருஞ்சினம் கொண்டவர்க்கு எந்நலமும் இல்லாது கெடும்.

3. **கன்றாமை வேண்டுங் கடிய பிறர்செய்த**

**நன்றியை நன்றாக் கொளல்வேண்டு – மென்றும்**

**விடல்வேண்டுந் தங்கண் வெகுளி யடல்வேண்டும்**

**ஆக்கஞ் சிதைக்கும் வினை.**

பிறர் செய்த கொடியவற்றை எண்ணி வருந்தாது இருத்தல் வேண்டும்; நன்மை செய்தாரின் செயலை நயமிக்கதாகக் கொள்ள வேண்டும். எப்பொழுதும் தம்மிடத்துச் சினம் உண்டாகாதவாறு காத்துக் கொள்ள வேண்டும். நல்லவற்றை அழிக்கும் செயல் உண்டாகாவாறு தடுக்க வேண்டும்.

4. **இன்னாமை வேண்டி னிரவெழுக – விந்நிலத்து**

**மன்னுதல் வேண்டி னிசைநடுக – தன்னொடு**

**செல்வது வேண்டி னறஞ்செய்க – வெல்வது**

**வேண்டின் வெகுளி விடல்.**

இழிவை விரும்பினால் இரத்தலைக் கொள்வாராக; அழியாத நிலைபேற்றை விரும்பினால் புகழை நிலைபெறச் செய்வாராக; இறப்பின் பின்னரும் தன்னோடு வருவதை விரும்பினால் அறம் செய்வாராக எடுத்த எண்ணம் வெற்றி பெற வேண்டினால் வெகுளியை விடுவாராக.

5. **புகழ்செய்யும் பொய்யா விளக்க – மிகந்தொருவர்ப்**

**பேணாது செய்வது பேதமை – காணாக்**

**குருடனாச் செய்வது மம்ம – ரிருடீர்ந்த**

**கண்ணராச் செய்வது கற்பு.**

பொய் கூறாமை என்னும் விளக்கு புகழ் உண்டாகும்; எவரையும் மதியாமை அறிவின்மையை ஆக்கும்; கற்றறியா மயக்கம், குருடாக்கி விடும்; கல்வி, ஒளியுடைய கண்ணராக ஆக்கும்.

6. **அலைப்பான் பிறவுயிரை யாக்கலுங் குற்றம்**

**விலைப்பாலிற் கொண்டுன் மிசைதலுங் குற்றம்**

**சொலற்பால வல்லாத சொல்லுதலுங் குற்றம்**

**கொலைப்பாலுங் குற்றமே யாம்.**

எல்லாவற்றையும் அறிந்தவனும் இல்லை; எவற்றையும் அறியாதவனும் இல்லை; குணமே இல்லாமல் குற்றமே உடையானும் இல்லை; கற்க வேண்டும் எல்லாமும் முழுதுறக் கற்றானும் இல்லை.

7. **சிறந்தார்க் கரியசெ றுதலெஞ் ஞான்றும்**

**பிறந்தார்க் கரிய துணைதுறந்து வாழ்தல்**

**வரைந்தார்க் கரிய வகுத்தூ ணிரந்தார்க்கொன்**

**றில்லென்றல் யார்க்கு மரிது.**

சிறந்த இயல்பினர்க்குக் கூடிய நண்பரைச் சினந்தொதுக்க முடியாது. உடன் பிறந்தார்க்கு அவரைப் பிரிந்து வாழ்தல் முடியாது.அளவுடன் ஆக்கி உண்பவர்க்குப் பகுத்தளித்து உண்ணுதல் முடியாது; இரந்து கேட்பவர்க்கு இல்லை என்ன இரக்கமுடையவர்க்கு முடியாது.

8. **ஊனுண் டுழுவைநிறம் பெறூஉ நீர்நிலத்துப்**

**புல்லினா னின்புறூஉங் காலேயம் - நெல்லின்**

**அரிசியா னின்புறூஉங் கீழெல்லாற் தத்தம்**

**வரிசையா னினிபுறூஉ மேல்.**

ஊனை உண்ணுதலால் புலி வலிமை பெறும். நீர்வளம் அமைந்த நிலத்தில் முளைத்த புல்லைத் தின்னுதலால், கால் நடைகள் நலம் பெறும்; நெல்லரிசிச் சோறு உண்ண வாய்த்தால் வறுமைக் குடியர் மகிழ்வர்; தங்களுக்குக் கிடைக்க வேண்டிய மதிப்புக் கிடைத்தலால் மேலோர் மகிழ்வர்.

9. **நலனு மிளமையு நல்குரவின் கீழ்ச்சாம்**

**குலனுங் குடிமையுங் கல்லாமைக் கீழ்ச்சாம்**

**வளமில் குளத்தின்கீழ் நெற்சாம் - பரமல்லாப்**

**பண்டத்தின் கீழ்ச்சாம் பகடு.**

வறுமை வந்தெய்தினால் அழகும் இளமையும் கெடும்; கல்லாமையால் ஒருவர் பிறந்த இனமும் குடிமையும் கெடும்; நீர்வளமற்ற குளத்தைச் சார்ந்த நெல் முதலாம் பயிர் கெடும். அளவிறந்த பண்டத்தின் சுமையால் எருது கெடும்.

10. **ஒன்றூக்கல் பெண்டிர் தொழினலம் - என்றும்**

**நன்றூக்கல் அந்தண ருள்ளம் பிறனாளும்**

**நாடூக்கல் மன்னர் தொழினலம் - கேடூக்கல்**

**கேளி ரொரீஇ விடல்.**

பெண்களின் தொழிற் சிறப்பு எடுத்த ஒன்றை ஒருமுகப் பட்டுச் செய்து முடித்தலாம்; எந்நாடும் நல்லவற்றையே செய்தல் அருளாளர் உள்ளமாம்; பிறிதொருவன் ஆளும் நாட்டு மக்கள் உயர்வாகப் போற்ற ஆளுதல் ஆட்சிச் சிறப்பாம்; உறவினரை ஒதுக்கி விடுதல் கேட்டுக்கு வழியாக்கலாம்.

# இனியவை நாற்பது

41 பாக்கள் கொண்டது. கடவுள் வாழ்த்தில் சிவன், திருமால், நான்முகன் மூவரும் வணங்கப்படுகின்றனர். இவையிவை இனியவை என நாற்பது பாடல்களில் எடுத்துரைக்கப்படுகிறது. ஆசிரியர் பூதஞ்சேந்தனார்.

1. **பிச்சைபுக் காயினுங் கற்றன் மிகவினிதே**
**நற்சவையிற் கைக்கொடுத்தல் சாலவு முன்னினிதே**
**முத்தேர் முறுவலார் சொல்லினி தாங்கினிதே**
**தெற்றவு மேலாயார்ச் சேர்வு.**

பிச்சை எடுத்துண்ணும் வறுமையிலும் கற்றல் இனிது; கல்வி வல்லார் அவையம் சென்று அவர்களோடு அளவளாவி வாழ்தல் இனிது; நன்முத்துப் போன்ற மனைவியின் சொற்கேட்டு வாழ்வது இனிது; தெளிந்த சான்றோரைச் சேர்ந்து வாழ்தல் இனிது.

2. **யானை யுடைய படைகாண்டன் முன்னினிதே**
**யூனைத்தின் றூனைப் பெருக்காமை முன்னினிதே**
**கான்யாற் றடைகரை யூரினி தாங்கினிதே**
**மான முடையார் மதிப்பு.**

யானைப் படையுடையவனாக வேந்தன் இருப்பது இனிது; ஒன்றன் ஊனுண்டு தன் ஊனைப் பெருக்காமை இனிது. வளமான காடமைந்த ஆற்றங்கரையில் அமைந்த குடியிருப்பு இனிது. பெருமை மிக்கவாகளால் பெருமையுடையவனாக மதிக்கப்படுதல் இனிது.

3. **ஊரும் கலிமா வுரனுடைமை முன்னினிதே**
**தார்புனை மன்னர் தமக்குற்ற வெஞ்சமத்துக்**
**கார்வரை யானைக் கதங்காண்டன் முன்னினிதே**
**ஆர்வமுடையவ ராற்றவு நல்லவை**
**பேதுறார் கேட்ட லினிது.**

ஊர்தியாகச் செலுத்தும் குதிரை வலிமையாக இருத்தல் இனிது; நாடாளும் மன்னர்க்கு உண்டாய போர்க்களத்தில் எதிரிட்டு மோதவரும் யானையைக் கண்டு மோதுதல் இனிது; ஆர்வமிக்கவராய் மிகச் சிறந்த செய்திகளை மயக்கமில்லாமல் கேட்டுப் பயன் கொள்வது இனிது.

4. **கற்றார்முற் கல்வி றுரைத்தன் மிகவினிதே**

**மிக்காரைச் சேர்தன் மிகமாண முன்னினிதே**

**எட்டுணை யானு மிரவாது தானீத**

**லெத்துணையு மாற்ற வினிது.**

கல்வி வல்லார் முன்னர்க் கற்ற உரைத்தல் இனிது. பண்பாலும் அறிவாலும் மிகுந்தவரைச் சார்ந்திருத்தல் இனிது. எள்ளளவேனும் எவரிடமும் எதிர்பாராது, எதிர்பார்ப்பவர்க்கு இல்லை என்னாது ஈவது எல்லா வகைகளிலும் இனிது.

5. **வெல்வது வேண்டிவெகுளாதா னோன்பினிதே**

**ஒல்லுந் துணையுமொன் றுய்ப்பான் பொறையினிதே**

**இல்லது காமுற் றிரங்கி யிடர்ப்படார்**

**செய்வது செய்த லினிது.**

எடுத்த செயலின் வெற்றியை எண்ணிச் சினம் கொள்ளா உறுதி இனிது; தன்னால் கூடுமளவும் பொறுத்து அதனை முற்ற முடிப்பான் பொறுமை இனிது; தம்மிடம் இல்லாததை விரும்பி இடர்ப்பாடு கொள்ளாது செய்யக் கூடியவற்றைச் செய்து வாழ்தல் இனிது.

## இன்னா நாற்பது

நூலாசிரியர் கபிலர். மக்களுக்கு துன்பம் தரும் செயல்கள் இவையென நாற்பது வெண்பாக்களில் கூறும் நூல். பண்டைத் தமிழரின் பழக்கவழக்கங்களையும் நம்பிக்கைகளையும் இந்நூலில் காணமுடிகிறது.

1. **பார்பாரிற் கோழியு நாயும் புகலின்னா**

**ஆர்த்த மனைவி யடங்காமை நன்கின்னா**

**பாத்தில் புடைவை யுடையின்னா வாங்கின்னா**

**காப்பாற்றா வேந்த னுலகு.**

பார்பாருடைய மனையில் கோழியும் நாயும் நுழைதல் துன்பமாம். கலியாணஞ் செய்து கொண்ட மனையாள் அடங்கி நடவாமை மிகவுந் துன்பமாம். பகுப்பு இல்லாத புடைவையை உடுத்தல் துன்பமாம். அவ்வாறே நாடு துன்பமாம்.

2. **பகல்போலு நெஞ்சத்தார் பண்பின்மை யின்னா**

**நகையாய நண்பினார் நாரின்மை யின்னா**

**இகலி னெழுந்தவ ரோட்டின்னா வின்னா**

**நயமின் மனத்தவர் நட்பு.**

ஞாயிறு போல மனமுடையார் பண்பில்லாதிருந்தல் துன்பமாம். நகுதலையுடைய நட்பாளர் அன்பிலாதிருத்தல் துன்பமாம். போரின்கண் ஏற்றெழுந்தவர் புறங்காட்டி ஓடுதல் துன்பமாம். நீதியில்லாத நெஞ்சினையுடையாரது கேண்மை துன்பமாம்.

3. **வணரொலி யைம்பாலார் வஞ்சித்த லின்னா**

**துணர்தூங்கு மாவின் படுபழ மின்னா**

**புணர்பாவை யன்னார் பிரிவின்னா வின்னா**

**உணர்வா ருணராக் கடை.**

குழற்சியையுடைய தழைத்த கூந்தலையுடைய மகளிர், வஞ்சித்தொழுகுல் துன்பமாம். கொத்தாக தொங்குகின்ற மாவினது நைந்து விழுந்த கனி துன்பமாம். வேற்றுமையின்றிப் பொருந்திய பாவை போலும் மகளிரது பிரிவு துன்பமாம். அறியுந் தன்மையார் அறியாவிடத்துத் துன்பமாம்.

4. **உரனுடையா னுள்ள மடிந்திருத்த லின்னா**

**மறனுடைய யாளுடையான் மார்பார்த்த லின்னா**

**சுரமரிய கானஞ் செலவின்னா வின்னா**

**மனவறி யாளர் தொடர்பு.**

திண்ணிய அறிவுடையவன் உள்ளம் மடிந்து இருத்தல் துன்பமாம். வீரமுடைய ஆட்களை உடையான் மார்பு தட்டுதல் துன்பமாம். அருநெறியாகிய இயங்குதற்கரிய காட்டின் கண் செல்லுதல் துன்பமாம். மனவறுமை உடையாரது சேர்க்கை துன்பமாம்.

5. **யானையின் மன்னரைக் காண்ட லின்னா**
**ஊனைத்தின் றூனைப் பெருக்குதல் முன்னின்னா**
**தேனெய் புளிப்பிற் சுவையின்னா வாங்கின்னா**
**கான்யா றிடையிட்ட வூர்.**

யானைப் படையில்லாப மன்னரைப் பார்த்தல் மிகவுந் துன்பமாம். ஊனைத் தின்று ஊனை வளர்த்தல் மிகவுந் துன்பமாம். தேனும் நெய்யும் புளித்துவிட்டால் சுவை துன்பமாம். அவ்வாறே காட்டாறு இடை இட்ட இடையிலே உளதாகிய ஊரானது துன்பம்.

## வினாக்கள்

1. வான்சிறப்பு கூறும் மழையின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்க
2. புறங்கூறாமையின் சிறப்பை கூறுக.
3. வாழ்க்கைத் துணையின் சிறப்பியல்புகளை விளக்குக.
4. கேள்விச் செல்வத்தின் சிறப்பை திருக்குறள் வழிநின்று விளக்குக.
5. காலம் அறிந்து செயலாற்றுதலின் முக்கியத்துவத்தை வள்ளுவர் வழியில் ஆராய்க.
6. ஈகையின் சிறப்பை நாலடியார் வழி விளக்குக.
7. அறன் வலியுறுத்தலில் கூறும் அறக்கருத்துக்களைத் தொகுத்துரைக்க.
8. நான்மணிக்கடிகை எடுத்துரைக்கும் அறங்களைக் கூறுக.
9. வாழ்விற்கு இனியவையாக இனியவை நாற்பது எடுத்துரைக்கும் அறங்களை விளக்குக.
10. துன்பம் தரும் செயல்களாக இன்னா நாற்பது கூறும் செயல்களை கூறுக.

## அலகு – 3

## திரிகடுகம்

சுக்கு, மிளகு, திப்பிலி மூன்றும் கலந்த திரிகடுகட உடல் நோய்க்கு மருந்து; அதுபோல் உள்ளத்து நோய் போக்கும் மூன்று கருத்துக்களைக் கொண்டு ஒவ்வொரு செய்யுளம் அமைவதால் திரிகடுகம் எனப் பெயர் பெற்றது. ஆசிரியர் நல்லாதனார். 101 பாடல்கள் கொண்டது.

1. **பிறர்தன்னைப் பேணுங்கா னாணலும் பேணார்**
   **திறன்வேறு கூறிற் பொறையும் - அறவினையைக்**
   **காராண்மை போல வொழுகலு மிம்மூன்றும்**
   **ஊராண்மை யென்னுஞ் செருக்கு.**

தன்னை பிறர் நன்கு மதிக்குமிடத்து தான் அதற்கு நாணுதலும் மதியாராய் தன்தகுதியை வேறுபட இழிதுக் கூறில் அதனைப் பொறுத்தலும் அறமாகிய நற்செய்கையை மழையானது ஆளுந்தன்மையைப் போல வளர்த்து ஒழுகலும் ஆகிய இம்மூன்றும் ஊரை ஆளுந்தன்மை என்று சொல்லுகின்ற செல்வங்களாகும்.

2. **ஆசை பிறன்கட் படுதலும் பாசம்**
   **பசிப்ப மடியைக் கொளலுங் - கதித்தொருவன்**
   **கல்லானென் றெள்ளப் படுதலு மிம்மூன்றும்**
   **எல்லார்க்கு மின்னா தன.**

பிறன்பொருண்மேல் ஆசைப்படுதலும் சுற்றத்தார் பசித்திருக்குமாறு சோம்பலைக் கோடலும் வெகுண்டு ஒருவனால் கல்லாதவன் என்று இகழப்படுதலும் இந்த மூன்றும் எல்லோருக்கும் துன்பம் பயப்பனவாம்.

3. **வைததனை யின்சொல்லாக் கொள்வானு நெய்பெய்த**
   **சோறென்று கூழை மதிப்பானும் - ஊறிய**
   **கைப்பதனைக் கட்டியென் றுண்பானு மிம்மூவர்**
   **மெய்ப்பொருள் கண்டுவாழ் வார்.**

பிறர் வைத வசைமொழியை இனிமைபயக்கும் சொல்லாக உள்ளத்க் கொள்வானும் புல்லரிசிக் கூழை நெய் வார்த்த சோறு என்று கருதியுண்பவனும் மிக்க கைப்புடைய பொருளை இனிப்புடைய வெல்லக்கட்டி எனக் கருதி உண்பவனும் இந்த மூவரும் உண்மைப் பொருளை உணர்ந்து வாழ்பவராவார்.

4. **உப்பின் பெருங்குப்பை நீர்படியி னில்லாகும்**
**நட்பின் கொழுமுனை பொய்வழங்கி னில்லாகும்**
**செப்ப முடையார் மழையனைய ரிம்மூன்றும்**
**செப்ப நெறிதூரா வாறு.**

உப்பினது பெரிய குவியல் நீர் கலந்தால் இல்லையாகும். நட்பின் செழிய முனை பொய் கூறின் இல்லையாகும். நடுநிலையுடையர் மழையை ஒப்பர். இந்த மூன்றும் நல்நெறி அடையாமைக்கு ஏதுவானதாகும்.

5. **ஈதற்குச் செய்க பொருளை யறநெறி**
**சேர்தற்குச் செய்க பெருநூலை யாதும்**
**அருள்புரிந்து சொல்லுக சொல்லையிம் மூன்றும்**
**இருளுலகம் சேராத வாறு.**

பிறர்க்கு ஈதற்பொருட்டு பொருளை ஈட்டுக. அறவழியை அடைவதற் பொருட்டு பெரிய நூற்பொருள்களைக் கற்க. எத்துணையும் அருளை விரும்பி நல்ல சொற்களைக் கூறுக. இந்த மூன்றும் இருள் உலகத்தின் கண் அடையாத வழிகள்.

## சிறுபஞ்சமூலம்

இது ஒரு சமண நூல். இயற்றியவர் காரியாசான். ‘அம்மை’ என்று தொல்காப்பியம் குறிப்பிடும் வனப்பில் அடங்கும் நூல் சிறுபஞ்சமூலம். கடவுள் வாழ்த்து, பாயிரம் நீங்கலாக 102 பாக்கள் கொண்டது. சிறுவழுதுணை வேர், நெருஞ்சி வேர், சிறுமல்லிவேர், பெருமல்லி வேர், கண்டங்கத்திரிவேர் ஆகிய ஐந்து வேர்கள் கலந்த சிறுபஞ்ச மூலம் நோய் தீர்க்கும். இந்நூலின் ஐந்து கருத்துக்களும் உள்ளத்து நோய் தீர்க்கும்.

1. **சிலம்பிக்குத் தன்சினை கூற்றநீள் கோடு**

**விலங்கிற்குக் கூற்ற மயிர்தான் - வலம்படா**

**மாவிற்குக் கூற்றமா ஞெண்டிற்குத் தன்பார்ப்பு**

**நாவிற்கு நன்றல வசை**

சிலம்பிக்குத் தன் முட்டை சாக்காட்டைக் கொடுக்குமாதலாற் கூற்றமாம். நீண்டதங் கொம்புகள் துன்பங் கொடுக்குமாதலால் விலங்கிற்கும் அவையே கூற்றமாம். வென்றியில்லா கவரிமாவிற்குச் சாக்காட்டைக் கொடுக்குமாதலால் அதற்குத் தன் மயிரே கூற்றமாம். ஞெண்டிற்குச் சாக்காட்டைக் கொடுக்குமாதலால் அதற்குத் தன் பார்ப்பே கூற்றமாம். ஒருவனது நாவிற்குப் பழியைக் கொடுக்குமாதலாற் பிறரை நன்றல்லாத வசை சொல்லுதல் கூற்றமாம்.

2. **பெருங்குணத்தார்ச் சேர்மின் பிறன்பொருள் வௌவன்மின்**

**கருங்குணத்தார் கேண்மை கழிமி – னொருங்குணர்ந்து**

**தீச்சொல்லே காமின் வருங்காலன் றிண்ணிதே**

**வாய்ச்சொல்யே யன்று வழக்கு**

பெருங்குணத்தாரைச் சென்றடைமின், பிறன் பொருளைக் கொள்ளன்மின் தீக்குணத்தாரோடு நட்பை விடுமின், எல்லாமுணர்ந்து பிறரைச் சொல்லுற் தீச்சொற்களைச் சொல்லாது காமின், காலன் வருகையுண்மையே, யாம் சொல்லுகின்ற எம்முடைய சொல் மாத்திரையே அன்று உலகின் கண் வழங்கி வருகின்ற வழக்காகக் கொள்க.

3. **நகைகொல்லார் நச்சியார்க் கொன்றுங் கிளைஞர்**

**மிசைகொல்லார் வேளாண்மை கொல்லா – ரிசைகொல்லார்**

**பொன்பெறும் பூஞ்சுணங்கின் மென்முலையாய்! நன்குணர்ந்தார்**

**என்பெறினுங் கொல்லா ரியைந்து**

தம்மை நச்சியாருடைய நசையை யெஞ்ஞான்றுங் கொல்லார், தங்கிளைஞர் மிசையும் மிசையைக் கொல்லார், உபகாரத்தைக் கொல்லார், புகழைக் கொல்லார்,

பொன்போலும் பூஞ்சுணங்கின் மென் முலையாய்! மிகவுமுணர்ந்தா ரெல்லாவின்பமும் பெற்றாராயினும் பிறிதோருயிரை மேவிக்கொல்லார்.

4. **காடுபோற் கட்கினிய வில்லம் பிறர்பொரு**

**ளோடுபோற் றாரம் பிறந்ததா – யூடுபோய்க்**

**கோத்தின்னா சொல்லானாய்க் கொல்லானேற் பல்லவ**

**ரோத்தினா லென்ன குறை**

பிறருடைய கண்ணுக்கினிய வில்லத்தைக் காடு போலக் கொண்டு விரும்பாது, பிறருடைய பொருளை ஓடு போலக் கொண்டு விரும்பாது, பிறர் மனையாளைத் தான் பிறந்த தாயாகக் கொண்டு விரும்பாது, பிறரூடு போய்க் கோத்தினாதவற்றைச் சொல்லாது, ஒருயிரையுங் கொல்லானாயில்லார் பலருஞ் சொல்லிய நூல்களாற் காரிய மென்மையவற்கு?.

5. **இன்சொலா னாகுங் கிளைமை யியல்பில்லா**

**வன்சொல்லி னாகும் பகைமைமன் - மென்சொல்லி**

**னேய்வில்லா வாரருளா மவ்வரு ணன்மனத்தான்**

**வீவில்லா வீடாய் விடும்**

ஒருவன் சொல்லும உறுதியாகிய சொல்லினாற் சுற்றமுள்ளதாகும், குணமில்லா கடுஞ்சொற்களாற் பகைகளுளவாம். பிறர்க்குச் சொல்லும் மெல்லிய சொல்லினாற் றளர்வில்லா அருள் உளதாம், அவ்வருமளாவதொருவன் மன நன்மையால் கேடில்லாத வீடாய் விடும்.

## ஏலாதி

ஏலாதியின் ஆசிரியர் கணிமேதாவியார். பாடல்களின் எண்ணிக்கை 80. சமணசமயத்தவர்.பதிணென்கீழ்க் கணக்கு நூல்களில் மிகுதியான வடசொற்கள் கொண்ட நூல் இதுவாகும்.

1. **அவாவறுக்க லுற்றான் றளரானவ் வைந்தின்**

**அவாவறுப்பி னாற்ற வமையும் - அவாவறான்**

**ஆகு மவனாயி னைங்களிற்றி னாட்டுண்டு**

**போகும் புழையுட் புலந்து**

மனத்தின்கண் நாவாவினை அறுப்பான் தொடங்கியவன் அந்நாவின்றியே நிற்கும். பொறி புலனாகிய நிலங்களாலே மெய்ப்பொருள் மேம்படலென ஐவகைப்பட்ட பொருட்கட் செல்லு மவாவினை மிகவு மறுப்பனெல்லாக் குணங்களாலு மிகவகைவுடையனாமன்றி யவாவறா தொழியுமாயி னைம்பொறி யென்னுங் களிற்றா லைப்புண்டு நரக வாயிலுட்டுன்பமுற்றுச் செல்லும்.

2. **குணநோக்கான் கூழ்நோக்கான் கோலமு நோக்கான்**

**மணநோக்கான் மங்கலமு நோக்கான் - கணநோக்கான்**

**கால்காப்பு வேண்டான் பெரியார்நூல் காலற்கு**

**வாய்காப்புக் கோடல் வனப்பு**

குணமுடையான் என்று பாரான், செல்வமுடையான் என்று பாரான், தோற்றப் பொலிவுடையான் என்று பாரான், கலியாணஞ்செய்ய நின்றானென்று பாரான், புண்ணியஞ் செய்ய நின்றான் என்று பாரான், சுற்றமுடையானென்று பாரான், ஆதலால் தன்னர்க்குத் துணையாகிய மனை வாழ்க்கையை வேண்டானாய்ப் பெரியோராற் செய்யப்பட்ட ஆகமத்தைக் காலற்கு வாய்ப்பாகக் கோடல் ஒருவற் கழகாவது.

3. **எழுத்தினா னீங்காதெண் ணாலொழியா தேத்தி**

**வழுத்தினான் மாறாது மாண்ட – ஒழுக்கினால்**

**நேராமை சால வுணர்வார் பெருந்தவம்**

**போகாமை சாலப் புலை**

இறப்பும் பிறப்புமாகிய துன்பம் கல்வியறிவு வினளவே நீங்காது, தியான அளவிலே நீங்காது, துதிக்குந் தோத்திரத்தினாலும் நீங்காது, இவை முதலாகிய மாட்சிமைப்பட்ட ஒழுக்கங்களினாலேயும் அவை தீர்த்துப் பேரின்பம் வாயாமை முற்றுங் கண்ட துறந்தோரது மாதவத்தை அடையாதிருத்தல் மிக்க அறியாமையாம்.

4. **இழுக்கா னியனெறி யின்னாத வெ∴கான்**

**வழுக்கான் மனைபொருள் வெளவான் - ஒழுக்கத்தால்**

**செல்வான் செயிரிலா ணீவா னரசாண்டு**

**வெல்வான் விடுப்பான் விரைந்து**

தானொழுகு நெறியைத் தப்பாது, பிறர்க்கின்னாதன வற்றைச் செய்ய விரும்பாது, பிறன் மனை பிழையாது, பிறர் பொருள் வெளவாது, தானொழுங்காலொழுகி, குற்றமில்லாத வுணவினையீவான், அரசாண்டு பகைவரை விரைந்து நீக்கி வெல்வான்.

5. **வணங்கி வழியொழுகி மாண்டார் சொற்கொண்டு**

**நுணங்கிய நூனோக்கி நுழையா – விணங்கிய**

**பானோக்கி வாழ்வான் பழியில்லா மன்னனாய்**

**நூனோக்கி வாழ்வா னுனித்து**

பிறர்க்குப் பணிந்து, நெறியே ஒழுகி, மாட்சிமைப்பட்டார் சொற்களை உகந்து கொண்டு, நுண்ணிய நூல்களை ஓதி, நுண்ணிதாக வறிந்து பொருந்திய பான்மையை நோக்கி ஒழுகுவான் குற்றமில்லாத அரசனாய் நுண்ணிய நூல்களை அறிந்து மறுமையின்கண் வாழ்வான்.

## பழமொழி நானூறு

ஒவ்வொரு வெண்பாவின் இறுதியிலும் பழமொழி உள்ளது. ஆசிரியர் முன்றுறை அரையனார். இதனைப் பதிப்பித்தவர் செல்வக்கேசவராயர்.

1. **தோற்றம் அரிதாய மக்கட் பிறப்பினால்**

**ஆற்றும் துணையும் அறஞ்செய்க! – மாற்றின்றி**

**அஞ்சும் பிணிமூப்பு அருங்கூற் றுடனியைந்து**

**துஞ்ச வருமே துயக்கு**

**தருமம் செய்யுங்கள்**

தோன்றுவதற்கு அருமை உடையதாகிய மக்கட் பிறப்பினைப் பெற்றுள்ளோம். அதனால், முடிந்த வகைகளிலே எல்லாம் தரும காரியங்களைச் செய்துவருக. கொஞ்சமும் மாற்றுவதற்கு இயலாதவண்ணம் அஞ்சப்படும் நோய், முதுமை, அருங்கூற்று ஆகியவை எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து இறக்கும்படியான நிலையிலே தருமஞ் செய்யலாமென்று ஒதுக்கிவைத்தால், அந்த வேளையிலே, தருமம் செய்ய இயலாத படி அறிவுமயக்கமும் வந்து சேர்ந்து விடலாம்.

யாக்கையின் நிலையாமை கூறப்பட்டுள்ளது. தருமத்தை இளமையிலே செய்க; பின்னர் பார்த்துக் கொள்ளாமென்றால் அது முடியாமற் போகலாம். 'அஞ்சும் பிணிமூப்பு அருங்கூற்று உடனியைந்து துஞ்ச வருமே துயக்கு' என்பது பழமொழி.

2. **அறிவினால் மாட்சியொன்று இல்லா ஒருவன்**
**பிறிதினால் மாண்ட தெவனாம்? – பொறியின்**
**மணிபொன்னும் சாந்தமும் மாலையும் இன்ன**
**அணியெல்லாம் ஆடையின் பின்**

**அறிவு ஆடை போன்றது**

அறிவினாலே வந்த பெருமைகளே பெருமைகளாகும். அவை ஒன்றும் இல்லாத ஒருவன், பிற செல்வங்களினாலே பெருமை உடையவனாதல் எங்ஙனமாகும்; பொலிவு பெறச் செய்தலையுடைய இரத்தினாபரணமும், பொன்னாபரணமும், சந்தனமும், மாலையும் ஆகிய இவை போன்ற அணி வகைகள் எல்லாம், உடுத்தும், ஆடைக்குப் பின்னரே கருதி மதிக்கப்படுவன அல்லவா?.

ஆடையின் மேல் அவ்வணிகளையும் அணியின் அழகு தரும். அதுபோல, அறிவுடைமையின் மேல் பிற செல்வங்களும் சேரின் பயன்தரும். இன்றேல் தருவதில்லை. 'அணியெல்லாம் ஆடையின் பின்' என்பது பழமொழி. ஆடையே முதன்மையானது என்பது கருத்து.

3. **முல்லைக்குத் தேரும், மயிலுக்குப் போர்வையும்**
**தொல்லை, அளித்தாரைக் கேட்டறிதும்; - சொல்லின்**
**நெறிமடற் பூந்தழை நீடுநீர்ச் சேர்ப்ப!**
**அறிமடமும் சான்றோர்க்கு அணி**

**அறிந்து செய்யும் அறியாமைச் செயல்**

செறிந்த மடல்களையுடைய, அழகிய தாழை மரங்கள் பொருந்தியிருக்கும் கடற்கரைக்கு உரிய தலைவனே! முல்லைக் கொடிக்குத் தேரினையும், மயிலுக்குப் போர்வையினையும் முன் காலத்திலே கொடுத்தவர்களைக் கேள்வி வாயிலாக நாமும் அறிந்துள்ளோம். ஆகவே, சொலல்லப் போவோமானால், சான்றோர்களுக்கு, அவர்கள் அறிந்தே செய்யும் அறியாமைச் செயல்களுங்கூடச் சிறப்பையே தருவதாயிருக்கும் என்றும் அறிவாயாக.

'அறிமடமும் சான்றோர்க்கு அணி'என்பது பழமொழி. அறிந்தே செய்யும் மடமைச் செயலும் சான்றோர்க்குச் சிறப்பே தருவம் சொல்லப்பெற்றது.

4. **விளிந்தாரே போலப் பிறராகி நிற்கும்**
**முளிந்தாரைத் தஞ்சம் மொழியலோ வேண்டா**
**அளிந்தார்கண் ஆயினும், ஆராயா னாகித்**
**தெளிந்தான் விளிந்து விடும்**

**ஆராய்ந்த பின் நம்புங்கள்**

தமக்கு அன்பு உடையவர்களாக விளங்குபவர்களிடத்தினும் அவர்களை முழுவதும் ஆராயாதவனாகி நம்பிக்கை கொண்டவன், உறுதியாகக் கெட்டே போவான். அப்படியிருக்க எப்பொழுதும் வெகுண்டவர்களைப் போல மனம் வேறு பட்டவர்களாகி நிற்கும் ஈரமற்றவர்களை நம்பவேண்டாம் என்று, கொஞ்சம் சொல்ல வேண்டாம் அல்லவோ?

'ஆராயானாகித் தெளிந்தான் விளிந்து விடும்' என்பது பழமொழி.

5. **ஆஅம் எனக்கெளி தென்றுலகம் ஆண்டவன்**

**மேஎந் துணையறியான் மிக்குநீா் பெய்திழந்தான்**

**தோஒ முடைய தொடங்குவாா்க்கு, இல்லையே**

**தாஅம் தரவாரா நோய்**

**தற்பெருமை அழிவையே தரும்**

உலகம் அனைத்தையும் ஒரு குடையின் கீழ் ஆண்டவன் மாவலி. அவனும் பின் வந்து சம்பவிக்கபோகின்ற தன் நிலைமையை ஆராய்ந்து அறியாதவனாயின் 'எனக்கு எல்லாம் முடியும் எனக்கு எல்லாம் எளிதே' என்று, தன் குருவான சுக்கிரா் தடுத்தும் கேளாமல், செருக்கினால் மிகுந்து வாமனனுக்கு மூன்றடி மண், நீா் வாா்த்துக் கொடுத்தான். அதன் பயன் அனைத்தையுமே இழந்துவிட்டான். ஆதலால், குற்றமுடைய ஒரு செயலைச் செய்யத் தொடங்குபவா்களுக்குத் தாமே தமக்குக் கொண்டு தரவராத துன்பங்களே இல்லையாகும்.

'இல்லையே தாம் தரவ ாரா நோய்' என்பது பழமொழி.

## ஆசாரக்கோவை

ஆசிரியர் பெருவாயின் முள்ளியாா். 100 வெண்பாக்களை கொண்டது.தொல்காப்பியம் குறிப்பிடும் அம்மை வனப்பில் அடங்கும் நூல்.

**தக்கணை முதலிய தவறாது நடத்தல்**

1. **தக்கணை முதலிய தவறாது நடத்தல்**

**தக்கணை வேள்வி தவங்கல்வி யிந்நான்கும்**

**முப்பா லொழுக்கினாற் காத்துய்க்க – உய்க்காக்கால்**

**எப்பாலு மாகா கெடும்**

குரவர்க்குத் தக்கணை கொடுத்தாலும், யாகம் பண்ணுதலும், தவஞ்செய்தலும், கல்வியும் என்ற நான்கினையும் மூன்றுவகைப்பட்ட விதியாலே பாதுகாத்து நடாத்துக. நடாத்தாக்கால் எவ்வுலகத்தின் கண்ணும் தனக்குப் பயனாகாவாய் இந்நான்கும் கெடும்.

**நல்லறிவாளர் செயல்**

2. **குரவ ருரையிகந்து செய்யார் விரத்**

**குறையுடையார் தீர மறவார் நிறையுவா**

**மேற்கோலுந் தின்னார் மரங்குறையார் என்பதே**

**நல்லறி வாளர் துணிவு**

முன்பு கூறப்பட்ட குரவர்கள் சொல்லிய சொல்லைக் கடந்து ஒன்றனையுஞ் செய்யார் முடியாது கிடந்த குறை விரதமுடையார் மிகவதனை மறந்தொழுகார், மதி நிறைந்த உவாவின் கண் தம் பல் துடைப்பதும் செய்யார், அவ்வுவாவின் கண் மரங்களையுங் குறையார் என்று சொல்லப்படுவது நல்லறிவாளர் தொழில்.

**கால்கழுவியபின் செய்ய வேண்டியவை**

3. **காலினீர் நீங்காமை யுண்டிடுக பள்ளியும்**

**ஈரம் புலராமை யேறற்க வென்பதே**

**பேரறி வாளர் துணிவு**

கால் கழுவி நீர் உலர்வற்கு முன்னே உண்ணத் தொடங்குக. பாயலின் கண்ணும் கால் கழுவிய ஈரம் புலர்ந்தாவன்றி ஏறாதொழுக என்று சொல்லப்படுவது பேரறிவாளர் துணிவு.

**நீர் பருகு முறை**

4. **இருவகையாற் றண்ணீர் பருகா ரொருகையாற்**

**கொள்ளார் கொடாஅர் குரவர்க் கிருகை**

**சொறியா ருடம்பு மடுத்து**

இரு கையால் முகந்து ஏற்றும் தண்ணீா் குடியார், குரவா் கொடுப்பனவற்றை ஒரு கையால் வாங்கிக் கொள்ளார். அவருக்குத் தாம் ஒரு கையால் கொடார், உடம்பினை மடுத்து இரு கையால் சொறியார்.

**அறிவினார் விரும்பாத இடங்கள்**

5. **கறுத்த பகைமுனையுங் கள்ளாட்டுக் கண்ணும்**
**நிறுத்த மனமில்லார் சேரி யகத்தும்**
**குணநோக்கிக் கொண்டவா் கோள்விட் டுழியும்**
**நிகரில் லறிவினார் வேண்டார் பலர்தொகு**
**நீர்க்கரையும் நீடு நிலை**

வெகுண்ட பகையின்கண்ணும் கள்ளால் களித்தாடுமிடத்தும், பொது மகளிர் சேரிக்கண்ணும் தங்குங்களை ஆராய்ந்து தம்மை விரும்பிக் கொண்டார் கோட்பாடு விட்டவிடத்தும், பலா் தொகும் நீர்க்கரை இடத்தும் நெடிதாக நிற்கையை ஒப்பில்லாத அறிவினையுடையார் விரும்பார்.

## வினாக்கள்

1. திரிகடுகம் உணர்த்தும் முப்பெரும் மருந்துகளான அறங்களை விளக்குக.
2. சிறுபஞ்ச மூலம் உணர்த்தும் அறங்களை எடுத்துரைக்க.
3. ஏலாதி உரைக்கும் அறங்களைப் பட்டியலிடுக.
4. அறச்செயலை உரைக்கும் பழமொழிகளை கூறுக.
5. ஆசாரக்கோவை உணர்த்தும் தனிமனித ஒழுக்கங்களை விவரிக்க.

## அலகு – 4

## முதுமொழிக்காஞ்சி

இயற்றியவர் மதுரை கூடலூர் கிழார்.முதுமொழி எனின் பழமொழி. தொல்காப்பியம் காஞ்சி என்பதற்கு நிலையாமை என்று குறிப்பிடுகிறது. புறப்பொருள் வெண்பாமாலை இந்நூலுக்கு கூறும் இலக்கணம் பொருத்தமுடையதாக விளங்குகிறது. குறள் வெண் செந்துறையில் அமைந்த பாக்கள்.

### 1. சிறந்த பத்து

1. **ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்**

**ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை.**

கடல்சூழ்ந்த உலகத் மக்கட் கெல்லாம் ஓதலினும் மிக்க சிறப்புடைத்து ஆசாரமுடைமை.

2. **காதலிற் சிறந்தன்று கண்ணஞ்சப் படுதல்.**

பிறர்தன்மேற் செய்யுங் காதலினும் சிறந்தது கற்றவரால் கண்ணஞ்சப்படுதல்.

3. **மேதயிற் சிறந்தன்று கற்றது மறவாமை.**

தானாகப் புதிது ஒன்றையும் மதியுடைமையான் அறியும் அறிவினும் மிக்க சிறப்புடைத்து, தான் கற்றதனைக் கடைப்பிடித்திருத்தல்.

4. **வண்மையிற் சிறந்தன்று வாய்மை யுடைமை.**

செல்வத்தினும் மிக்க சிறப்புடைத்து மெய்யுடைமை.

5. **இளமையிற் சிறந்தன்று மெய்பிணியின்மை.**

இளமையினும் மிக்க சிறப்புடைத்து உடம்பு நோயின்மை.

6. **நலனுடை மையினா ணுச்சிறந்தன்று.**

அழகுடைமையினும் மிக்க சிறப்புடைத்து நாணுடைமை.

7. **குலனுடை மையிற் கற்புச் சிறந்தன்று.**

நல்ல குலமுடைமையினும் கல்வியுடைமை சிறப்புடைத்து.

8. **கற்றலிற் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று.**

தான் ஒன்றைக் கற்கு மதனினும் சிறப்புடைத்துக் கற்றாரை வழிபடுதல்.

9. **செற்றாரைக் செறுத்தவிற் றற்செய்கை சிறந்தன்று.**

பகைவரைச் செறுத்தலினும் மிக்க சிறப்புடைத்துத் தன்னைப் பெருகச் செய்தல்.

10. **முற்பெரு கலிற்பின் சிறுகாமை சிறந்தன்று.**

செல்வம் முற்காலத்துப் பெருகிப் பின் அழிதலின் நின்ற நிலைமையிற் சிறுகாமை சிறப்புடைத்து.

## 2. அறிவுப்பத்து

1. **ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்**
**பேரிற் பிறந்தமை ஈரத்தின் அறிப.**

கடல் சூழ்ந்த உலகத்து மக்களெல்லாருள்ளும் ஒருவன் பெருங்குடியிற் பிறந்தமையை அவன் ஈரமுடைமை யானே அறிவர்.

2. **ஈரமுடைமை ஈகையினறிப.**

ஒருவன் நெஞ்சின் கண் ஈரமுடையான் என்பதனை அவன் பிறர்க்குக் கொடுக்கும் கொடையான் அறிவர்.

3. **சோரா நன்னட் புதவியி னறிப.**

ஒருவன் தப்பாத கடைப்பிடியுடைய நல்ல நட்பினையுடையவன் என்பது அவன் நட்டார்க்குச் செய்யும் உதவியினாலே அறிவர்.

4. **கற்ற துடைமை காட்சியி னறிப.**

ஒருவன் கல்வியறிவினை தோற்றத்தினால் அறிவர்.

5. **ஏற்றமுடைமை எதிர்கோளின் அறிப.**

ஒருவன் ஆராய்ந்து துணியவல்லவன் என்பதை அவன் முதற்கொண்டு பாதுகாக்கும் காப்பானே அறிவர்.

6. **சிற்றிற் பிறந்தமை பெருமிதத்தி னறிப.**

சிறுமையுடைய குடியின்கண் பிறந்தான் என்பதனை அவன் செருக்கினாலே அறிவர்

7. **குத்திரஞ் செய்தலிற் கள்வனாத லறிப.**

ஒருவனை ஒருவன் படிறு செய்யும் படிற்றால் அவன் கள்வனாதல் அறிவர்.

8. **சொற்சோர் வுடைமையின் எச்சோர்வு மறிப.**

சொற்சோர்வுபடச் சொல்லுதலான் அவனுடைய எல்லாச் சோர்வையும் அறிவர்.

9. **அறிவுசோர் வுடைமையிற் பிறிது சோர்வு மறிப.**

ஒருவன் தன்னறிவின்கண் சோர்வுடைமையின் எல்லாச் சோர்வுமுடையன் என்பதறிவர்.

10. **சீருடை யாண்மை செய்கையி னறிப.**

ஒருவன் புகழுடைய ஆள்வினைத் தன்மையை அவன் செய்கையான் அறிவர்.

## 3. பழியாப்பத்து

1. **ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்**

**யாப்பி லோரை இயல்புகுணம் பழியார்.**

கடல் சூழ்ந்த உலகத்து மக்களெல்லாருள்ளும் ஒரு செய்கையின் கண்ணும் நிலையில்லாதார் இயற்கையாகிய குணத்தை யாவரும் பழியார்.

2. **மீப்பி லோரை மீக்குணம் பழியார்**

மேன்னைக்குணம் இல்லாரை மேன்னை செய்யாமையை யாவரும் பழியார்.

3. **பெருமை யுடையதன் அருமை பழியார்.**

பெருமையுடைய தொன்றை முடித்துக் கொள்கை அரிதென்று அதனைப் பழித்து முயற்சி தவிரார்.

4. **அருமை யுடையதன் பெருமை பழியார்.**

அருமையுடைய தொன்றினை முடித்துக் கொள்ளும் பொழுது அரிதென்று பழித்து அதன்கண் உள்ள முயற்சிப் பெருமையைத் தவிரார்.

5. **நிறையச் செய்யாக் குறைவினை பழியார்.**

ஒரு வினையை நிரம்பச் செய்யாதவர்க்கு முன் போய் அக்குறை வினையை யாவரும் பழியார்.

6. **முறையி லரசர்நாட் டிருந்து பழியார்.**

நடுவு செய்யாத அரசர் நாட்டின் கண் இருந்து அவ்வரசர் நடுவு செய்யாமையை யாவரும் பழியார்.

7. **செய்யதக்க நற்கேளிர் செய்யாமை பழியார்.**

தமக்கு உதவி செய்தற்குத் தக்க நல்ல கேளிர் உதவி செய்திலரென்று பிறர்க்குச் சொல்லிப் பழியார்.

8. **அறியாத் தேசத் தாசாரம் பழியார்.**

தான் அறியாத தேசத்தின்கண் சென்று அங்குள்ளார் ஒழுகும் ஒழுக்கத்தைப் பழியார்.

9. **வறியோன் வள்ளிய னன்மை பழியார்.**

வறுமை யுடையானை வண்மையுடையானல்லனென்று பழியார்.

10. **சிறியா ரொழுக்கம் சிறந்தோரும் பழியார்.**

சிறுமைக்குணம் உடையாருமைய கீழ்மைக் குணத்தை ஒழுக்க்தான் மிக்காரும் கண்டால் பழியார்.

## 4. துவ்வாப்பத்து

1. **ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்**
   **பழியோர் செல்வம் வறுமையிற் றுவ்வாது.**

ஆர்கலியாற் சூழப்பட்ட உலகத்து எல்லா மக்களுள்ளும் பழியுடையோர் செல்வம் வறுமையின் நீங்கி ஒழியாது.

2. **கழிதறு கண்மை பேடியிற் றுவ்வாது.**

இடமுங் காலமு மறியாது மிக்க தறுகண்மை பேடித் தன்மையின் நீங்கியொழியாது.

3. **நாணில் வாழ்க்கை பசித்தலிற் றுவ்வாது.**

நாணழிந்துண்டு வாழும் வாழ்க்கை பசித்தலின் நீங்கிஒழியாது.

4. **பேணி லீகை மாற்றலிற் றுவ்வாது.**

விருப்பமில்லாத கொடை கொடையை நீக்குதலின் ஒழியாது.

5. **செய்யாமை மேற்கோள் சிதடியிற் றுவ்வாது.**

செய்யத்காதனவற்றை மேற்கொண்டு செய்ய் தொடங்குவது மையற்றன்மையின் நீங்கி ஒழியாது.

6. **பொய் வேளாண்மை புலைமையிற் றுவ்வாது.**

பொய்யப்பட்ட உபகாரம் புலமையின் நீங்கி ஒழியாது.

7. **கொண்டுகண் மாறல் கொடுமையிற் றுவ்வாது.**

ஒருவனை ஒருவன் நட்பாகக் கொண்டு வைத்துக் கண்ணோட்டத்தை மாறுதல் கொடுமையின் நீங்கி ஒழியாது.

8. **அறிவிலி துணைப்பாடு தனிமையிற் றுவ்வாது.**

அறிவில்லாதானொருவனோடு துணைப்பாடு தனிமையின் நீங்கியொழியாது.

9. **இழிவுடை மூப்புக் கதத்திற் றுவ்வாது.**

இழிவினையுடைய மூப்பு பிறர் வெறுத்து வெகுறும் வெகுட்சியின் நீங்கி ஒழியாது.

10. **தானோ ரின்புறல் தனிமையிற் றுவ்வாது.**

தானே ஒருவன் இன்புறுதல் வறுமையின் நீங்கி ஒழியாது.

## 5. அல்லபத்து

1. **ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்**

**நீரறிந் தொழுகாதாள் தாரமல்லள்.**

ஆர்கலியாற் சூழப்பட்ட உலகத்து மக்கட்கெல்லாம் கொழுநனது குணமறிந் தொழுகாதாள் மனையாளல்லள்.

2. **தாரமா ணாதது வாழ்க்கை யன்று.**

மனையாள் மாட்சிமைப்படாத மனை வாழ்க்கை மனைவாழ்க்கையன்று.

3. **ஈரமில் லாதது கிளைநட் பன்று.**

மனத்தின் கண் ஈரமில்லாதது கிளையுமன்று நட்புமன்று.

4. **சோராக் கையன் சொன்மலை யல்லன்.**

பிறர்க்கு ஒன்றை உதவாத கையுடையோன் புகழைத் தாங்கமாட்டான்.

5. **நேரா நெஞ்சத்தோன் நட்டோ னல்லன்.**

வேறாய் உடன்படாத நெஞ்சத்தோன் நட்டோனல்லன்.

6. **தேராமற் கற்றது கல்வி யன்று.**

கற்பிக்கும் ஆசிரியனுக்கு ஒன்றைக் கொடாது கற்குமது கல்வியன்று.

7. **வாழாமல் வருந்தியது வருத்த மன்று.**

தன்னுயிர் வாழாமை வருந்தியது வருத்தமன்று.

8. **அறத்தாற்றி னீயாத தீகை யன்று.**

அறத்தின் நெறியின் ஈயாது ஈகையன்று.

9. **திறத்தாற்றி னோலா தநோன் பன்று.**

தன் குலத்துக்கும் நிலைமைக்கும் நோவாதது தவமன்று.

10. **மறுபிறப் பறியா தமூப் பன்று.**

மறுபிறப்பை அறிந்து அறத்தின் வழி ஒழுகாததே மூத்த மூப்பன்று.

## 6. இல்லைப்பத்து

1. **ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்**
   **மக்கட் பேற்றிற் பெறும்பே றில்லை.**

ஆர்கலியாற் சூழப்பட்ட உலகத்து மக்கட் கெல்லாம் புதல்வரைப் பெறும் பேற்றிற் பெறும் பேறில்லை.

2. **ஒப்புர வறிதலிற் றகுவர வில்லை.**

செயக்கடவன செய்கையோடொக்கும் தகுதியில்லை.

3. **வாய்ப்புடை விழைச்சி நல்விழைச்சு இல்லை.**

மக்கட்பேறு வாய்த்த கலவி போலும் கலவியின் நல்லதில்லை.

4. **வாயா விழைச்சிற் றீவிழைச் சில்லை.**

மக்கட்பேற்றின் பொருட்டன்றிக் கலக்கும் கலவிபோலத் தீயதில்லை.

5. **இயைவது கரத்தவிற் கொடுமை இல்லை.**

தான் பிறர்க்குக் கொடுக்க இயலும் பொருளை இல்லையென்று கரக்கும் கரப்பிற் கொடுமையில்லை.

6. **உணர்வில னாதலிற் சாக்கா டில்லை.**

ஒருவற்கு அறிவின்மையோடொக்கும் சாக்காடில்லை.

7. **நசையிற் பெரியதோர் நல்குர வில்லை.**

ஆசையின் மிக்கதொரு வறுமையில்லை.

8. **இசையிற் பெரியதோ ரெச்ச மில்லை.**

புகழுடைமையின் மிக்குப் பிறர் பயப்பதோர் ஆக்கம் ஒருவர்க் கில்லை.

9. **இரத்தலி னூஉங் கிளிவர வில்லை.**

இரந்து உயிர் வாழ்தலின் மேல் கீழ்மை இல்லை.

10. **இரப்போர்க் கீதலின் எய்துஞ் சிறப்பில்லை.**

இரப்போர்க்குக் கொடுப்பதின் மிக்கதாய் எய்தும் மேன்மை இல்லை.

## 7. பொய்ப் பத்து

1. **ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்**
   **பேரறிவி னோனினி வாழாமை பொய்.**

ஆர்கலியாற் சூழப்பட்ட உலகத்து எல்லா மக்களுள்ளும் ஒருவன் பேரறிவுடையனாயின், அவன் மனத்தால் இன்புற் றொழுகாமை பொய்.

2. **பெருஞ்சீ ரோன்றன் வெகுளியின்மை பொய்.**

பெருஞ் செல்வத்தைப் பெற்றா னொருவன் வெகுளாமை பொய்.

3. **கள்ளுண் போன்சோர் வின்மை பொய்.**

கள்ளையுண்போன் ஒழுக்கஞ் சோர்வின்மை பொய்.

4. **கால மறியாதோன் கையுறல் பொய்.**

காலமறிந்து முயலாதோன் கருமுடிதல் பொய்.

5. **மேல்வர வறியாதோன் தற்காத்தல் பொய்.**

எதிர்காலத்து வரும் இடையூறு அறியாதான் தனக்கு அரண் செய்து காத்தல் பொய்.

6. **உறுவினை காய்வோன் உயர்வு வேண்டல் பொய்.**

மிக்க கருமம் செய்கைக்கு மடிந்திருப்போன் தனக்கு ஆக்கம் வேண்டுதல் பொய்.

7. **சிறுமைநோ னாதோன் பெருமை வேண்டல் பொய்.**

பிறர்க்குத் தான் செய்யும் பணிவினைப் பெறாதோன் தனக்குப் பெருமை வேண்டுதல் பொய்.

8. **பெருமைநோ னாதோன் சிறுமை வேண்டல் பொய்.**

பிறர்க்குத் தான் அரியனாகும் பெருமை வேண்டாதான் தனக்குச் சிறுமைக் குணம் வேண்டுதல் பொய்.

9. **பொருணசை வேட்கையோன் முறைசெயல் பொய்.**

பொருள் நசையால் வரும் வேட்கையை உடையான் முறைசெய்தல் பொய்.

10. **வாலிய னல்லாதோன் தவஞ்செய்தல் பொய்.**

மனத்தின் கண் தூயனல்லாதோன் தவஞ்செய்தல் பொய்.

## 8. எளிய பத்து

1. **ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்**

**புகழ்வெய் யோர்க்குப் புத்தேணா டெளிது.**

ஆர்கலியாற் சூழப்பட்ட உலகத்து மக்களெல்லாருள்ளும் ஒருவர்க்குப் புகழ் விரும்பின் கடவுளர் வாழு நாடு பெறுதல் எளிது.

2. **உறழ்வெய் யோருக் குறுசெரு வெளிது.**

பிறரோடு கலகம் விரும்புவார்க்கு மிக்க செரு எளிது.

3. **ஈரம்வெய் யோர்க்கு நசைகொடை எளிது.**

மனத்துள் ஈரத்தை விரும்பி இருப்பார்க்குப் பிறனொருவன் கேட்டகக் கொடுத்தல் எளிது.

4. **குறளைவெய் யோர்க்கு மறைவிரி யெளிது.**

குறளைச் சொல்லை விரும்புவார்க்கு ஒருவன் மறையச் செய்த தொன்றை வெளிப்படுத்திப் பிறரை அறிவித்தல் எளிது.

5. **துன்பம் வெய்யோர்க் கின்பம் எளிது.**

ஒன்றனை முயன்று வருந்துன்பத்தை வெறாதார்க்கு இன்பம் எய்தல் எளிது.

6. **இன்பம்வெய் யோர்க்குத் துன்பம் எளிது.**

முயன்று வரும் தன்மையால் வரும் இன்பத்தை விரும்புவார்க்குப் பொருளில்லாமையால்வரும் துன்பம் எளிது.

7. **உண்டி வெய்யோர்க் குறுபிணி எளிது.**

உண்டி மிக விரும்பினார்க்கு மிக்க பிணி எளிது.

8. **பெண்டிர்வெய் யோர்க்குப் படுபழி எளிது.**

பெண்டிரை மிக விரும்பினார்க்கு உண்டாகும் பழி எளிது.

9. **பாரம் வெய்யோர்க்குப் பாத்தூ ணெளிது.**

பிறர் பாரத்தைத் தாங்குதலை விரும்புவார்க்குப் பகுத்துண்டல் எளிது.

10. **சார்பி லோருக் குறுகொலை எளிது.**

நன்னட்பைச் சாரோதோருக்குப் பொருந்திய கொலைத் தொழில் செய்தல் எளிது.

## 9. நல்கூர்ந்த பத்து

1. **ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்**
**முறையி லரசனாடு நல்கூர்ந் தன்று.**

ஆர்கலியாற் சூழப்பட்ட உலகத்துள் எல்லா மக்கட்கும் முறைமை செய்யா அரசனோடு வறுமையுறும்.

2. **மிகமூத் தோன்காம நல்கூர்ந் தன்று.**

இளமை கடந்தவன் நுகருங் காமநுகர்ச்சி இன்பம் வற்றும்.

3. **செற்றுட னுறைவோனைச் சேர்தனல் கூர்ந்தன்று.**

தன்னைச் செறுத் தொழுகுவானைச் சென்றடைதல் வறுமையுறும்.

4. **பிணிகிடந் தோன்பெற்ற வின்பநல் கூர்ந்தன்று.**

பிணிபட்ட உடம்பை உடையான் நுகரும் காமவின்பம் வறுமையுறும்.

5. **தற்போற் றாவழிப் புலவிநல் கூர்ந்தன்று.**

தன்மேல் அன்பாற் போற்றாதார் திறத்துப் புலக்கும் புலவி வறுமையுறும்.

6. **முதிர்வுடை யோன்மேனியணிநல் கூர்ந்தன்று.**

மூத்த உடம்பினையுடையான் அணியுமணி வறுமையுறும்.

7. **சொற்செல் லாவழிச் சொலவுநல் கூர்ந்தன்று.**

தன்சொல் செல்லாவிடத்துச் சொல்லிய சொல் வறுமையுறும்.

8. **அகம்வறி யோனண்ண னல்கூர்ந் தன்று.**

மனத்தில் நன்மையின்றி வறியோன் ஒருவனைச் சென்று நண்ணுல் வறுமையுறும்.

9. **உட்கில் வழிச்சின நல்கூர்ந் தன்று.**

மதியாதார் முன் வெகுளும் வெகுட்சி வறுமையுறும்.

10. **நட்பில் வழிச்சேறல் நல்கூர்ந் தன்று.**

தன்னோடு நட்பில்லாார் மாட்டு ஒன்றனை நச்சிய நசை வறுமையாகும்.

## 10. தண்டாப் பத்து

1. **ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்**

**ஓங்கல் வேண்டுவோன் உயர்மொழி தண்டான்.**

ஆர்கலியாற் சூழப்பட்ட உலகத்து எல்லா மக்களுள்ளும் உயர்வு வேண்டுகோள்; பிறரை உயர்த்துச் சொல்லும் மொழிகளைளள மாறான்.

2. **வீங்கல் வேண்டுவோன் பல்புகழ் தண்டான்.**

ஆக்கத்தை வேண்டுவோனொருவன் தனக்குப் பல புகழ்வரும் செய்கை களையான்.

3. **கற்றல் வேண்டுவோன் வழிபாடு தண்டான்.**

ஒன்றனைக் கற்றல் விரும்புவான் தன்னைக் கற்பிக்கும் ஆசிரியர்க்குச் செய்யும் வழிபாடு ஒழியான்.

4. **நிற்றல் வேண்டுவோன் தவஞ்செ தயல் தண்டான்.**

பிறப்புக் கெடுத்துத் தன்னை நிலைப்பிக்க வேண்டுவோன் தவஞ்செய்தல் ஒழியான்.

5. **வாழ்க்கை வேண்டுவோன் சூழ்ச்சி தண்டான்.**

வாழ்தலை மேன்மேலும் விரும்பிய ஒருவன் தான் எடுத்த தொழிலை ஆராய்தல் ஒழியான்.

6. **மிகுதி வேண்டுவோன் வருத்தந் தண்டான்.**

அளவு மிக்க பொருள் வேண்டுவோன் முயற்சி வருத்தமென நீக்கான்.

7. **இன்பம் வேண்டுவோன் துன்பம் தண்டான்.**

இன்பத்தை விரும்பிய ஒருவன் துன்பத்தைத் துன்பமென்று களையான்.

8. **துன்பம் வேண்டுவோன் இன்பந் தண்டான்.**

துன்பத்தை விரும்பிய ஒருவன் இன்பத்தை இன்பமென்று களையான்.

9. **ஏமம் வேண்டுவோன் முறைசெயல் தண்டான்.**

குடிகளைக் காக்க விரும்பிய அரசன் முறைமைப்படி நடத்தலொழியான்.

10. **காமம் வேண்டுவோன் குறிப்புச்செயல் தண்டான்.**

காமத்தை விரும்பிய ஒருவன் குறிப்பறிதல் ஒழியான்.

## மூதுரை

முதல் தொடரை வைத்து இந்நூலை வாக்குண்டாம் என்பர். 31 வெண்பாக்கள் கொண்டது. ஆசிரியர் ஔவையார்.பழமையான அறக்கருத்துக்களை எளிமையக இனிமையாகத் தரும் நூல்.

### கடவுள் வாழ்த்து

**வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்**
**நோக்குண்டாம் மேனி நுடங்காது – பூக்கொண்டு**
**துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்**
**தப்பாமற் சார்வார் தமக்கு.**

பவளம் போன்ற நிறமுடைய மேன்மைமிக்க உடலையும் தும்பிக்கையினையும் உடைய விநாயகப் பெருமானின் திருவடிகளைப் பூக்கள் தூவித் தவறாமல் வழிபட்டு வந்தால் சிறந்த சொல்வன்மையும் தூய்மையான மனமும் தாமரை மலரில் வீற்றிருக்கும் இலக்குமியின் அருட்பார்வையும் கிடைக்கும். அவரது உடல் நோயினால் வருத்தம் அடையாது.

**பயனை எதிர்பார்க்காமல் நற்செயலைச் செய்யுங்கள் (1)**

**நன்றி ஒருவருக்குச் செய்தக்கால் அந்நன்றி**
**என்று தருங்கொ லெனவேண்டா – நின்று**
**தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்**
**தலையாலே தான்தருத லால்.**

நிலைபெற்றுத் தளர்ச்சியடையாமல் வளமாக வளர்கின்ற தென்னை மரம் வேர்களால் உறிஞ்சி நீரை இனிமை உடைய இளநீராகத் தருவதுபோலத் தான் ஒருவருக்குத் தக்க காலத்தில் செய்த நன்றிக்குக் கைமாறாக அவர் எப்போது உதவுவார் என்று எண்ணிக் கொண்டிருக்க வேண்டியது இல்லை. அவரும் தக்க காலத்தில் நமக்கு உதவுவார்.

**நற்குணம் உடையவர்களுக்குச் செய்த உதவியின் தன்மை (2)**

**நல்லா ரொருவர்க்குச் செய்த உபகாரம்**
**கல்மே லெழுத்துப்போற் காணுமே – அல்லாத**
**ஈரமில்லா நெஞ்சத்தார்க் கீழே உபகாரம்**
**நீர்மே லெழுத்திற்கு நேர்.**

நற்குணம் உடைய ஒருவருக்குக் காலத்தால் நாம் செய்த உதவியானது கல்லில் செதுக்கப்பட்ட எழுத்தைப்போல என்றைக்கும் அழியாமல் நிலைத்திருக்கும். நற்குணம் இல்லாதவர்களுக்குச் செய்த உதவியானது நீரில் எழுதப்பட்ட எழுத்தைப்போல் விரைவாக அழிந்துவிடும்.

**இளமை காலத்து வறுமை (3)**

> **இன்னா இளமை வறுமைவந் தெய்தியக்கால்**
> **இன்னா அளவி லினியவும் - இன்னாத**
> **நாளல்லா நாட்பூத்த நன்மலரும் போலுமே**
> **ஆளில்லா மங்கைக் கழகு.**

இளமைப் பருவத்தில் இன்பங்களைப் பெற இயலாமல் வறுமை வந்து சேர்ந்தால் அது மிகுந்த துன்பத்தைத் தரும். முதுமைக்காலத்தில் பொருட் செல்வம் மிகுந்தால் அதுவும் துன்பங்கள் சேர்வதற்கான வழியாகும். இவை எவ்வாறெனில் சூடிக்கொள்ள இயலாத காலத்தில் பூத்த மலரைப் போலவும் இன்பம் துய்க்கக் கணவன் இல்லாத பெண்ணின் அழகும் போன்றவையாகும்.

**சான்றோர் இயல்பு (4)**

> **அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவளாய்**
> **நட்டாலும் நண்பல்லர் நண்பல்லர்**
> **கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்க ளேசங்கு**
> **சுட்டாலும் வெண்மை தரும்.**

பால் காய்ச்சினாலும் தன்னுடைய சுவையில் இருந்து குறையாது. சங்கினை எரித்துத் திருநீறு போல ஆக்கினாலும் அது வெண்ணிறமாகவே தோன்றும். அதுபோல, வறுமையுற்ற காலத்திலும் சான்றோர்கள் செம்மையான வாழ்வு வாழ்வதையே விரும்புவர். நட்புக் கொள்ளும் தன்மை இல்லாத கீழ்மக்கள் நெருக்கமாக நட்வுக் கொண்டாலும் நண்பர்களாகமாட்டார்கள்.

**காலம் அறிந்து செயலாற்றுக (5)**

> **அடுத்து முயன்றாலு மாகுநா ளன்றி**
> **எடுத்த கருமங்க ளாகா – தொடுத்த**
> **உருவத்தால் நீண்ட உணர்மரங்க ளெல்லாம்**
> **பருவத்தா லன்றிப் பழா.**

கிளைகளை உடைய உயரமான மரங்கள் எல்லாம் பழுக்க வேண்டிய பருவத்தில் அல்லாமல் பிறகாலங்களில் பழங்களைக் கொடுக்கமாட்டாது. அதுபோல எத்தனைமுறை தொடர்ந்து முயற்சி செய்தாலும் அது முடியும் காலம் வந்தாலன்றி எடுத்த காரியங்கள் நிறைவேறமாட்டா.

**மானம் இழந்து வாழாமல் இருத்தல் (6)**

**உற்ற இடத்தில் உயிர்வழங்குந் தன்மையோர்**

**பற்றலரைக் கண்டாற் பணிவரோ – கற்றூண்**

**பிளந்திறுவ தல்லால் பெரும்பாரந் தாங்கின்**

**தளர்ந்து வளையுமோ தான்.**

கல்லால் ஆன தூண் அளவிடற்கரிய பாரத்தைத் தாங்கினால் இரண்டாக உடையுமே அல்லாமல் தான் தளர்வுற்று வளையாது. அதுபோலத் தன்னுடைய மானத்திற்கு இழுக்கு உண்டானபோது உயிரை விடும் இயல்புடையவர்கள் பகைவர்களைப் பார்த்துப் பணிந்து வணங்கமாட்டார்கள்.

**அறிவு செல்வம் குணம் (7)**

**நீரளவே யாகுமாம் நீராம்பல் தான்கற்ற**

**நூலளவே யாகுமாம் நுண்ணறிவு – மேலைத்**

**தவத்தளவே யாகுமாந் தான்பெற்ற செல்வம்**

**குலத்தளவே யாகுங் குணம்.**

நீரில் வாழும் அல்லி குளத்தில் இருக்கும் நீரில் அளவில் இருக்கும். அதுபோல, ஆராய்ந்தறியும் நுண்ணறிவு தான் கற்றறிந்த கல்வியின் அளவாக இருக்கும். இப்பிறவியில் நாம் பெற்றிருக்கும் செல்வம் முற்பிறவியில் செய்த தவத்தின் அளவாகவும் அதன் பயனாகவும் இருக்கும். மனிதருக்கு வாய்த்தகுணம் அவர்கள் பிறந்த குலத்தின் இயல்புக்கேற்ப அமையும்.

**நல்லவரோடு நட்புக்கொள்ளுதல் (8)**

**நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க**
**நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே – நல்லார்**
**குணங்க ளுரைப்பதுவும் நன்றே அவரோ**
**டிணங்கி யிருப்பதுவும் நன்று.**

நற்குணம் உடையவர்களைப் பார்ப்பதும், அவர்கள் கூறும் நல்ல சொற்களைக் கேட்பதும், அவர்களுடைய நல்ல குணங்கள் பற்றிப் பேசுவதும், அவர்களோடு நட்புக் கொள்வதும் நற்செயல்களாகும்.

**தீயவர்களுடன் பழகுதலால் வரும் தீமை (9)**

**தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற**
**தீயார்சொற் கேட்பதுவுந் தீதே – தீயார்**
**குணங்க ளுரைப்பதுவுந் தீதே – அவரோ**
**டிணங்கி யிருப்பதுவுற் தீது.**

தீயகுணம் உடையவர்களைக் கான்பதும், அவர்களுடைய தீமைகளை விளைவிக்கும் சொற்களைக் கேட்பதும், அவர்களுடைய தீமையான குணங்களை எடுத்துக் கூறுவதும், அவர்களோடு நட்புக் கொள்வதும் தீமைகளை வரவழைத்துக் கொள்வதற்கான வழியாகும்.

**நல்லவர்களால் அனைவருக்கும் நலம் விளையும் (10)**

**நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்**
**புல்லுக்கு மாங்கே பொசியுமாம் - தொல்லுலகில்**
**நல்லா ரொருவர் உளரேல் அவர்பொருட்**
**டெல்லார்க்கும் பெய்யு மழை.**

நெற்பயிருக்குப் பாய்ச்சப்பட்ட நீர் வாய்க்கால் வழியாகச் செல்கையில் கசிந்து சென்று புல்லுக்கும் அது வளர உதவுவது போல; இவ்வுலகில் நல்லவர் ஒருவர்

இருந்தால் அவர் இருக்கிற காரணத்தால் அனைவருக்கும் பயன் உண்டாகும் படியாக வானம் மழைபெய்விக்கும்.

## நல்வழி

வாழ்க்கைக்கு நல்வழி காட்டுதல் எனும் பொருளில் நல்வழி எனும் பொருள் பெற்றது. ஆசிரியர் ஔவையார். கடவுள் வாழ்த்தோடு 41 வெண்பாக்கள் உள்ளன.

1. **நீரும் நிலமும் நிலம்பொதியும் நெற்கட்டும்**
**பேரும் புகழும் பெருவாழ்வும் - ஊரும்**
**வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க் கென்னும்**
**தரும்சிவந்த தாமரையாள் தான்.**

நெஞ்சத்தில் மற்றவர்களைத் துன்பத்திற்கு உள்ளாக்கும் வஞ்சமாகிய தீய எண்ணம் இல்லாதவர்களுக்குச் சிவந்த தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள்; நீர், இல்லம், நெல், பெயர், புகழ், சிறந்த வாழ்வு, ஊர், வளர்கின்ற செல்வம், நிறைந்த ஆயள் அனைத்தையும் அருள்வாள்.

2. **பாடுபட்டுத் தேடிப்ப ணத்தைப்பு தைத்துவைத்துக்**
**கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் - கூடுவிட்டிங்கு**
**ஆவிதான் போயின பின்புயாரோ அனுபவிப்பார்**
**பாவிகாள் அந்தப் பணம்.**

பூமியில் வாழ்கின்ற காலத்தில் உழைத்துச் சேர்த்த செல்வத்தைத் தானும் அனுபவிக்காமல் பிறருக்கும் கொடுக்காமல் மண்ணில் புதைத்து வைத்துவிட்டு அலையும் தன்மைகொண்ட மக்களே! உங்கள் உடலைவிட்டு உயிர் பிரிந்தபின்பு நீங்கள் புதைத்து வைத்த செல்வத்தை யார் அனுபவிப்பார்?

3. **வேதாளம் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே**
**பாதாள மூலி படருமே - மூதேவி**
**சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே**
**மன்றோரம் சொன்னார் மனை.**

வழக்கு மன்றத்தில் நன்மை தீமைகளை உண்மை பொய்களை ஆராய்ந்து நடுநிலையான மனத்தோமு தீர்ப்பு வழங்காதவரின் இல்லத்தில் பேய்கள் குடிபுகும், எருக்கஞ்செடிகள் பூப்பூக்கும். பாதாள மூலி என்னும் தாவரமும் படரும், மூதேவி வீட்டிற்குள் குடியேறுவாள், பாம்புகள் புகுந்து துன்பம் தரும்.

4. **நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லா உண்டிபாழ்**
**ஆறில்லா ஊருக்கு அழகுபால் - மாறில்**
**உடன்பிறப் பில்லா உடம்புபாழ் ; பாழே**
**மடக்கொடி இல்லா மனை.**

இறைவனது நாமம் சொல்லித் திருநீறு பூசிக் கொள்ளாத நெற்றியையும், எண்ணெய் சேர்க்காத உணவும், ஆறு இல்லாத ஊரும் உடன் பிறப்புகள் இல்லாமல் இருப்பதும், வீட்டுக்கு மனைவி இல்லாமல் இருப்பதும் என இவை எல்லாம் சிறப்பில்லாதனவாம்.

5. **ஆனமுதலில் அதிகம் செலவு ஆனால்**
**மானம்அழிந் துமதி கெட்டுப் - போனதிசை**
**எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்**
**நல்லார்க்கும் பொல்லனாம் நாடு.**

தன்னிடம் இருக்கும் முதலீட்டிற்கு மேல்செலவு அதிகமானால் மானத்திற்கு அழிவு நேர்ந்து அறிவு கெட்டு, பயணம் சென்ற திசை எங்கும் அனைவருக்கும் திருடனாய், எல்லாப் பிறவிகளிலும் தீயனாய், நல்லோரால் வெறுக்கப்படுபவனாவான். எல்லோருக்கும் பொல்லாதவனாய் வாழ வேண்டிவரும். அதனால் அனைவரும் இதனை உணர்ந்து செலவைக் குறைக்க வேண்டும்.

6. **மானம் குலம்கல்வி வண்மை அறிவுடைமை**
**தானம் தவமுயற்சி தாளாண்மை – தேனின்**
**கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்**
**பசிவந்திடப் பறந்து போம்.**

பசிவந்திட்டால் பிறப்பால் வந்த பெருமை, குடும்பம் கட்டிக்காத்த பெருமை, படிப்பு, அழகு, உண்மை, கொடை, நோன்பு, உயர்வு, தொழில், முயற்சி,பெண்களிடம் ஆசை ஆகியனவெல்லாம் நம்மை விட்டு நீங்கும் தன்மையன.

7. **ஒன்றை நினைக்கின தொழிந்திட் டொன்றாகும்**
**அன்றி அதுவரினும் வந்தெய்தும் - ஒன்றை**
**நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்**
**எனையாளும் ஈசன் செயல்.**

ஒன்றை நினைத்து அதற்குப் பதிலாக வேறொன்று கிடைப்பதும் அல்லது அப்பொருளே கிடைப்பதும், நினைக்காத ஒன்று எதிர்பாராமல் வந்து கிடைப்பதும் இயற்கை. இவையெல்லாம் நம்மை ஆள்கின்ற இறைவனின் செயல்களாகும்.

8. **உண்பதுநாழி உடுப்பது நான்கு முழம்**
**எண்பது கோடி நினைந்தெண்ணுவ – கண்புதைந்த**
**மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்**
**சாந்துணையும் சஞ்சலமே தான்.**

மண்ணில் வாழும் மக்களுக்குத் தேவையானவை உண்பதற்கு படியரிசிச் சோறும் உடுத்திக் கொள்ள நான்கு முழத் துணியுமாகும். ஆனால் மனத்தில் கோடிக் கணக்கில் சிந்தனைகளை விளைவித்துக் கழியும் கண்மூடித்தனமான மனித வாழ்க்கையானது மண்ணால் செய்யப்பட்ட பாத்திரம் போன்று நிலையில்லாதது. உயிர் சுமந்து உடல் வாழ்கின்ற வரை வாழ்வானது துன்பம் நிறைந்ததாகவே இருக்கும்.

9. **மரப்பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி**
**இரந்தழைப்பார் யாவரும் அங்கில்லை – சுரந்தமுதம்**
**கற்றா தரல்போல் கவரா தளிப்பாரேல்**
**உற்றார் உலகத் தவர்.**

மரங்கள் பழுக்கின்ற காலத்தில் கனிகளைக் கொடுக்கின்ற போது யாரும் கூவி அழைக்காமல் வௌவால்கள் தானே கனியிருக்கும் மரத்தைத் தேடி வந்துசேரும். பசுக்கள் தன் கன்றுகளுக்குக் காலம் அறிந்து பால் கொடுத்து அதன் பசிதீர்க்கும்.

அது போல் தன்னை நாடி வந்தவர்களுக்கு மறைக்காமல் இருக்கின்ற பொருளைக் கொடுத்துத் துன்பம் தீர்த்தால் உலகத்தவர் யாவரும் உறவினர்கள் ஆவார்கள்.

10. **தாம்தாம்முன் செய்தவினை தாமே அனுபவிப்பார்**

**பூந்தாமரை யோன் பொறிவழியே – வேந்தே**

**ஒறுத்தாரை என்செயலாம் ஊரெல்லாம் ஒன்றா**

**வெறுத்தாலும் போமோ விதி**.

பூமியில் வாழும் மக்கள் அனைவரும் தங்களின் முற்பிறவியில் அவரவர்கள் செய்த நல்வினை தீவினைகளின் அடிப்படையில் படைப்புக் கடவுளான பிரம்மன் விதித்தபடி நன்மைகளையும் தீமைகளையும் அனுபவிப்பார்கள். ஊரில் உள்ள மக்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து துரத்தினாலும் விதியானது விட்டு விலகாது. நடப்பது நடந்தே தீரும்.

**ஆத்திச்சூடி – பாரதிதாசன்**

1. அழுவன் கோழை
2. ஆவின் பால் இனிது
3. இரவினில் தூங்கு
4. ஈவது மகிழ்ச்சி
5. உள்ளதைப் பேசு
6. ஊமைபோல் இராதே
7. எதையும் ஊன்றிப் பார்
8. ஏசேல் எவரையும்
9. ஐந்திற் கலை பயில்
10. ஒற்றுமை வெல்லும்
11. ஓரம்போ தெருவில்
12. ஔவை தமிழ்த்தாய்
13. கணக்கில் தேர்ச்சிகொள்
14. சரியாய் எழுது

15. தமிழ் உன் தாய்மொழி
16. நல்லவனாய் இரு
17. பல்லினைத் தூய்மை செய்
18. மற்றவர்க் குதவி செய்
19. வண்டி பார்த்து நட
20. கல்வி கற்கண்டு
21. கால் விலங்கு கல்லாமை
22. கிழிந்தாடை தீது
23. கீரைஉடற்கினிது
24. குப்பை ஆக்காதே
25. கூனி நடவேல்
26. கெட்ட சொல் நீக்கு
27. கேலி பண்ணாதே
28. கைத்தொழில் பழகு
29. கொடியரைச் சேரேல்
30. கௌவி உமிழேல்
31. சமமே அனைவரும்
32. சாப்பிடு வேளையோடு
33. சிரித்துப் பேசு
34. சீறினாற் சீறு
35. செக்கெண்ணெய் முழுகு
36. சேவல்போல் நிமிர்ந்து நில்
37. சை என இகழேல்
38. சொல்லை விழுங்கேல்
39. சோம்பல் ஒரு நோய்
40. தந்தை சொற்படி நட
41. தாயைக் கும்பிடு

42. தின்பாரை நோக்கேல்

43. தீக்கண்டு விலகி நிர்

44. துவைத்ததை உடுத்து

45. தூசியாய் இராதே

46. தென்னையின் பயன்கொள்

47. தேன் ஈ வளர்த்திடு

48. தைப் பொங்கல் இனிது

49. தொலைத்தும் தொலைத்திடேல்

50. தோற்பினும் முயற்சி செய்

51. நரிச் செயல் கான்றுமிழ்

52. நாட்டின் பகை தொலை

53. நினைத்ததை உடன் முடி

54. நீந்திப் பழகு

55. நுணல் வாயாற் கெடும்

56. நூல்பயில் நாடொறும்

57. நெல் விளைவித்துக் குவி

58. நேரம் வீணாக்கேல்

59. நைந்த தறுந்திடும்

60. நொய்யும் பயன்படும்

61. நோய் தீயொழுக்கம்

62. பனைப்பயன் பெரிது

63. பாட்டிக்குத் தொண்டு செய்

64. பிறர்நலம் நாடு

65. பீளை கண்ணிற் கொளேல்

66. புற்றிற் கை விடேல்

67. பூச்செடி வளர்த்திடு

68. பெற்றதைக் காத்தல் செய்

69. பேராசை தவிர்

70. பையும் பறிபோம்

71. பொய் பேசாதே

72. போர்த் தொழில் பழகு

73. மாடாடு செல்வம்

74. மிதியொடு நட

75. மீன் உணல் நன்றே

76. முத்தமிழ் முக்கனி

77. மூத்தவர் சொற்கேள்

78. மெத்தெனப் பேசு

79. மேலவர் கற்றவர்

80. மையினம் காத்தல் செய்

81. மொழிகளில் தமிழ் முதல்

82. வள்ளுவர் நூல் பயில்

83. வாழ்ந்தவர் உழைத்தவர்

84. விடியலிற் கண்விழி

85. வீரசைப் போற்று

86. வெல்லத் தமிழ் பயில்

87. வேர்க்க விளையாடு

88. வைய நூல் ஆய்வு செய்.

## வினாக்கள்

1. முதுமொழிக் காஞ்சி எடுத்துரைக்கும் அறங்களை விவரிக்க.
2. எளிய பத்து கூறும் அறங்களை விளக்குக.
3. துவ்வாப்பத்து எடுத்துரைக்கும் அறங்களை விளக்குக.
4. மூதுரை எடுத்துரைக்கும் தனிமனிதன் கடைபிடிக்க வேண்டிய மாண்புகளை எடுத்துரைக்க.
5. வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய நன்நெறிகளாக நல்வழி எடுத்துரைக்கும் நீதிக்கருத்துக்களை விளக்கு.
6. பாரதிதாசன் கூறும் அறச்செயல்களை கூறுக.

## அலகு – 5

## திருமந்திரம்

## யாக்கை நிலையாமை

1. **மண்ஒன்று கண்டீர் இருவகைப் பாத்திரம்**
**திண்ணென்று இருந்தது தீவினை சேர்ந்தது**
**விண்ணின்று நீர்வழியின் மீண்டுமண் ஆனாற்போல்**
**எண்இன்றி மாந்தர் இருக்கின்ற வாறே.**

ஒரே தன்மையுடைய மண். மண் ஒன்றுதான். அதனாலாய கலயங்கள் இரண்டு. ஒரு பாத்திரம் தீயினால் சுடப்பட்டதால் உறுதி உடையதாக இருந்தது. இன்னொரு பாத்திரம் பச்சை மண். சுடப்படாதிருந்தது. அது மழை பெய்து தண்ணீரில் நனைந்தவுடன், கரைந்து மீண்டும் களி மண்ணோடு மண்ணாகக் கலந்து விட்டது. இது போலத்தான் உலக மக்கள் பலரும் உள்ளனர். தீயால் மண்கலம் திடப்படும். தீயிடப்படா பச்சைமண் கலம் நீரில் கரையும். எனவே இறையருளை உயிர்கள் உறுதுணையாகக் கொள்ள வேண்டும் என்பது குறிப்பு.

**கூடவருவது பாவ புண்ணியமே**

2. **பண்டம்பெய் கூரை பழகி விழுந்தக்கால்**
**உண்டஅப் பெண்டிரும் மக்களும் பின்செலார்**
**கொண்ட விரதமும் ஞானமும் அல்லது**
**மண்டி அவருடன் வழிநட வாதே.**

பண்டம் என்றால் பொருள். இங்கே நல்வினை தீவினைகளை நுகர்வதற்கென்றே பெற்ற உடல், பழசாகி வயது முதிர்ந்து, தளர்ந்து விழுந்துவிட்டால், உயிருடன் இருக்கும்போது அவ்வுடலால் பயன் அடைந்த மனைவி மக்கள் அந்த உயிர் போன வழியே போக மாட்டார்கள். அதாவது, இறந்த உடலைத் தொடர்ந்து தாங்களும் இறந்துவிட மாட்டார்கள். ஆனால், அந்த உயிர்வாழும் போது செய்த நல்லறம், மேற்கொண்ட ஒழுக்கம், புண்ணியச் செயல்கள் அந்த உயிர்க்குத் துணையாக

நெருங்கி நிழலாகச் செல்லும். மற்றவை எதுவும் கூட வராது. கூட வருவது செய்த புண்ணிய பாவங்களே.

**யாரும் கூட வாரார்**

3. **ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்**
**பேரினை நீக்கிப் பிணம்என்று பேரிட்டுச்**
**சூரைஅம் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு**
**நீரினில் மூழ்கி நினைப்பு அழிந்தார்களே.**

ஊரில் உள்ள மக்கள் எல்லாம் ஒன்று கூடி ஒப்பார் வைத்து ஓலமிட்டு அழுது புலம்பி இறந்த அந்த உடலுக்குரிய உண்மைப் பெயரை ஒதுக்கிவிட்டுச் செத்த உடல் என்று பெயர் சொல்லிச் சுடுகாட்டில் கொண்டு போய் வைத் நெருப்பு மூட்டி எரித்துவிட்டுக் குளத்திலோ, ஆற்றிலோ குளித்து முழுகிவிட்டு, அதோடு இறந்த அவரைப் பற்றிய நினைவையும் அடியோடு மறந்து விடுகிறார்களே! என்ன மனிதர்கள்! என்ன வாழ்க்கை! என்ற இகழ்ச்சிக் குறிப்பு, அழிந்தார்களே என்பதில் உள்ள ஏகாரம்.

**போன உயிர் மீளாது**

4. **காலும் இரண்டும் முகட்டலகு ஒன்றுள**
**பாலுள் பருங்கழி முப்பத் திரண்டுள**
**மேலுள கூரை பிரியும் பிரிந்தால்முன்**
**போலுயிர் மீளப் புக அறியாதே.**

இரண்டு கால்கள். முதுகுத் தண்டாகிய உத்தரம் ஒன்று. பக்கவாட்டில் சட்டங்கள் போன்ற விலா எலும்புகள் உச்சந்தலை மீண்டும் இரண்டு கால்களாகிய சுவரின் மேல் முதுகுத் தண்டாகிய உத்திரத்தைச் சாத்தி, வலுவான சட்டங்கள் முப்பத்திரண்டை பக்கவாட்டில் சாத்தி, தசையும் சதையும் சேர்த்துப் பூசிச் செய்தமைத்த கூரை வீடு இந்த உடல். இதில் உள்ளே இருக்கும் உயிர் ஒரு நாள் கபாலம் திறக்க வெளியேறி விட்டால், மீண்டும் உள்ளே வர இயலாது.

**மூச்சு நின்றது முதுகாட்டுப் பிணமாக**

5. **சீக்கை விளைந்தது செய்வினை மூட்டுஇற்ற**
**ஆக்கை பிரிந்தது அலகு பழுத்தது**
**மூக்கினில் கைவைத்து மூடிட்டுக் கொண்டுபோய்க்**
**காக்கைக்குப் பலி காட்டிய வாறே.**

முன்செய்த வினைகளின் தொடர்பு முடிவுற்ற இறுதிநாள் வந்துற்றது. உடலை விட்டுவிட்டு உயிர் போனது. உடல் பிணமானது. உடல் எலும்புகள் இறுக்கம் விட்டுத் தளர்ந்தன. அருகில் இருந்தவர்கள் மூக்கினில் கை வைத்துப் பார்த்தார்கள். மூச்சு ஓடவில்லை. எனவே, உயிர் போய்விட்டதை உறுதி செய்து கொண்டு, உடலை மூடி எடுத்துக் கொண்டு போய்க் காகங்களுக்குப் பலியிட்டு இறுதிச் சடங்குகளைச் செய்தனர். உயிர் போன உடலுக்கு ஏது மரியாதை.

**ஆடி அடங்கிற்று ஆனந்தம் எல்லாம்**

6. **அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்**
**மடக் கொடியடிரொடு மந்தணம் கொண்டார்**
**இடப்பக்கமே இறை நொந்தது என்றார்**
**கிடக்கப் படுத்தார் கிடந்து ஒழிந்தாரே.**

வாய்க்குச் சுவையாக நன்கு சமைத்த உணவை உண்டு மகிழ்ந்தார். மனையாளோடு கூடிக் குலவி இன்புற்று மகிழ்ந்தார். திடீரென்று ஒருநாள் இடதுபக்கம் நெஞ்சு வலிக்கிறது என்றார். உடனே உடல் கீழே கிடக்கப்படுத்தார். பின்னர் எழுந்திருக்கவே இல்லை. இறந்தேபோனார். இதுதான் வாழ்க்கை. இதுதான் உடல் அழியக் கூடியது என்பதற்கு அடையாளம்.

**மாண்டார் மீண்டு வாரார்**

7. **மன்றத்தே நம்பி மாடம் எடுத்தது**
**மன்றத்தே நம்பி சிவிகை பெற்றேறினால்**
**மன்றத்தே நம்பி முக்கோடி வழங்கினான்**

**சென்று அந்தாஎன்னத் திரிந்திலன் தானே.**

ஆண்களில் சிறந்தவனை நம்பி என்று சொல்வதுண்டு. தலைமகன் தனது பழைய வீட்டைப் புதுப்பித்து மேல்மாடம் கட்டுவித்தான். பொற்சிவிகையிலே ஏறிப் பலரும் காணப் பவனிவந்தான். எல்லார்க்கும் புத்தாடைகள் வழங்கினான். என்ன செய்து என்ன! ஒரு நாள் திடீரென்று அவன் செத்துப் போனான். அவன் பெற்ற பிள்ளைகள் அப்பா என்று கதறி அழுதும், அவன் திரும்பி வரவேயில்லை. போனவன் போயே போனான். மாண்டவர் மீண்டு வாரார். யாக்கை நிலையாது என்கிறது பாடல். மன்றம் என்பதற்கு வீடு என்றும், தன் திருமணநாளில் என்றும் பொருள் கூறுவர்.

**நேசம் பாசம் நெருப்பில் எரிந்தது**

8. **வாசந்தி பேசி மணம்புணர்ந்த அப்பதஜ**
**நேசம் தெவிட்டி நினைப்புஒழிவார் பின்னை**
**ஆசந்தி மேல்வைத்து அமைய அழுதிட்டுப்**
**பாசத்தீ சுட்டுப் பலி ஆட்டினார்களே.**

பெண் பேசி திருமணம் நிச்சயம் செய்து, மணம் முடித்துக் கூடிக்கலந்து மகிழ்ந்திருந்த தலைவன் மேல் வைத்த ஆசை நெருக்கம் காலப்போக்கில், திகட்டிப்போய்ச் சலிப்படையச் செய்து விட, அவனுடைய பாச நினைவுகளையும் பின்னர் மறந்துவிடுவர். இந்த நிலையில் கணவன் இறந்துவிட்டால், அவன் உடலைப் பாடையின் மேல்வைத்து, ஒப்பாரி வைத்து அழுது புலம்பித் தங்களின் அன்புப் பாசத்துக்கே தீவைத்துப் பிண்டம் போட்டார்களே! என்ன கொடுமை! இருக்கும்போது இருந்தென்ன! உயிர் போனபின் நடந்தென்ன? இதுதான் நிலையா யாக்கையின் நிலை, என்கிறது பாடல்.

**மூச்சடங்கப் பேச்சடங்க உயிரடங்கிப் போனது**

9. **கைவிட்டு நாடிக் கருத்தழிந்து அச்சற**
**நெய்அட்டிச் சோறுண்ணும் ஐவரும் போயினர்**
**மைஇட்ட கண்ணாளும் மாடும் இருக்கவே**
**மெய்விட்டுப் போக விடைகொள்ளு மாறே.**

மருத்துவர்கள் நாடி விழுந்து விட்டது, இனித் தாங்காது மருந்துவம் பார்த்துப் பயனில்லை என்று கைவிட்டு விட்டார்கள். நினைவு தடுமாறிவிட்டது. உடலில் ஒட்டிய உயிர் மூச்சு ஒடுங்கி விட்டது. வாசமிக்க நெய்விட்டுச் சமைத்த சுவையான உணவை உண்டு மகிழ்ந்து மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலன்களும் செயலிழந்து விட்டனர். ஆனால் மணந்து கொண்ட, மை பூசிய கண்களுடைய மனைவி இருக்கிறாள். தேடிய செல்வம் இருக்கிறது. என்ன இருந்து உன்ன செய்ய? உயிர் உடலை விட்டுப் போய் விட்டதே! உயிர் உடலை விட்டு விடை பெறும் இப்படித்தான்.

**துன்பம் துயரம் அந்திம காலம்**

10. **பந்தல் பிரிந்தது பண்டாரம் கட்டற்ற**
**ஒன்பது வாசலும் ஒக்க அடைத்தன**
**துன்புறு காலம் துரிசுவர மேன்மேல்**
**அன்புடை யார்கள் அழுது அகனறார்களே.**

உயிரின் மேல் அமைத்த உடலாகிய பந்தல் பாழடைந்து விட்டது. உயிர்ச் செல்வம் வறண்டு விட்டது. ஒன்பது வாசல் கதவுகளும் ஒரே நேரத்தில் அடைபட்டு விட்டன. உயிர்க்கு முடிவு காலம் வந்துவிட்டது. அன்புடைய சுற்றத்தார்கள் அழுது புலம்பினார்கள். அவர்களும் போய் விட்டார்கள். இது தான் வாழ்க்கை, உலகியல் என்பது உணர்த்தும் பாடல் இது.

**முடியுடை மன்னர்க்கும் முடிவு இதுதான்**

11. **நாட்டுக்கு நாயகன் நம்ஊர்த் தலைமகன்**
**காட்டுச் சிவிகை ஒன்றுஏறிக் கடைமுறை**
**நாட்டார்கள் பின்செல்ல முன்னே பறைகொட்ட**
**நாட்டுக்கு நம்பி நடக்கின்ற வாறே.**

நாட்டுக்குத் தலைவனாக இருந்தவன். நமது ஊரில் மிகுந்த சிறப்புக்குரிய பெருமகனாகத் திகழ்ந்தவன். இன்று பாடையில் ஏறிக் கடைசிப் பயணம் போகிறான். நாட்டு மக்கள் பின் தொடர்ந்து வர, முன்னே பறை ஒலிக்கப் போகிறது இறுதி ஊர்வலம். நாட்டுக்குத் தலைவனாக, ஊருக்குள் உயர்ந்தவனாக இருந்தவன் இன்று

பெருகின்ற மரியாதை இதுதான். உடலில் உயிர் இருக்கும் இன்று பெறுகின்ற மரியாதை இதுதான். உடலில் உயிர் இருக்கும் வரைதான் தலைமையும் தகுதியும் பெருமையும். உயிர் போய் விட்டால் உடல் பிணம் தான், போகுமிடம் சுடுகாடு தான் என்பது பாடல் கருத்து.

**கூற்றம் வந்தது, கோலம் கலைந்தது**

11. **முப்பதும் முப்பதும் முப்ப்து அறுவரும்**
**செப்ப மதிள்உடைக் கோயில்உள் வாழ்பவர்**
**செப்ப மதிள்உடைக் கோயில் சிதைந்தபின்**
**ஒப்ப அனைவரும் ஓட்டெடுத் தார்களே.**

தொண்ணூற்று ஆறு தத்துவங்களும் செம்மையாக அமைந்த பாதுகாப்பு மதிலுடைய அந்தக் கோவிலுக்குள் வாழ்பவர், சிறப்பாகச் செய்யப்பட்ட பாதுகாப்பு மதிலுடைய அந்தக் கோவில் பாழடைந்து, பழுதடைந்து கெட்ட பிறகு, அந்தக் கோவிலுள் இருந்தவர்கள் அனைவரும் ஒருசேர ஓடிவிட்டார்கள். உயிர் போய் உடல் அழியத் தத்துவங்கள் தாமே நீங்கும் என்பது கருத்து.

**மாடு மனை உறவு காடு வரைதான்**

12. **மதுஊர் குழலியும் மாடும் மனையும்**
**இதுஊர் ஒழிய இதணமது ஏறிப்**
**பொதுஊர் புறம்சுடு காடாது நோக்கி**
**மதுஊர் வாங்கியே வைத்தகன் றார்களே.**

தேன் ஊறும் மலர்கள் சூடிய கூந்தலுடைய மனைவியும் மக்களும் செல்வமும் வீடும் என்று இருந்த இந்த ஊராகிய உடலில் இருந்து உயிர் போய்விட, இறந்த உடலைப் பாடையில் ஏற்றி ஊருக்கு வெளியே பொதுவாக உள்ள சுடுகாட்டை நோக்கிச் சென்று துன்ப மயக்கத்துடனே, பாடையிலிருந்து உடலை எடுத்துச் சிதையில் வைத்துத் தீமூட்டிச் சென்றுவிட்டார்கள்.

**தேடிய செல்வம் கூட வராது**

13. **வைச்சுஅகல் வுற்றது கண்டு மனிதர்கள்**
**அச்சு அகலாதுஎன நாடும் அரும்பொருள்**
**பிச்சது வாய்ப்பின் தொடர்வுறு மற்றவர்**
**எச்சகலா நின்று இளைக்கின்ற வாறே.**

இறந்தவர்கள் நினைப்பும் மறந்து விடுவது உலக இயல்பாக இருப்பதைக் கண்டும், மனிதர்கள் உடலாகிய அச்சை விட்டு உயிர் பிரியாது என்ற நினைப்பில் ஓடிஓடி அவர்கள் தேடும் அருமையான பொருட்கள் மேல் ஆசை வைத்தத் தேடுவதைத் தொடர்ந்து, மற்றவர்களும் ஆசைப்பட்டு அலைந்து அவர்களும் தங்கள் பெருமை இழந்து சிறுமை உறுகிறார்களே! இதை எண்ணிப் பார்க்க வேண்டாமா என்னும் ஏளனம், இரக்கக் குறிப்பு பாடல் பொருள்.

**பலநாள் உறவு ஒரு நாளில் போகும்**

14. **ஆர்தெழு சுற்றமும் பெண்டிரும் மக்களும்**
**ஊர்த்துறைக் காலே ஒழிவர் ஒழிந்தபின்**
**வேர்த்தலை போக்கி விறகிட்டு எரிமூட்டி**
**நீர்த்தலை மூழ்குவர் நீதிஇல் லாரே.**

வாழும்போது, போற்றிக் கொண்டாடி உறவாட வந்த உறவினரும் மனைவி மக்களும், ஊருக்கு வெளியே உள்ள நீராடும் இடம்வரை வருவர். வந்த பின், தலை மூழ்கி, உடலைச் சுடலையில் வைத்துத் தீமூட்டித் தலை மூழ்குவர். இந்த அன்பில்லாத மக்கள், பல காலம் பழகிய உறவுக்குச் சில நொடிகளில் முழுக்குப் போட்டு விடுகிறார்களே! நியாயமா, இது! இல்லை என்பதால், இவர்களை நீதியில்லார் என்றார்.

**இறந்த உடலுக்கு இதுதான் மரியாதை**

15. **வளத்துஇடை முற்றத்துஓர் மாநிலம் முற்றும்**
**குளத்தின் மண்கொண்டு குயவன் வனைந்தான்**

**குடம்உடைந்தால் அவை ஓடென்று வைப்பர்**
**உடல்உடைந்தால் இறைப் போதும் வையாரே.**

உலகம் முழுவதும் உயிர்த்தோற்றம் இப்படித்தான் நிகழ்கிறது. இடையின் முன்பாகக், கருப்பையாகிய குளத்திலிருந்து, உயிரணுக்களான மண்கொண்டு உயிர்கள் உற்பத்தியாகின்றன. இது உயிர்த் தோற்றம். இன்னொரு பக்கம், குளத்தில் மண்ணெடுத்துக் குயவன் சட்டிபானை செய்கிறான். அவன் செய்த மண் குடம் உடைந்து விட்டால் அதை ஓடென்று ஒதுக்கி வைப்பார்கள். ஆனால், உயிர்த் தலைவன் உற்பத்தி செய்த உடல், உயிர் போய்ப் பிணமாகி விட்டால் நொடிப் பொழுது கூட அதை வீட்டில் வைத்திருக்க மாட்டார்கள்.

**உயிர் போனது எங்கோ**

16. **ஐந்து தலைப்பறி ஆறு சடைஉள**
**சந்தவை முப்பது சார்வு பதினெட்டுப்**
**பந்தலும் ஒன்பது பந்தி பதினைந்து**
**வெந்து கிடந்தது மேல் அறியோமே.**

மனித உடல் ஐம்புலன்கள், ஆறு ஆதார நிலைகள் உள்ளன. முப்பது எலும்பு மூட்டுகளும், அதன்மேல் சார்த்தப்பட்டுள்ள பதினெட்டு எலும்புகளும், ஒன்பது இந்திரியங்களும், வரிசையாக அமைந்த பதினைந்து எலும்புகளும் சேர்த்தமைத்த உடல் நெருப்பில் வெந்து கிடந்தது. ஆனால் அதற்குள் இருந்த உயிர் போனதெங்கே? தெரியவில்லை.

**அழியும் உடம்பிது அறிக**

17. **அத்திப் பழமும் அரைக்கீரை நல்வித்தும்**
**கொத்தி உலைப்பெய்து கூழ்அட்டு வைத்தனர்**
**அத்திப் பழத்தை அரைக்கீரை வித்ண்ணப்**
**கத்தி எடுத்தவர் காடு புக்கரே.**

அத்திப் பழமும் அரைக்கீரை விதையும் சேர்த்து, உலையில் போட்டு, உண்ணக் கூழ் செய்து வைத்தனர் என்பது மேலோட்டமான செய்தி. அதன் உண்மைப்

பொருள் உடலும் உயிரும் கருப்பையில் உயிர்ப்படைத் வளர்ந்து உடலெடுத்து வாழத் தொடங்கியது. காலப்போக்கில் ஒரு நாள் உயிர் உடலை விட்டுப் போய் விட்டது. உடனே அழுது புலம்பி மற்றவர்கள் அந்த உடலைச் சுடுகாட்டுக்குக் கொண்டு சென்றார்கள்.

**வீடு பழுதானால் வீழ்ந்து படும்**

18. **மேலும் முகடில்லை கீழும் வடிம்பில்லை**
**காலும் இரண்டு முகட்டலக்கு ஒன்றுண்டு**
**ஓலையான் வேய்ந்தவர் ஊடு வரியாமை**
**வேலையான் மேய்ந்ததோர் வெள்ளித் தளிகையே.**

உடலுக்கு மேலே உள்ள தலைக்கு மூடி இல்லை; கீழேயும் அடித்தளம் இல்லை. இரண்டு கால்கள் மட்டும் இருக்கின்றன. நடுக்கால் முதுகுத் தண்டின் மேலே கழுகுமுனை ஒன்று உள்ளது. தலைக் கூரையைத் தசையால் மூடியவர் சுழுமுனை நாடி வழியே பிராணனைச் செலுத்தத் தவறினர். இதனால் அழகுறச் செய்யப்பட்ட வெண்ணிறச் சுக்கிலத்தாலான இந்த உடம்பு அழிகிறது.

**மரணம் மனிதனின் துயரம்**

19. **கூடம் கிடந்தது கோலங்கள் இங்கில்லை**
**ஆடும் இலையமும் அற்றது அறுதலும்**
**பாடுகின் றார்சிலர் பண்ணில் அழுதிட்டுத்**
**தேடிய தீயினில் தீயவைத் தார்களே.**

வெளிப்படையாகத் தெரியும் பொருள் வீடு இருக்கிறது; அதிலே கோலங்கள் அழகுகள் இல்லை. ஆட்டபாட்டம் இல்லை என்பது பாடலின் உட்பொருள். உடல் வெறும் கூடாகிக் கீழே கிடக்கிறது. அது முன்பு செய்து கொண்டிருந்த அழகு அலங்காரங்கள் இப்போது இல்லை. அந்த உடலின் உள்ளே ஓடிக் கொண்டிருந்த பிராண ஓட்டம் ஓய்ந்து விட்டது. ஓய்ந்ததனால் சிலர் ஒப்பாரி வைத்து அழுது, தீயை மூட்டிச் செத்த உடலை எரித்து விட்டார்களே. இருக்கும் வரைதான் எல்லாம். இறந்தால் பிணம்தான் என்பது குறிப்பு.

**பிறப்பும் இறப்பும் பெருந்துயர் அறிக**

20. **முட்டை பிறந்தது முந்நூறு நாளினில்**
**இட்டது தானிலை ஏதேனும் ஏழைகாள்**
**பட்டாது பார்மணம் பன்னிரண்டு ஆண்டினில்**
**கெட்டது எழுபதில் கேடு அறியீரே.**

கருமுட்டை முந்நூறு நாட்களில் ஒரு குழந்தையாகப் பிறந்தது. பிறந்த குழந்தை உடல் அமைப்பு எதுவும் நாம் விரும்பியபடி வந்ததல்ல அறிவிலிகளே! இப்படிப் பிறந்த குழந்தை பன்னிரண்டு ஆண்டுகளில், உலக இயல்புகளை உணர ஆரம்பிக்கும். பிறகு எழுபது வயதில் இறந்துபடும். இவ்வளவு துன்பம் இப்பிறப்பில். ஏ….மனிதர்களே! நீங்கள் இதை அறிந்துணர மாட்டீர்களா? உடல் அநித்தியம் என்பதை உணரமாட்டீர்களா என்பது பொருள்.

**பகலும் இரவும் போலப் பிறப்பும் இறப்பும்**

21. **இடிஞ்சில் இருக்க விளக்கெரி கொண்டான்**
**முடிஞ்சது அறியார் முழங்குவர் மூடர்**
**விடிஞ்சு இருளாவது அறியா உலகம்**
**படிஞ்சு கிடந்து பதைக்கின்ற வாறே.**

அகல் விளக்கு இருக்கின்றது ஆனால்,அதில் சுடர் விட்டுக் கொண்டிருந்த ஒளியைக் காலன் கவர்ந்து சென்றுவிட்டான். உடல் அழியக் கூடியது என்பதை உணராத மூடர்கள் வெறும் பேச்சுப் பேசுவார்கள். பொழுது விடிந்தால் பிறகு இருட்டு வரும். பகலும் இரவும் மாறி மாறி வரும் என்பதை உணராமல், உலகத்து மாந்தர், சாகும் உடலைச் சாகவதமானது என்றெண்ணிக் கொண்டு, வருத்தப்படுவார்களே! என்ன அறியாமை என்பது குறிப்பு.

**நந்தியைத் துதிப்பார்க்கு நரகம் இல்லை**

22. **மடல்விரி கொன்றையன் மாயன் படைத்த**
**உடலும் உயிரும் உருவம் தொழாமல்**

**இடர்படர்ந் தேழா நரகிற் கிடப்பர்**

**குடர்பட வெம்தமர் கூப்பிடு மாறே.**

இதழ்வித்த கொன்றை மலர் மாலை அணிந்த மாயன் படைத்த இந்த உடலில் உள்ளே, உள் ஒளிர் சோதியாக விளங்கும் இறைவனை வணங்காமல் வாழ்பவர், மிக விரும்பிய சுற்றத்தார்கள், குடல் அறுந்து விழக் கூப்பிட்டுக் கதறும் வண்ணம், வருந்தும் நரகங்கள் ஏழினும் வதைபடுவர்.பரமனைப் பணியாதார் படு நரகில் வீழ்வர்.

**மன்னருக்கும் மரணம் உண்டு**

23. **குடையும் குதிரையும் கொற்றவாளும் கொண்டு**

**இடையும் அக்காலம் இருந்து நடுவே**

**புடையு மனிதனார் போகும் அப்போதே**

**அடையும் இடம்வலம் ஆருயிர் ஆமே.**

வெண்கொற்றக் குடையும், விரைந்தோடும் குதிரைப் படையும் அரசற்குரிய வீர வாளும், செங்கோலும் கைக்கொண்டு, செல்லும் காலத்திலும், நடுவிலும் கூடவும் சுற்றிலும் மனிதல் சூழ இருக்கும் காலத்திலும் கூட, உடலில் உள்ள இந்த அரிய உயிர் இடம் வலமாகச் சென்று அடங்கிவிடும்.

**உயிரற்ற உடலுக்கு ஏது பாராட்டும் பழியும்**

24. **காக்கை கவரில்என் கண்டார் பழிக்கில்என்**

**பாற்றுளிப் பொய்யில் என் பல்லோர் பழிச்சில்என்**

**தோற்பையுள் நின்று தொழில்அறச் செய்தூட்டும்**

**கூத்தன் புறப்பட்டுப் போனஇக் கூட்டையே.**

காகங்கள் கொத்தித் தின்றால் என்ன? கண்டவர்கள் தூற்றினால் என்ன? பால் துளிகளை மேரே தெளித்தால் என்ன? பலரும் புகழ்ந்து பேசினால் தான் என்ன? தோலாகிய பைக்குள் இருந்து கொண்டு, இந்த உடல் தொழில்பட, வினை செய்ய, முற்றிலும் இவ்வுடல் இயங்கக் காரணமாக இருக்கிற உடலை இயக்குகிறசூத்திரதாரி உயிர் உடலை விட்டுப் போன பின்னே, உயிரற்ற உடலுக்கு பாராட்டு பால் தெளிப்பு எது செய்துதான் என்ன பயன் என்பது பாடலின் பொருள்.

# செல்வம் நிலையாமை

1. **அருளும் அரசனும் ஆனையும் தேரும்**
**பொருளும் பிறர்கொள்ளப் போவதன் முன்னம்**
**தெருளும் உயிரொடும் செல்வனைச் சேரின்**
**மருளும் பினையவன் மாதவம் அன்றே.**

அருளுடைய அரச பதவியும், யானைப் படையும், தேர்ப்படையும் திரண்ட பெரும் செல்வமும் ஆகிய இவற்றை எல்லாம் பிறர் கொண்டு செல்வதற்கு முன்பாகத் தெளிந்த உள்ளத்தோடு, உயிர்ச் செல்வனாகிய இறைவன் அருளை அடையப் பெற்றுவிட்டால், பிறகு அவன் பெரிய தவத்திலே கூட மயங்கமாட்டான்.

## செல்வ மழை பொழியும் சிவன் அருள்

2. **இயக்குறு திங்கள் இருட்பிழம்பு ஒக்கும்**
**துயக்குறு செல்வத்தைச் சொல்லவும் வேண்டா**
**மயக்கற நாடுமின் வானவர் கோனைப்**
**பெயல்கொண்டல் போலப் பெரும்செல்வ மாமே.**

நன்கு ஒளி வீசிக்கொண்டிருந்த நிலவு ஒளிஇழந்து கரிக்கட்டை ஆனதைப் போல, தேயும் செல்வம் குறைவதால் வரும் துன்பத்தைச் சொல்லவும் வேண்டாம். எனவே, பொருட்செல்வத்தின் மேல் வைத்த மயக்கம் பற்று நீங்கித் தேவாதி தேவர்கள் தலைவன் திருவருள் துணையை நாடுங்கள். மேகம் பொழிவது போல, உங்களுக்கு பெருஞ்செல்வம் மழையைப் பொழியும்.

## உயிர் உடைமை உன்னுடையதல்ல

3. **தன்னது சாயை தனக்குத வாதுகண்டு**
**என்னது மாடென்று இருப்பார்கள் ஏழைகள்**
**உன்உயிர் போம்உடல் ஒக்கப் பிறந்தது**
**கண்ணது காணொளி கண்டு கொளீரே.**

தன் நிழல் தனக்கு உதவாது.நிழல் நம் கூடவே வரும் என்றாலும் நின்று அதில் நாம் இளைப்பாற முடியுமா? முடியாது! இந்த உண்மை தெரிந்திருந்தும் இது என்னுடைய செல்வம், நான் தேடியது, எனக்கு உபயோகமாக இருக்கும் என்று நினைப்பவர் ஏமாளிகள். உன் உயிர், நீ பிறக்கும் போது, உன் உடலோடு சேர்ந்து பிறந்தது, என்றாலும், அது ஒரு நாள் உன் உடலை விட்டுப் போய்விடும். எனவே அகக்கண் கொண்டு உள் ஒளியை உணர்ந்து உய்வீகளாக.

**காட்டிய செல்வம் கைவிட்டுப் போகும்**

4. **ஈட்டிய தேன்பூ மணம்கண்டு இரதமும்**
**கூட்டிக் கொணர்ந்துஒரு கொம்பிடை வைத்திடும்**
**ஓட்டித் துரத்திட்டு அதுவலி யார்கொளக்**
**காட்டிக் கொடுதது கைவிட்ட வாறே.**

ஒரு பூவில் தேன் நிறைந்திருப்பதை அந்தப்பூவின் வாசத்தைக் கொண்டே அறிந்து வந்த வண்டு, அந்தத் தேனைத் திரட்டிக் கொண்டு போய் ஒரு மரக் கொம்பில் கூடுகட்டிப் பாதுகாக்கும். இப்படித் தேனீக்கள் சேர்த்த தேனடையை மனிதர்கள் தீப்பந்தம் கொளுத்தித் தேனீக்களை விரட்டி ஓட்டிவிட்டுத் தேனைத் தாங்கள் எடுத்துக் கொள்வர். அதைப் போலவே, ஒருவர் தேடித் திரட்டிய செல்வத்தையும் வலியவர் ஒருநாள், செல்வம் உடையவர்கள் வருந்தக்கைக் கொள்வர். ஈட்டிய நிறைந்த உடல் வலிமை மிக்கவர்கள் காட்டிக் கொடுத்து கைவிட்டவாறே அதாவது, தேன்கூடு மற்றவர் கண்ணில் படும்படி காட்டப்பட்டது. அதுதான் இருப்பதைக் காட்டிக்கொடுத்தது. எனவே, கைவிட்டுப் போயிற்று. செல்வமும் அப்படித்தான் ஒருநாள் பறிபோகும் என்பதைக் குறித்தது.

**அருட்செல்வம் அதைத் தேடுங்கள்**

5. **தேற்றத் தெளிமின் தெளிந்தீர் கலங்கல்மின்**
**ஆற்றுப் பெருக்கில் கலக்கி மலக்காதே**
**மாற்றிக் களைவீர் மறித்துங்கள் செல்வத்தைக்**
**கூற்றன் வருங்கால குதிக்கலும் ஆமே.**

செல்வம் நிலையற்றது என்பதைத் தெரிந்து தெளிவடையுங்கள். முன்னமையே அறிந்து தெளிந்தவாக்ள செல்வம் இல்லாமையை எண்ணிக் கவலைப்படாதீர்கள். ஆற்று வெள்ளம் போல் பெருகிவரும் செல்வச் செழிப்பைக் கண்டு கலங்கி மயங்காமல், வந்ததுபோல் ஒருநாள் திடீரென்று வற்றியும் போகும். இறையருளாகிய பெரும் செல்வத்தைப் பெற முயலுங்கள். முயன்றால் எமபயம் கூட உங்களை அணுகாது.

**சிமிழ்ச் செல்வமே செல்வம்**

6. **மகிழ்கின்ற செல்வமும் மாடும் உடனே**
**கவிழ்கின்ற நீர்மிசைச் செல்லும் கலம்போல்**
**அவிழ்கின்ற ஆக்கைக்கோர் வீடு பேறாகச்**
**சிமிழொன்ற வைத்தமை தேர்ந்தறி யாரே.**

மனமகிழ்ச்சி தரும் பெரும் செல்வமும், வீடு, வயல் என்ற பிற செல்வ வளங்களும், ஆற்று வெள்ளத்தில் மிதக்கின்ற படகைப்போல் ஒரு நாள் கவிழ்ந்து விடும். அழிந்து போய்விடும் உடலுக்கு ஆதார சக்தியாகத் தலைப்பகுதியில் சிமிழ் ஒன்று வைத்துள்ளதைப் பலரும் அறியாமல் இருக்கிறார்களே. சிமிழை அறிந்து அதன் பயன் உணர்ந்தால் அருளாகிய செல்வம் அமுத மழையாகப் பொழியும்.

**செம்பொருள் சிவமே செல்வம்**

7. **வாழ்வு மனைவியும் மக்கள் உடன்பிறந்**
**தாரும் அவளேது எமக்கென்பார் ஒண்பொருள்**
**மேவும் அதனை விரிவுசெய் வார்கட்குக்**
**கூவு துணைஒன்று கூடலும் ஆமே.**

நல்ல வாழ்க்கை, அன்பான மனைவி, அருமையான பிள்ளைகள், உடன்பிறந்தார், சுற்றத்தார் என்று ‘எனக்கு என்ன குறை?’ என்று கூறுபவர்கள் உலகில் இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் சிறந்த செம்பொருளான சிவன் அருளைப் பெறுகின்ற முயற்சியை ஆழமாக மேற்கொள்ள நினைப்பார்களேயானால், அந்தச்

செம்பொருள் சிவம் கூவி அழைத்துக் கொள்ளத்தக்க துணையாக வந்து சேரவும் கூடும்.

## ஒரு வீடு ஒன்பது வாசல்

8. **வேட்கை மிகுந்தது மெய்கொள்வார் இங்கில்லை**
**பூட்டும் தறிஒன்று போம்வழி ஒன்பது**
**நாட்டிய தாய்தமர் வந்து வணங்கிப்பின்**
**காட்டிக் கொடுத்தவர் கைவிட்ட வாறே.**

எல்லாருக்கும் உலக வாழ்விலேயே ஆசை மிகுந்திருக்கிறது. உண்மைப் பொருளறியும் எண்ணம் உடையவர்கள் யாரும் இல்லை. இந்த உலக வாழ்வுக்குஆசைப்படுவதற்குக் காரணமான உடலுக்குள் உயிரைப் பூட்டி வைக்கும் இடம் ஒன்றுள்ளது. ஆனால், தப்பி ஓடவோ ஒன்பது வாசல்கள் உள்ளன. இந்த ஒன்பது வாசலில் ஏதாவது ஒன்றின் வழி உயிர் போய்விட்டால், உறவு முறை காட்டித்தாயார், சுற்றத்தார் எனப் பலரும் வந்து வணங்கிப் பின் சுடுகாட்டைக் காடிக் கொடுத்து விட்டு, உடலை அங்கே விட்டுவிட்டுப் போய்விடுவார்கள். இதுதான் உலகியல்.

## சிவசிந்தனை செல்கதிக்குப் பரிசு

9. **உடம்பொடு உயிர்இடை விட்டோடும் போது**
**அடும்பரிசு ஒன்றில்லை அண்ணலை எண்ணும்**
**விடும்பரி சாய்நின்ற மெய்நமன் தூதர்**
**சுடும்பரி சத்தையும் சூழகி லாரே.**

உடலோடு பிறந்து தொடர்ந்து வந்த உயிர், நடுவில் உடலை விட்டுவிட்டு ஓடிவிடும். இப்படி ஓடும் உயிரைத் தடுத்து நிறுத்தி, அதை வெற்றி கொள்ள நிறுத்தி வைக்க ஒரு வழியும் இல்லை. எனவே, அப்போது உயிர் பிரியும் நேரத்தில் இறைவனை நினையுங்கள். நினைத்தால், உடலை விட்டு உயிரைப் போக விடுவதான பரிசைத் தரவந்த எமதூதர்கள் அந்த உயிருக்குத் துன்பத்தைத் தரமாட்டார்கள். சிவ சிந்னை துன்பம் போக்கும்.

# வெற்றிவேற்கை (அல்லது) நறுந்தொகை

ஆசிரியர் அதிவிரராம பாண்டியர். கி.பி.16ஆம் நூற்றாண்டு.முதல் தொடரால் பெயர் பெற்ற நூல். இந்நூலில் 82 அறிவுரைகள் உள்ளன.

**கடவுள் வாழ்த்து**

**“பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்**
**சரணஅற் புதமலர் தலைக்கணி வோமே”**

ஓம்கார மந்திரத்தின் பொருளாக விளங்கும் அருள் வழங்கும் பெருந்தன்மை உடையவனும் ஐந்து கரங்களை உடையவனுமாகிய விநாயகப் பெருமானின் திருப்பாதங்களாகிய அதிசய மலர்களைத் தலையில் சூடிக்கொள்வோம்.

**நூற்பயன்**

**வெற்றி வேற்கை வீர ராமன்**
**கொற்கை யாளி குலசே கரன்புகல்**
**நற்றமிழ் தெரிந்த நறுந்தொகை தன்னால்**
**குற்றங் களைவோர் குறைவிலா தவரே**

கொற்கை நகரை ஆள்பவனாகவும் தான் பிறந்த குலத்துக்குச் சிறப்புச் சேர்ப்பவனாகவும் வெற்றிதரும் வேலினைக் கையில் ஏந்தியவனாகவும் விளங்கும் அதிவீரராம பாண்டியன் நற்றமிழில் படைத்த நறுந்தொகையில் சொல்லப்பட்ட அறங்களால் தங்கள் மனத்தைச் செம்மைப்படுத்திக் கொண்டவர்கள் குற்றம் இல்லாதவர்களாவர்.

**நூல்**

1. **எழுத்தறி வித்தவ னிறைவ னாகும்.**

மொழிக்கு உறுப்பாகும் எழுத்துகளைக் கற்றுக்கொடுத்து மொழியில் புலமை பெற உதவிய ஆசிரியன் கல்வியின் வாயிலாக அறிவைப் புகட்டியதால் அவனே இறைவனும் ஆவான்.

2. **கல்விக் கழகு கசடற மொழிதல்.**

சிறப்பாகக் கல்வியறிவு பெற்று உயர்நிலை அடைந்தோம் என்று கூறிக்கொள்வது; அக்கல்வியால் பெற்ற கருத்துகளைக் குற்றம் இன்றித் தெளிவாகப் பிறருக்குக் கற்றுக் கொடுப்பதில் இருக்கிறது.

3. **செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.**

நிறைந்த செல்வவளம் பெற்றவர்களுக்குச் சிறப்பு எனக் கூறப்படுவது அவர்களுடைய உறவினர்கள் வறுமையுற்றிருக்கும் காலத்தில் கைவிடாமல் போற்றிக் காப்பதாகும்.

4. **வேதியர்க் கழகு வேதமு மொழுக்கமும்.**

அந்தணர்களுக்கு அழகு எனக் கூறப்படுபவை இரண்டாகும். அவை, வேதம் ஓதுவதாகிய தொழிலை மேற்கொள்ளலும், நற்குணமும் உடையவராகவும் நல்ல ஒழுக்கங்களைக் கடைப் பிடிப்பவர்களாகவும் வாழ்தலாகும்.

5. **மன்னவர்க் கழகு செங்கோன் முறைமை.**

நாடாளும் மன்னருக்குச் சிறப்புச் சேர்ப்பதும் அழகு என்று சொல்லப்படுவதும் நாட்டு மக்களைச் செம்மையான முறையில் காத்து நீதி முறை வழுவாமல் ஆட்சி புரிதலாகும்.

6. **வைசியர்க் கழகு வளர்பொரு ளீட்டல்**

வணிகத் தொழில் புரியும் வணிகர்களுக்குச் சிறப்பு எனக் கூறப்படுவது நேர்மையான வழியில் நாளும் பெருகுகின்ற பொருளைத் தேடுவோம்.

7. **உழவர்க் கழங்கிங் குழுதூண் விரும்பல்.**

வேளாண்மைத் தொழில் புரியும் உழவர்களுக்கு அழகு எனக் கூறப்படுவது உழவுத் தொழில் செய்து விளைவித்த தானியத்தை உணவாக்கி உண்டு வாழ்தலாகும்.

8. **மந்திரிக் கழகு வரும்பொரு ளுரைத்தல்.**

அமைச்சருக்குச் சிறப்பு என்று சொல்லப்படுவது மன்னன் செயல்படுத்தும் விதிமுறைகளின் விளைவு இப்படித்தான் இருக்கும் என நன்மையாயினும் தீமையாயினும் அதனை உணர்ந்து தக்க காலத்தில் எடுத்துக் கூறுவதாகும்.

9. **தந்திரிக் கழகு தறுக ணாண்மை**

படைத்தலைவனுக்கு அச்சம் கொள்ளாமையாகிய எதிர்த்து நின்று போரிட்டு வெற்றி பெறும் மனத்திடமும் வீரமும் அழகைக் கொடுப்பனவாகும்.

10. **உண்டிக் கழகு விருந்தோ டுண்டல்.**

உண்ணுகின்ற உணவுக்கு அழகு என்று கூறப்படுவது அவ்வுணவை விருந்தினர்களோடு அமரிந்து அவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்து உண்ணுதலாகும்.

11. **பெண்டிர்க் கழகெதிர் பேசா திருத்தல்.**

பெண்களுக்குச் சிறப்புச் சேர்க்கும் செயலாவது; எதிர்த்துப் பேசாமல் அமைதியோடு இருத்தலாகும்.

12. **குலமகட் கழகுதன் கொழுநனைப் பேணுதல்.**

நற்குடியில் பிறந்த பெண்ணுக்குச் சிறப்பானது என்று சொல்லப்படுவது அவளது கணவனைப் போற்றி வாழ்தலாகும்.

13. **விலைமகட் கழகுதன் மேனி மினுக்குதல்.**

உடலை விற்றுப் பொருள்தேடும் பெண்களுக்கு அழகு எனப்படுவது அவர்களுடைய உடலைக் காண்பவர்கள் ஆசை கொள்ளும் வண்ணம் ஒப்பனை செய்து கொள்ளுதலாகும்.

14. **அறிஞர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்.**

கற்றறிந்த சான்றோர்களுக்குச் சிறப்புத் தரும் செயலாவது நல்ல நூல்களைக் கற்று அவை கூறும் நற்பொருளை அறிந்து நூல்கள் கூறும் நல்வழியில் நடப்பதாகும்.

15. **வறிஞர்க் கழகு வறுமையிற் செம்மை.**

வறுமையில் வாடுபவர்களுக்கு சிறப்பு தருவது வறுமையோடு வாழ்கின்ற காலத்திலும் நல்வழியில் வாழ்தலாகும்.

16. **தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை**

**வானுற வோங்கி வளம்பெற வளரினும்**

**ஒருவர்க் கிருக்க நிழலா காதே.**

பனை மரத்தின் இனிமை பொருந்திய திரண்டு உருண்ட கனியில் இருந்து ஒருவிதை முளைத்து வானை நோக்கி உயரமாக வளர்ந்தாலும் அது தன் நிழலில் ஒருவர் கூடத்தங்க இடம்தராது.

17. **தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை**

**தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்**

**நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை**

**அணிதேர் புரவி யாட்பெரும் படையொடு**

**மன்னர்க் கிருக்க நிழலா கும்மே.**

ஒளிமிக்க ஆலமரத்தின் சிறிய கனியில் இருக்கின்ற ஒரு விதை தெளிந்த நீரை உடைய குளத்தில் வாழ்கின்ற மீனின் முட்டையை விடச் சிறியது என்றாலும்; பெருமைமிக்க யானையும் அலங்கரிக்கப்பட்ட தேரும் குதிரையும் காலாட்படையும் மன்னரும் தங்கி இருக்க நிழலைத் தரும்.

18. **பெரியோ ரெல்லாம் பெரியரு மல்லர்.**

உருவத்தைக் கொண்டு இவர் பெரியவர் என எடைபோடுதல் தவறானது. உருவத்தால் தோற்றப் பொலிவால் உயர்ந்தவர்கள் உயர்ந்தவாகளாகக் கருதப்பட மாட்டார்கள்.

19. **சிறியோ ரெல்லாம் சிறியரு மல்லர்.**

உருவத்தால் சிறியவர்களாக இருப்பவர்களாக மதிப்பிடத் தக்கவர்கள் அல்ல.

20. **பெற்றோ ரெல்லாம் பிள்ளைக ளல்லர்.**

ஈன்றெடுத்தவர்கள் அனைவரும் பிள்ளைகள் என்று கருதப்பட மாட்டார்கள். செயற்கரும் செயலால் தன்னைப் பெற்றோருக்கும் சுற்றத்தாருக்கும் ஆசானுக்கும் பெருமை தரும் செயலைச் செய்பவர்களே பிள்ளைகளாகக் கருதப்படுவார்கள.

21. **உற்றோ ரெல்லாம் உறவின ரல்லர்.**

உறவினர்கள் என்று சொல்லப்படுபவர்கள் அனைவரும் உறவினர்கள் அல்ல. இன்பத்திலும் துன்பத்திலும் அரவணைத்ச் சொல்பவர்களே உண்மையான உறவினர் ஆவர்.

22. **கொண்டோ ரெல்லாம் பெண்டிரு மல்லர்.**

மணந்து கொண்டவர்கள் அனைரும் மனைவியர்கள் என்று எண்ணப்பட மாட்டார்கள். இன்பத்திலும் துன்பத்திலும் மனமாற்றம் அடையாமல் கணவரொடு சேர்ந்து கடமைகளைச் செய்பவர்களே நல்ல பெண்டிராவர்.

23. **அடினுமா வின்பால் தன்சுவை குன்றாது.**

காய்ச்சினாலும் பசுவினையுடைய பால் தன்னுடைய சுவையில் இருந்து குறையாது. நல்லாருடன் பழகுதலும் அவர்களோடு கலந்து உரையாடுதலும் இனிதாகும்.

24. **சுடினும் செம்பொன் தன்னொளி கெடாது.**

நெருப்பில் இட்டு உருகச் செய்தாலும் செம்மை நிறமுடைய தங்கம் தன்னுடைய ஒளியில் குறைவுபடாமல் அதன் ஒளிமிகும். அது போலச் சான்றோர்கள் வறுமையுற்ற காலத்திலும் நேர்மையுடன் வாழும் நெறியால் பொன்போல் ஒளிர்வர்.

25. **அரைக்கினுஞ் சந்தனந் தன்மண மறாது.**

அரைக்கப்படும் சந்தனம் மனத்தில் குறைவு படாமல் விளங்கும். அதுபோல் சான்றோர்கள் தங்கள் நற்செயல்களால் புகழ்பெற்று விளங்குவார்கள்.

26. **புகைக்கினும் காரகில் பொல்லாங்கு கமழாது.**

நெருப்பில் இட்டுப் புகையச் செய்தாலும், கருமை நிறமுடைய அகில் தீமையான வாசைன தராது. நறுமணம் தரும். அதுபோலச் சான்றோர் கூறும் கடுமையான சொற்கள் துன்பம் தராது. இன்பத்தையே விளைவிக்கும்.

27. **கலக்கினும் தண்கடல் சேறா காது.**

கலக்கினாலும் குளிர்ந்த நீரை உடைய கடலானது சேறு நிறைந்த அழுக்கு நீராகாது. அது போலச் சான்றோர்களின் மேல் தேவையற்ற பழிகளைச் சுமத்தினாலும் அவர்களின் புகழுக்குக் களங்கம் ஏற்படாது.

28. **அடினும்பால் பெய்துகைப் பறாதுபோய்ச் சுரைக்காய்.**

பால் ஊற்றி உணவாகச் சமைத்தாலும் பேய்ச் சுரைக்காயானது தன்னுடைய கசப்புச் சுவையில் இருந்து மாறாது. அதுபோலக் கீழான குணம் கொண்டவர்களுக்கு எவ்வளவு நல்ல செயல்கள் செய்தாலும் நன்றியுடன் நடப்பதையும் தீமையான செயல்கள் செய்வதையும் விலக்கமாட்டார்கள்.

29. **ஊட்டினும் பல்விரை யுள்ளிகம ழாதே.**

நல்ல நறுமணங்கள் பலவற்றைக் கொண்டு மாற்ற முயன்றாலும் பூண்டு தன்னுடைய நாற்றத்தை இழக்காது.

30. **பெருமையும் சிறுமையுந் தான்தர வருமே.**

புகழும் தரக்குறைவான தன்மையும் தன்னுடைய செயல்களால் ஏற்படுமேயன்றிப் பிறரால் அல்ல. தீதும் நன்றும் பிறந்தரவாரா என்று புறநானூறு கூறுவதை அறிக.

31. **சிறியோர் செய்த சிறுபிழை யெல்லால்**

**பெரியோ ராயிற் பொறுப்பது கடனே.**

குறையறிவு கொண்ட கீழ்மக்கள் செய்கின்ற கீழ்மையான செயல்களைப் பொறுத்துக் கொள்வது அறிவு நிறைந்த சான்றோர்களின் கடமையாகும்.

32. **சிறியோர் பெரும்பிழை செய்தன ராயிற்**

**பெரியோ ரப்பிழை பொறுத்தலு மரிதே.**

கீழ்மையான குணம் கொண்டவர்கள் பெரிய குற்றத்தைச் செய்துவிட்டால் உயர்ந்த குணம் படைத்த சான்றோர்கள் அவர்கள் செய்த குற்றத்தைப் பொறுத்துக் கொண்டு அமைதியோடு இருப்பது அரிதான செயலாகும்.

33. **நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை**

**நீர்க்குட் பாசிபோல் வேர்க்கொள் ளாதே.**

நூறு வருடங்கள் நட்புக் கொண்டாலும் ஆராய்ந்தறியும் அறிவற்ற கீழ்மக்களின் நட்பானது நீருக்குள் வளர்ந்திருக்கும் பாசி வேர் கொள்ளாமல் இருப்பது போல் அவர்களின் நட்பும் உள்ளம் சாராமல் இருக்கும்.

34. **ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை**

**இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே.**

ஒருநாள் நட்புக் கொண்டாலும் சான்றோர்களின் நட்பு பரந்த பூமி பிளக்கும்படி ஆழமாக வேரூன்றித் தழைக்கும் இயல்புடையது.

35. **கற்றை நன்றே கற்கை நன்றே**

**பிச்சை புகினும் கற்கை நன்றே.**

கல்வி கற்றல் நன்மை விளைவிக்கும் செயலாகும். அதனை; பிச்சை எடுத்தேனும் கற்க வேண்டிய வயதில் கற்றுக் கொள்ளவேண்டும்.

36. **கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்**

**நெல்லினுட் பிறந்த பதராகும்மே.**

கல்வி அறிவில்லாத ஒருவன் தன்னுடைய குலத்தின் சிறப்பைப் பேசுவது பயனற்றது. அது நெற்கதிரில் விளைந்த பதரைப் போன்று பயனற்றதாகும்.

37. **நாற்பாற் குலத்தின் மேற்பா லொருவன்**

**கற்றில னாயிற் கீழிருப் பவனே.**

அரசர், அந்தணர் வணிகர் வேளாளர் ஆகிய குலங்களில் உயர்வாகப் பிறந்த ஒருவன் கல்வி அறிவு பெறவில்லை என்றால் தாழ்ந்த நிலையை அடைந்தவன் ஆவான்.

38. **எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்**

**அக்குடியிற் கற்றோரை மேல்வரு கென்பர்.**

எந்தக் குலத்தில் பிறந்தாலும் யாராக இருந்தாலும் கல்வியறிவு பெற்றவர்கள் எந்த இடத்திலும் மதிக்கப்படும் பேறு பெறுவார்கள்.

39. **அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்.**

கல்வியறிவு பெற்றவன் நாடாளும் மன்னனின் அன்புக்கு உரியவனாகி அவனால் சிறப்பிக்கப்படுவான்.

40. **அச்சமுள் ளடக்கி அறிவகத் தில்லாக்**

**கொச்சை மக்களைப் பெறுதலி னக்குடி**

**எச்சமற் றேமாந் திருக்கை நன்றே.**

அச்சத்தை மனத்தில் கொண்டு சிறிது கூட உள்ளத்தில் அறிவில்லாத புதல்வர்களைப் பெற்றெடுப்பதைவிடக் குலம் தழைப்பதற்கு வாரிசு இல்லாமல் போனாலும் அதனை விடுத்து மகிழ்ச்சியாக இருப்பதே நல்லதாகும்.

41. **யானைக் கில்லை தானமுந் தருமமும்.**

யானைக்குத் தும்பிக்கை நீண்டிருந்தாலும் அதனைக் கொண்டு கொடுத்து உதவும் செயலும் அறச் செயலும் ஆகியவற்றை அது செய்வது இல்லை.

42. **பூனைக் கில்லை தவமுந் தயையும்.**

பூனை கண்ணை மூடிக் கொண்டு தவம் செய்து கொள்கையோ உயிர்களின் மேல் அன்பு செலுத்தும் பண்போ இல்லை.

43. **ஞானிக்கில்லை யின்பமுந் துன்பமும்.**

ஆராய்ந்தறியும் அறிவுடன் ஞானநெறியில் நிற்பவனுக்கு மகிழ்வதற்குக் காரணமான இன்பமும் வேதனை கொள்வதற்குக் காரணமான துன்பங்களும் இல்லை.

44. **சிதலைக் கில்லை செல்வமுஞ் செருக்கும்.**

கரையான், இது செல்வர்களின் பொருள். செருக்குடையவர்களின் பொருள் எனப் பாராமல் அனைத்தையும் அழித்துவிடும்.

45. **முதலைக் கில்லை நீத்தும் நிலையும்.**

முதலை எவ்வளவு ஆழமான நீர்நிலையாயினும் நீந்தாமலும் நிலையாக நில்லாமலும் பயணிக்கும்.

46. **அச்சமு நாணமும் அறிவிலோர்க் கில்லை.**

தீமையான செயல்களைச் செய்ய மனத்தில் கொள்ளும் பயமும், அச்செயலைச் செய்ய வெட்கம் கொள்ளுதலும் ஆராய்ந்தறியும் அறிவில்லாத மூடர்களுக்கு இல்லை.

47. **நாளும் கிழமையும் நலிந்தோர்க் கில்லை.**

வறுமையில் உழலும் மக்கள் பொருளீட்டும் முயற்சியில் செயல்களை மேற்கொள்ளும் முயற்சியில் செயல்களை மேற்கொள்ளும் காலத்தில் நல்ல நாளென்றும் நல்ல காலம் என்றும் பார்ப்பது கிடையாது.

48. **கேளுங் கிளையுங் கெட்டார்க் கில்லை.**

நட்புக் கொள்ளுதல் உறவினர்களோடு சேர்ந்திருத்ல் ஆகியன வறுமையால் வாடுபவர்களுக்குத் தொலைவாகவே உள்ளனவாம்.

49. **உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா.**

பொருட் செல்வமும் வறுமைத் துன்பமும் ஒருவரிடத்தில் நிலையாக இருப்பதில்லை. வறுமையில் வாடியவர் செல்வம் பெறக்கூடும்; செல்வரும் வறுமையில் வாடக்கூடும்.

50. **குடைநிழ லிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்**

**நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்.**

நாடாளும் உரிமை உடைய வெண்கொற்றக் குடையின் குளிர்ந்த நிழலில் அமர்ந்திருந்து யானையில் பயணம் செய்த மன்னரும் நடந்து செல்வதனால் சோர்வடைந்து மற்றொரு ஊரினை அடைந்தாலும் அடைவார்கள்.

51. **பிறப்புஞ் செல்வமும் பெருமையு முடையோர்**

**அறக்கூழ்ச் சாலை அடையினும் அடைவர்.**

பிறரால் புகழப்படும் தன்மையும் செல்வவளமும் பல பெருமைகளையும் உடையோரும் வறுமை நிலையை அடைந்து தருமமாக உணவு வழங்கும் மடத்தை அடைந்தாலும் அடையக்கூடும்.

52. **அறத்திடு பிச்சை கூவி யிரப்போர்**

**அரசோ டிருந்தர சாளினும் ஆளுவர்.**

நற்பலன்களைப் பெறுவதற்காக இடப்படும் பிச்சையை வீடுகள்தோறும் சென்று கேட்டுப்பெறுவோரும் அரசுக்குரிய உறுப்புகளோடு அரசாளும் நிலையை அடைந்தாலும் அடைவார்கள்.

53. **குன்றத் தனையிரு நிதியைப் படைத்தோர்**

**அன்றைப் பகலே யழியினும் அழிவர்.**

மலையளவு செல்வம் பெற்றவர்களும் அந்நாளின் பொழுதிலேயே பொருளை இழந்து வறுமை நிலையை அடைவார்கள்.

54. **எழுநிலை மாடங் கால்சாய்ந் துக்குக்**

**கழுதை மேய்ப்பா ழாயினு மாகும்.**

ஏழு மாடங்களை உடைய மாளிகையும் அடியோடு சாய்ந்து சிதறிப்போய் அங்கு கழுதைகள் மேயும் நிலை உருவாகலாம்.

55. **பெற்றமுங் கழுதையும் மேய்ந்த அப்பாழ்**

**பொற்றொடி மகளிரும் மைந்தருங் கூடி**

**நெற்பொலி நெடுக ராயினு மாகும்.**

எருதுகளும் கழுதைகளும் மேய்ந்த பாழ்பட்ட இடமும் பொன் வளையல் அணிந்த பெண்களும் ஆண்களும் நிறைந்து உழைத்து அதன் பயனாக நெல் நிறைந்த செல்வவளம் பெற்ற பெருநகரம் ஆனாலும் ஆகலாம்.

56. **மணிவணி யணிந்த மகளி ராங்கே**

**பிணவணி யணிந்துதங் கொழுநரைத் தழீஇ**

**உடுத்த ஆடை கோடியாக**

**முடித்த கூந்தல் விரிப்பினும் விரிப்பர்.**

மணமக்களுக்குரிய ஆடையை அணிந்த பெண்ணும் அப்போதே பிணத்துக்குரிய அலங்காரம் பூண்ட தன் கணவனின் பிணத்தைத் தழுவக்கூடும். மணவிழாவுக்காக அணிந்த கூறைப் புடவையே கோடித் துணியாகவும் ஆகக்கூடும். பின்னிமுடித்த கூந்தலை விரித்து அழுவதும் நிகழ்ந்தாலும் நிகழக்கூடும்.

57. **இல்லோ ரிரப்பதும் இயல்பே இயல்பே.**

பொருள் செல்வம் இல்லாதவர்கள் தன்னுடைய தேவையை நிறைவேற்றிக் கொள்ளக் கையேந்தி நிற்பது உலக இயற்கையாகும்.

58. **இரந்தோர்க் கீவது முடையோர் கடனே.**

இல்லை என வந்து நின்றவர்க்கு கொடுத்து உதவுவது செல்வ வளம் பெற்றவர்களின் கடமையாகும்.

59. **நல்ல ஞாலமும் வானமும் பெறினும்**

**எல்லா மில்லை யில்லில் லோர்க்கே.**

பூவுலகையும் தேவர்களின் வான் உலகத்தையும் பெற்றாலும் குணமுள்ள நல்ல மனைவி அமையாதவர்களுக்கு அவற்றால் பயன் ஏதும் இல்லை.

60. **தறுகண் யானை தான்பெரி தாயினும்**

**சிறுகண் மூங்கிற் கோற்கஞ் சும்மே.**

அச்சம் இல்லாத் தன்மையதாகிய யானை உருவத்தால் பெரிதாயினும் கணுக்கள் உடைய மூங்கில் கோலுக்குப் பயந்து நடக்கும். அதுபோல வலிமையும் பெருமையும் உடையவர்கள் தம்மை ஆள்வோர்க்குப் பணிந்து நடப்பார்கள்.

61. **குன்றுடை நெடுங்கா டூடே வாழினும்**

**புன்றலைப் புல்வாய் புலிக்குஞ் சும்மே.**

குன்றுகளை உடைய பெரிய காட்டினுள் வாழ்ந்தாலும் மான் புலிக்கு அச்சம் கொள்ளும்.

62. **ஆரையாம் பள்ளத் தூடே வாழினும்**

**தேரை பாம்பிற்கு மிகவுஞ் சும்மே.**

பள்ளத்தில் நிறைந்து வளர்ந்த ஆரைக் கீரையின் இடையே வாழ்ந்தாலும் தேரையானது பாம்பிற்கு மிகுந்த அச்சம் கொள்ளும்.

63. **கொடுங்கோன் மன்னர் வாழும் நாட்டிற்**

**கடும்புலி வாழுங் காடு நன்றே.**

கொடுமைத்தன்மை உடைய மன்னர் ஆள்கின்ற நாட்டைவிடக் கொடுமையான புலி வாழக்கூடிய காடு நல்லதாகும்.

64. **சான்றோ ரில்லாத் தொல்பதி யிருத்தலின்**

**தேன்றேர் குறவர் தேயம் நன்றே.**

கல்வியறிவாலும் குணத்தாலும் சிறந்த சான்றோர்கள் இல்லாத பழமையான நகரத்தில் வாழ்வதைவிடத் தேன் தேடி அலையும் குறவர்கள் வாழும் மலைப்பகுதியில் வாழ்வது நன்மையாகும்.

65. **காலையு மாலையும் நான்மறை யோதா**

**அந்தண ரென்போ ரனைவரும் பதரே.**

காலை வேளையிலும் மாலை வேளையிலும் நான்கு வேதங்களை ஓதாமல் தங்களை அந்தணர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் அனைவரும் பயன் இல்லாத பதரைப் போன்றவர்களாவர்.

66. **குடியலைந் திரந்துவெங் கோலொடு நின்ற**

**முடியுடை யிறைவனாம் மூர்க்கனும் பதரே.**

நாட்டு மக்களை வருத்தம் கொள்ளச் செய்து வரிவாங்கிக் கொடுங்கோலனாக ஆட்சிபுரியும் முடியுடைய மன்னனும் பயனில்லாத பதரே ஆவான்.

67. **முதலுள பண்டங் கொண்டுவா ணிபஞ்செய்து**

**அதன்பய னுண்ணா வணிகமும் பதரே.**

முதலாக உள்ள பொருளைக் கொண்டு வியாபாரம் செய்து அதன் பயனாக வந்த இலாபத்தில் உண்டு வாழாத வணிகர்கள் பதரைப் போல் பயனற்றவர்களாவர்.

68. **வித்தும் ஏரும் உளவா யிருப்ப**

**எய்த்தங் கிருக்கும் ஏழையும் பதரே.**

விதைக்க விதையும் நிலத்தை உழ ஏரையும் வைத்துக் கொண்டு உழுது பயிரிட்டு வாழ நினைக்காமல் சோம்பல் கொண்டிருக்கும் அறிவற்ற விவசாயியும் பதரைப் போல் பயனற்றவனாவான்.

69. **தன்மனை யாளைத் தாய்மனைக் ககற்றிப்**

**பின்பவட் பாராப் பேதையும் பதரே.**

தன்னுடைய மனைவியை அவளது தாய் வீட்டிற்கு அனுப்பிவிட்டுப் பின்பு அவளைச் சென்று பார்க்காத அறிவற்றவனும் பயனில்லாதவனவான்.

70. **தன்மனை யாளைத் தனிமனை யிருத்திப்**

**பிறன்மனைக் கேகும் பேதையும் பதரே.**

தன்னுடைய மனைவியைத் தனியாக வீட்டில் இருக்க வைத்து மாற்றான் மனைவி மீது ஆசை கொண்டு அவர்களின் இல்லம் செல்லும் அறிவற்றவன் பதரைப்போல் பயனற்றவனாவான்.

71. **தன்னா யுதமுந் தன்கையிற் பொருளும்**

**பிறன்கையிற் கொடுக்கும் பேதையும் பதரே.**

தற்காப்புக்காக வைத்திருக்கும் ஆயுதத்தையும், தனக்கு வாழ்வாதாரமான பொருளையும் வைத்திருக்குமாறு அடுத்தவனிடம் கொடுப்பவன் பயனற்ற பதராவான்.

72. **வாய்ப்பறை யாகவும் நாக்கடிப் பாகவும்**

**சாற்றுவ தொன்றைப் போற்றிக் கேண்மின்.**

வாயினைப் பறையாகவும் நாக்கினைக் கோலாகவும் கொண்டு அறிவுரை கூறும் பெரியோரின் வார்த்தைகளின் மேல் அன்புகொண்டு போற்றிக் கேட்டுப் பாதுகாக்க வேண்டும்.

73. **பொய்யுடை யொருவன் சொல்வன் மையினால்**

**மெய்போ லும்மே மெய்போ லும்மே.**

பொய்யைச் சொல்கின்ற ஒருவனின் சொல்வன்மையினால் பொய்யும் உண்மை போலத் தோன்றும்.

74. **மெய்யுடை யொருவன் சொலமாட் டாமையாற்**

**பொய்போ லும்மே பொய்போ லும்மே.**

உண்மையே பேசுகின்ற ஒருவன் தான் திறம்படப் பேச இயலாத காரணத்தால் அவன் பேசும் உண்மையும் பொய்போலத் தோற்றம் கொள்ளும்.

75. **இவர்தஞ் சொல்லையும் எழுதரங் கேட்டே**

**இருவரும் பொருத்த வுரையா ராயின்**

**மனுமுறை நெறியின் வழக்கிழந் தவர்தாம்**

**மனமுற மறுகிநின் றழுத கண்ணீர்**

**முறையுறத் தேவர் மூவர் காக்கினும்**

**வழிவழி யீர்வதோர் வாளாகும்மே.**

வழக்குரைக்க வந்த இருவரின் வாதத்தை ஏழுமுறை கவனமாகக் கேட்டு நீதியில் இருந்து தவறாமல் தீர்ப்பு வழங்காமல் தவறாக வழங்கினால் தவறான தீர்ப்பினால் தோல்வி அடைந்தவர் வடித்த கண்ணீர் சிவன் திருமால் பிரம்மா ஆகியோர் காத்தாலும் தீர்ப்புக் கூறியவரின் குலத்தை அழித்துவிடும்.

76. **பழியா வருவது மொழியா தொழிவது.**

துன்பத்தை விளைவிக்கும்படி வரும் செயல்களைப் பேசாமல் கைவிடுவது நல்லது.

77. **சுழியா வருபுன லிழியா தொழிவது.**

சுழன்று வரும் நீரில் இறங்குவதைத் தவிர்க்க வேண்டும். நீச்சலில் தேர்ந்திருந்தாலும் சுழலில் நீந்துதல் உயிர் இழக்கும் வழியாகும்.

78. **துணையோ டல்லது நெடுவழி போகேல்.**

தகுந்த துணை இல்லாமல் நீண்ட தொலைவு பயணம் செல்வதைத் தவிர்க்க வேண்டும். அது துன்பம் வந்து சேரும் வழியாகும்.

79. **புணைமீ தல்லது நெடும்புன லேகேல்.**

தெப்பம் இல்லாமல் நிறைந்த நீர்ப்பெருக்கில் செல்வத்தைத் தவிர்க்க வேண்டும்.

80. **எழிலார் முலைவரி விழியார் தந்திரம்**

**இயலா தனகொடு முயல்வா காதே.**

அழகிய முலைகளும் நீண்ட கண்களும் உடைய பெண்களின் மேல் ஆசைகொண்டு அவர்கள் கூறும் வழிமுறைகளுள் ஆராய்ந்து செயல்படாமல் மனம் போன போக்கில் எல்லாவற்றையும் செய்ய முயலுதல் கூடாது.

81. **வழியே யேகுக வழியே மீளுக.**

நல்ல வழியில் பயணிப்பதையும் கடமை முடிந்து நல்வழியில் திரும்புவதையும் தலையாய நோக்கமாகக் கொள்ளல் வேண்டும்.

82. **இவைகா ணுலகிற் கியலா மாறே.**

இந்நூலின் கூறப்பட்ட நல்ல நெறிகள் உலகமக்கள் ஏற்றுக் கடைப்பிடித்து நல்வழியில் வாழ்வதற்கான வழியைக் கூறுவனவாகும்.

## பராபரக்கண்ணி

## குணங்குடி மஸ்தான்சாகிபு

1. **அண்ட புவனமென்றும் ஆடுதிருக் கூத்தினையான்**

**கண்டு மகிழ்ந்திடவே காட்டாய் பரபரமே.**

பராபரமானவனே! அண்டங்களிலும்; உலகத்திலும், எல்லா காலங்களிலும் நீ ஆடிக்கொண்டிருக்கக் கூடியனதான திருக்கூத்தினை, தரிசனம் செய்து நான் மகிழ்ந்திடும் படியாக, எனக்குக் காட்டி அருள வேண்டும்.

2. **ஆதியாய் ஆண்டவனாய் அ∴ததுவாய் நின்றபெருஞ்**

**சோதியாய் நின்மலமாய்ச் சூழ்ந்தாய் பராபரமே.**

பராபரமானவனே! முதற்பொருளாகவும், இறைவனாகவும், அதுவாகவும், சோதி வடிவமாகவும், ஏதுமற்ற நிர்மலப் பொருளாகவும் எங்களைச் சூழ்ந்துள்ளாய்.

3. **வேத மறைப்பொருளை வேதாந்தத் துஉட்கருவை**

**ஓதி உனையறிந்தார் உண்டோ பராபரமே.**

பராபரமானவனே! வேதத்தின் பொருளினையும் வேதாந்த்தின் உட்கருவான பொருளினையும் ஓத, அதன்மூலமாக உன்னை அறிந்தவர்கள் யார் இருக்கின்றார்கள்?

4. **அண்ட புவனமுடன் ஆகாச மென்று உசும்பிக்**

**கொண்டாடும் மெய்ஞ்ஞானக் கூத்தே பராபரமே.**

பராபரமானவனே! அண்டங்களும், உலகங்களும், வானில் வாழ்கின்றவர்களும் என்று அனைவரும் அனைத்துப் பொருள்களும், வணங்கிக்கொண்டாடக் கூடியதான உண்மை ஞானக் கடத்தானவனே!

5. **நாவாற் புகழ்க்கெட்டா நாயகனே நாதாந்தம்**

**பூவாய் மலர்ந்திருக்கப் பூத்தாய் பராபரமே.**

பராபரமானவனே! நாவினால் புகழ்ந்திடக் கூடியதான செயலாலும் தொட முடியததான உயர்ந்த தன்மையுடைய நாயகனே? இனிய இசையானது பூவின் வாசம் எங்கும் பரவுவது போன்ற தன்மையுடன் மலர்ந்த மலர் நீயே ஆவாய்.

6. **பேரால் பெரிய பெரும்பொருளே பேதைதனக்கு**

**ஆரா ரிருந்தும்பலன் ஆமோ பராபரமே.**

பராபரமானவனே! பெயர்சொன்னாலேயே அனைவரும் தெரிந்து கொள்ளக் கூடிய அளவில் புகழ் பெற்றதான பெரிய பொருளாக விளங்கிடக் கூடியவனே! ஏழையாகிய எனக்கு யார் இருந்தும் அதனால் என்ன பயன் உள்ளது.

7. **மாராய நற்கருணை மாவருள்சித் தித்திடவே**

**பாராயோ ஐயா பகராய் பராபரமே.**

பாராபரமாவனே! ஐயனே! எனக்குக் கிடைத்திடாத உயர்ந்த தன்மை உடையதான உன்னுடைய திருவருள் நிலையானது, எனக்குக் கைகூடும் படியாக அருள் செய்திட மாட்டாயா?

8. **ஆனாலு முன்பாதம் யாசித்து இருப்பதற்குத்**

**தானாய் இரங்கியருள் தாராய் பராபரமே.**

பராபரமானவனே! எப்படியானாலும் உன்னுடைய திருவடிகளை அடைந்திட விரும்பி வேண்டுவதற்கும், நீயாகவே மனமிரங்கி அருள் செய்திட வேண்டும்.

9. **நாதாந்த மூல நடுவீட்டுக்குள் இருக்கும்**

**மாதவத்தோர்க்கு ஆன மருவே பராபரமே.**

பராபரமானவனே! நாத்தத்துவத்தின் முடிவான மூலத்தின் நடுவீட்டினுள் எழுந்தருளியுள்ள பெருமையுடையவர்களான தவ ஆற்றல்களை உடையவர்களின் நட்புக்குரிய பொருளானவனே!

10. **உடலுக்கு உயிரேஎன் உள்ளமே உன்பதத்தைக்**

**கடலுமலை யும்திரிந்து காணேன் பராபரமே.**

பராபரமானவனே! உடலினுள்ளிருக்கின்ற என்னுடைய உயிரே! என்னுடைய மனமே! உன்னுடைய திருவடிகளைக் கடலிலும் மலையிலும் அலைந்து திரிந்து தேடியும் கூட காணவில்லை நான்!

11. **மாந்திரத்துக்கு எட்டா மறைப்பொருளே மன்னுயிரே**

**சேர்ந்தஎழு தோற்றத்தின் சித்தே பராபரமே.**

பராபரமானவனே! எல்லா விதமான உயர்ந்த மந்திரங்களாலும் கூட உணர்ந்திட முடியாததான வேதப் பொருளானவனே! நிலைத்த தன்மை உடைய உயிரே! சேர்ந்துள்ளதான ஏழுவகை யானப் பிறவிகளிலும் ஆடிடக் கூடியதான சித்துப் பொருளானவனே!

12. **தனியேனுக்கு ஆதரவு தாரணியில் இல்லாமல்**
**அனியாயம் ஆவதுனக்கு அழகோ பராபரமே.**

பராபரமானவனே! இந்த உலகத்தில் எந்த ஒரு துணையும் ஆதரவுமில்லாமல், அநியாயமாய்த் தனிமையாகக் கிடந்து கெட்டழிவதில் உனக்கு விருப்பமோ?

13. **ஓடித் திரிந்து அலைந்தும் உன்பாதம் காணாமல்**
**வாடிக் கலங்குகிறேன் வாராய் பராபரமே.**

பராபரமானவனே! நான் பல இடங்களிலும் தேடி, ஓடித்திரிந்தும், அலைந்தும் உன்னுடையத் திருவடிகளைக் காணாமல், மனம் வாடிக் கலங்கி நிற்கின்றேன். ஆகையினால், இனியாவது, தேவரான நீர் இந்த ஏழையின் முன்னர் எழுந்து அருள் செய்து காட்சிதர வரவேண்டும்.

14. **தூராதி தூரம் தொலைத்துமதில் உன்பாதம்**
**பாராத பாவத்தால் பயந்தேன் பராபரமே.**

பராபரமானவனே! மிக நீண்ட தூரங்களெல்லாம் அலைந்து திரிந்தும், அங்கெல்லாம் உன்னுடைய பாதங்களைத் தரிசனம் செய்ய முடியாமல், நான் வீணான பாவியானதனை எண்ணி பயந்தேன்.

15. **தேடக் கிடையாத திரவியமே தேன்கடலே**
**ஈடுனக்கும் உண்டோ இறையே பராபரமே.**

பராபரமானவனே! தேடினாலும் கிடைத்திடாத செல்வமே! தேனான கடலே! தலைவனே! உனக்கு இணையானவர் யார் இருக்கின்றார்கள்?

16. **அரிய பெரும்பொருளே அன்பாய் ஒருவார்த்தை**
**பரிபூ ரணமாய்ப் பகராய் பராபரமே.**

பராபரமானவனே! அருமையான பெரிய பொருளே! நீ என்மேல் அன்பான ஒரு சொல்லை, மனப்பூர்வமாகச் சொல்ல வேண்டும்.

17. **ஐயோ எனக்குஉ தவும் ஆதரவை விட்டுவிட்டுத்**

**தையலரைத் தேடித் தவித்தேன் பராபரமே.**

பராபரமானவனே! அய்யா, அடியவனான எனக்கு உதவி செய்யக் கூடியவரான உங்களையும் உங்கள் ஆதரவினையும் விட்டுவிட்டு, பெண்களின் மீது ஆசைகொண்டு தேடி அலைந்து கொண்டிருந்தேன்.

18. **எத்திசையும் நோக்கில் இசையாத் திருக்கூத்தாய்**

**வித்தைவிளை ஆட்டு விளைப்பாய் பராபரமே.**

பராபரமானவனே! எந்தத் திசையைப் பார்த்தாலும், பொருத்தமில்லாதன திருக்கூத்தினை ஆடியபடி நீ விளையாட்டின வித்தையாகச் செய்த கொண்டிருப்பாய்.

19. **எப்பொழுதும் உன்பதத்தில் என்கருத்தே எய்துதற்கு**

**இப்பொடுதே கைப்பிடித்தாய் இறையே பராபரமே.**

பராபரமானவனே! எல்லாக் காலங்களிலும் உன்னுடைய திருவடிகளிலேயே என்னுடைய மனமானது பதிந்து கிடக்க வேண்டும். அதற்காக இப்பொழுதே, அடியவனாகிய என் கையினைப் பிடித்து, என்னை ஆட்கொள்ள வேண்டும்.

20. **வாதுக்கு அடரவரும் வம்பரைப்போல் தோசிமனம்**

**ஏதுக்கு அடர்வதுயான் எளியேன் பராபரமே.**

பராபரமானவனே! வாதம் செய்வதனையே தொழிலாக உடையவர்கள் வீணாக வம்புகளைத்தேடி அலைவர். அவர்களைப் போன்று பாவியாகிய என்னுடைய மனமும் அலைந்து கொண்டிருப்பது ஏன்? நான் அத்தகைய வலிமை உடையவன் இல்லை.

21. **கண்ணே மனோன்மணியே கண்பார்வைக் கெட்டாத**

**விண்ணடங்கா வெட்ட வெளியே பராபரமே.**

பராபரமானவனே! என்னுடைய கண்ணே! மனோன்மணியே! கண்ணின் பார்வைக்கு எட்டாமல் விரிந்து அகாயத்திலும் அடங்கிடாத வெட்ட வெளியாக உள்ளவனே!

22. **அடக்க தாம்மாய ஐம்பொறியைக் கட்டிக்**

**படிக்கப் படிப்பெனக்குப் பகராய் பராபரமே.**

பராபரமானவனே! ஐம்பொறிகளை அடக்கி ஆள்வது என்பது மிகவும் அரிய செயலாகும். ஆனாலும், அப்பொறிகளைக் கட்டிவைத்து அடக்கி அளக்கூடியதான அறிவினை எனக்கு அருளிச் செய்திட வேண்டும்.

23. **எத்தவங்கள் செய்தாலும் இன்பமுடன் உன்பதத்தை**

**முத்த ரொருபோது முற்றார் பராபரமே.**

பராபரமானவனே! உயிரானது முக்திநிலையினை அடைந்த தவத்தில் சிறந்த பெரியவர்கள், எத்தகையதான கடினமான தவங்களைச் செய்து கொண்டிருந்தாலும், உன்னுடைய திருவடிகளை எப்போதும் மறவாமல் இருப்பார்கள்.

24. **சொல்லுக்கு இணங்காத சூத்திரத்தைப் பார்த்திருக்க**

**அல்லும் பகலும்எனக்கு ஆசை பராபரமே.**

பராபரமானவனே! வார்த்தைகளில் அடக்கிட முடியாததான உயர்ந்த தன்மையுடையதான மந்திரங்களின் பொருளினை உணர்ந்த கொண்டிருப்பதற்கே எனக்கு இரவும் பகலும் ஆகின்றது.

25. **நாற்றச் சடலமதை நம்பார் முகர்ந்திருக்க**

**பூத்து மலர்ந்திருக்கும் பூவே பராபரமே.**

பராபரமானவனே! நாற்றம் வீசக்கூடியதான இந்த உடலானது நிலையற்றது, என்பதனை நம்பாதவர்கள், முகர்ந்து பார்த்திடும் படியாக பூத்த மலர்ப் பூவே!

26. **சோற்றுப் பொதியைச் சுமந்தே திரிந்தலைந்தே**

**ஆற்றாமல் நின்றுகளைத்து அழுதேன் பராபரமே.**

பராபரமானவனே! சோற்று மூட்டையினைப் போன்றதனா இந்த உடலினைச் சுமந்து, திரிந்து, அலைந்தனைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் ஏற்பட்ட களைப்பினால் அழுதேன்.

27. **காற்றுத் துருத்தினைக் கல்லாய் அணைந்திருக்கச்**

**சூத்திரமாய் நின்றாய் சுழியே பராபரமே.**

பராபரமானவனே! காற்றுத் துருத்தியான உடல் கல்லினைப் போன்றதென்று நினைத்து நான் அதையே சேர்ந்திருந்தேன். அதனுள் நீ சூத்திரமாய் நிறைந்திருந்தாய்.

28. **கோலத் திருவடிவு கோதையர்கள் ஆசையினால்**

**ஆலைக் கரும்புபோல் ஆனேன் பராபரமே.**

பராபரமானவனே! பெண்களின் மீது கொண்ட ஆசையின் காரணமாக, அழகான என்னுடைய உடலானது ஆலையில் பட்ட கரும்பினைப்போல மெலிந்து விட்டது.

29. **கேளாயோ என்கவலை கேட்டுஇரங்கி யேஎன்னை**

**ஆளாயோ ஐயாபாழ் ஆனேன் பராபரமே.**

பராபரமானவனே! என்னுடைய துன்பம்தஜம் கவலைகளைக் கேட்டு நீ, மனமிரங்கி, என்னை, உன்னடிமையாக ஆட்கொள்ள மாட்டாயா? நானே உன்பாற்பட்டவன் அல்லவா?

30. **எத்தனைதான் குற்றம் எதிர்த்தடிமை செய்தாலும்**

**அத்தனையும் நீபொறுப்பது அழகே பராபரமே.**

பராபரமானவனே! நான் எவ்வளவு தவறுகளைச் செய்தாலும், அவை அனைத்தையும் நீ பொறுத்துக் கொள்வது ஓர் அழகாகும்!.

31. **அல்லல் வினையால் அறிவுகெட்ட ஆன்மாவாய்**

**நெல்லும் பதரும்என நின்றேன் பராபரமே.**

பராபரமானவனே! நான், துன்பத்தினை ஏற்படுத்தக் கூடியதான, நல்வினை, தீவினைகளினால் அறிவுநிலை கெட்டுத்திரியும் ஆத்மாவுடன் நெல்லும் பதரும் போல் நிலையில்லாமல் இருந்தேன்.

32. **சொல்லிய ஞானச் சுடரே ஒருவார்த்தைச்**

**செல்வம் பொழிந்திடநீ செப்பாய் பராபரமே.**

பராபரமானவனே! சொல்வதற்கு அரியதான ஞான ஒளியாகத் திகழ்பவனே! ஒரு வார்த்தையான உபதேசமொழியினை, நீ எனக்குச் செல்வம் நிறையும் படியாகச் சொல்லித் திருவருள் செய்திட வேண்டும்.

33. **நித்தம் உனைத்தொழா நிர்மூட னாய்இருக்கும்**

**பித்தனாய் ஏன்காண் பிறந்னே் பராபரமே.**

பராபரமானவனே! ஒவ்வொரு நாளும் உன்னை வணங்காத முழு அறிவற்றவனாகப் பைத்தியம் போன்றவனான இயல்புடைய நான் ஏன் பிறந்தேன்?

34. **உற்றார்களாலும் உறவின்முறை யோராலும்**

**பெற்றார்க ளாலும் உனைப் பிரிந்தேன் பராபரமே.**

பராபரமானவனே! சுற்றத்தவர்களாலும், உறவின் முறையோர்களாலும் என் பெற்றோர்களாலும் நான் உன்னைப் பிரிந்து விட்டேன்.

35. **ஏழை முகம்பார்த் தெளியேனை யெப்பொழுதும்**

**ஆழாம லாண்டருளென் னழகே பராபரமே.**

பராபரமானவனே! அழகிய வடிவுடையவனே! நீ, ஏழையாகிய என்னுடைய முகத்தினைப் பார்த்த, உன்னடி மையாகிய என்னை, எல்லா காலங்களிலும், தீவினையினுள் மூழ்கிவிடாமல் ஆட்கொண்டு அருள் செய்ய வேண்டும்.

36. **பாவ வுடலெடுத்துப் பாதகனா யான்பிறந்துன்**

**ஆவி கெடவதுனக் கழகோ பராபரமே.**

பராபரமானவனே! பாவமாகிய உடல் எடுத்து நான் பாவியாய் அலைந்து அதனால் என்னுடைய உயிரானது சீர் அழிவது என்ப உனக்கு அழகாகுமோ?

37. **வாராயோ வென்னிடத்தில் வந்தொருக்கா லென்றன்முகம்**

**பாராயோ சற்றே பகராய் பராபரமே.**

பராபரமானவனே! என்னிடம் நீ எழுந்தருள மாட்டாயா? அப்படி ஒரு முறையாவது வந்து என்னுடைய முகத்தினைக் கொஞ்சமம் நீ பார்க்கமாட்டாயா? அதை நீயே சொல்வாய்!

38. **பார்க்கப் பலவிதமாய்ப் பல்லுயிருக் குள்ளிருந்தும்**

**ஆர்க்குந் தெரியாம லானாய் பராபரமே.**

பராபரமானவனே! பார்ப்பதற்குப் பல கோணங்களில், பல உயிர்களுக்குள்ளும் நீ நிறைந்திருக்கக் கூடியதான அச்செய்தியினை யாருமே தெரிந்து கொள்ள முடியாபடி உள்ளாய்.

39. **ஆனாலும் பொல்லா தரும்பாவி யாகவுடல்**

**ஏனோ வெடுத்தேனா னெந்தாய் பராபரமே.**

பராபரமானவனே! என்னுடைய தந்தையே! எப்படியானாலும், பொல்லாத கொடிய பாவியான நான் ஏன், இந்த உடலினை எடுத்தேன்.

40. **கர்ப்பூர தீபக் கனலொளிபோற் காட்சிதர**

**முப்பாழும் பாழாய் முடித்தாள் பராபரமே.**

பராபரமானவனே! கற்பூரத்தினுள் தோன்றும் ஒளியினைப் போன்று, எனக்கு உன்னுடைய அழகான காட்சியினைத் தந்து அருள்செய்து என்னுடைய பழமையான வினைகள் யாவும் பாழாகும்படிச் செய்து என்னை ஆட்கொள்ள வேண்டும்.

41. **கரும்பே நவரசமே கடலமுதே கண்மணிக்குள்**

**அரும்பொருளாய் நின்ற வழகே பராபரமே.**

பராபரமானவனே! கரும்பே! நவரசமே! கடலில் தோன்றிய அமிர்தமே! என்னுடைய கண்ணின் மணிக்குள் அருமையான பொருளாய் நிறைந்திருக்கக் கூடியதான அழகே!

42. **ஏழை யடியேனை யெப்படியுங் கைப்பிடித்து**

**ஆளா திருப்பதுனக் கழகோ பராபரமே.**

பராபரமானவனே! ஏழை அடியவனான என்னை, எவ்விதத்திலாவது, கைப்பிடித்து ஆட்கொள்ளாமல் இருப்பது உனக்கு அழகான செயலாகுமா?

43. **ஆளாயோ வையா யடியேன் பிதற்றுதலைக்**

**கேளாயோ வென்றன் கெதியே பராபரமே.**

பராபரமானவனே! ஐயனே! எனக்குக் கதியானவனே! என்னை ஆட்கொண்டு அருள் செய்திடமாட்டாயா? நான், புலம் புவதனையும் கேட்கமாட்டாயா?

44. **ஊனாகி யுள்ளுயிரி லொட்டா வக்கருவாயத்**

**தானாகி நின்ற தனுவே பராபரமே.**

பராபரமானவனே! ஊனாகவும், அதனுள் கலந்துள்ளதான உயிரினில் ஒட்டாத கரவாகவும், தானகவும் இயங்கிடக் கூடியதான தனுவே!

45. **பொன்னால் மயக்கெடுத்துப் புத்திகெட்டு நானெனவே**

**பன்னாளு நின்னாற் பலனோ பராபரமே.**

பராபரமானவனே! தங்கம் முதலான செல்வங்களின் மீது மயக்கம் கொண்டும், அதனால் அறிவுநிலை தடுமாறி, நான் என்ற ஆணவத்துடன் பலகாலமும் வளர்வதனால் என்ன பலன் உண்டாகும்?

46. **இல்லல்லா கூவென் றெனைமறந்து கொண்டுனையே**

**சொல்லவருள் மெய்ஞ்ஞானச் சுடரே பராபரமே.**

பராபரமானவனே! என்னையே நான் மறந்து, எப்போதும் உன்னையே ‘இல்லல்லாகூ’ என்று சொல்லிக் கொண்டிருப்பதற்கான உண்மை ஞானச் சுடரே! தேவனே எனக்குத் திருவருள் செய்திட வேண்டும்.

47. **ஐயோ வடிவமைதனக் காரிருந்து மென்னபலன்**

**கையாற் கவந்தணைக்கக் காணேன் பராபரமே.**

பராபரமானவனே! அந்தோ! அடியவனான எனக்கு யார் இருந்தும் என்ன பயன்? கைகளினால் என்னை கட்டி அணைத்திட வழியினைக் காணமுடியவில்லை.

48. **ஆனாலு மேழை யடியேனுக் காதரவாய்த்**

**தானா யிரங்கியரு டாராய் பராபரமே.**

பராபரமானவனே! நான் எத்தகைய இயல்புடையவனாக இருந்தாலும் ஏழையாகிய இந்த அடியவனுக்கு, நான் ஆசைப் பட்டதனை அடைந்திடும் படியாக, நீதான் மனமிரங்கி திருவருள் செய்திட வேண்டும்.

49. **தூங்கி யிருந்து தொழுவோர் முகம்பார்க்கும்**

**வேங்கைப் புலியார்க்கு விப்பாய் பராபரமே.**

பராபரமானவனே! தூங்கிக் கொண்டிருந்து விட்டு, உன்னை வணங்கக் கூடியவர்களின் முகங்களைப் பார்க்கின்ற போது வேங்கைப் புலியினைப் போன்று கொதித்தெழும்படி செய்திடுவாய்.

50. **கண்ணே கருத்தேயென் கண்மணியே கண்ணிறைந்த**

**விண்ணடங்கா வெட்ட வெளியே பராபரமே.**

பராபரமானவனே!கண்ணே! என்னுடைய கருத்தானவனே! என்றன் கண்மணியே! என்றன் கண்ணினுள் நிறைந்துள்ளதான அகாயத்தினுள்ளும் அடங்கிடாததான வெட்டவெளியாக இருக்கக்கூடியவனே!

51. **காசாசை கொண்டு கலங்கியே கெட்டலைந்த**

**தோஷியாய் நின்றேன் துணையே பராபரமே.**

பராபரமானவனே! பணத்தின் மீது ஆசை கொண்டு, அதனால் மனம் கலங்கிக் கெட்டு அழிந்து பாவியாக நிற்கின்றேன்.

52. **ஐயோ வெனதுதுய ராரிடத்திற் சொல்லி நின்று**

**கையெடுக்கப் போறெனென் கண்ணே பராபரமே.**

பராபரமானவனே! என்னுடைய கண்ணே! என்னுடைய துன்பங்களைப் பற்றி யாரிடம் சொல்லி கையெடுத்து வணங்கி வேண்டப் போகின்றேன்.

53. **என்னதான் செய்திடுவேன் என் விதியைச் சொல்லியழ**

**உன்னையன்றி வேறெனக்கும் உண்டோ பராபரமே.**

பராபரமானவனே! நான் என்னதான் செய்வேன்? என்னுடைய விதியினைப் பற்றிச் சொல்லி அழுவதற்கு உன்னைத் தவிர எனக்கு வேறு யார் இருக்கின்றார்கள்?

54. **முகக்கண் விழியொளியே முத்திதரும் உத்தமனே**

**அகக்கண் திறந்தோர்க்கு அறிவே பராபரமே.**

பராபரமானவனே! மூன்று கண்களில் ஒளியானவனே! முக்தியினை அளித்திடக் கூடியவனாக உத்தமனே! உன்னுடைய ஞானக்கண்ணினைப் போல், தம்முடைய அகத்தின் கண்களைத் திறந்தவர்களுக்கு அறிவாகத் திகழ்ந்திடக் கூடியவனே!

55. **முப்பாழும் பாழாய்நன் முத்திபெற் றிருக்களனைக்**

**கைப்பிடிப்ப தெப்போதென் கண்ணே பராபரமே.**

பராபரமானவனே! என்னுடைய கண்ணே! என்னுடைய அனைத்து வினைகளும் பாழாய்ப் போய் அழிந்து முக்தியினை அடையும்படியாக என்னைக் கைப்பிடித்து அழைத்துச் செல்வது எப்போது?

56. **உல்லாச மாகஒளிதான் பரந்திடஉன்**

**செல்வம் பொழிந்திடவே செப்பாய் பராபரமே.**

பராபரமானவனே! மகிழ்ச்சி என்பதான ஒளியானது என்னுடைய மனம் முழுவதும் பரவும் படியாக உன்னுடைய அருட்செல்வம் பொழியும் ஒரு வார்த்தை சொல்லுவாயாக!

57. **மாச்சரியஞ் செய்யு மதமொடுங்கி முத்திபெறக்**

**காட்சி தருவதெப்போ கண்ணே பராபரமே.**

பராபரமானவனே! கண்ணே! மாச்சரியம் செய்யக் கூடியதான மதமானது ஒடுங்கி, நான் முக்தியினை அடைந்திடும் படியாக எனக்குக் காட்சி கொடுப்பது எப்பொழுது?

58. **சண்டாளன் என்றென்னைச் சகலர்உரை யிட்டாலுங்**

**கொண்டணைப்ப துன்பாரம் குருவே பராபரமே.**

பராபரமானவனே! குருவே! என்னைப் பார்க்கின்றவர்கள் பெரும்பாலும் சண்டாளன் என்று என்னை இகழ்ந்த போதும், என்னைக் கொண்டணைத்து ஆதரிப்பது உன்னுடைய பொறுப்பாகும்.

59. **முத்திதரு மெய்ஞ்ஞான முச்சுடரைக் காணாமற்**

**செத்திறந்து போனாலென் செய்வேன் பராபரமே.**

பராபரமானவனே! முக்தியினைத்தரக் கூடியதான உண்மை ஞானம் தரும் முச்சுடரைக் காணாமலேயே நான் இறந்து போனால் என்ன செய்வேன்?

60. **தன்னை யறிந்துஉணரத் தயையாய் ஒருவார்த்தை**

**இன்னபடி என்றே இயம்பாய் பராபரமே.**

பராபரமானவனே! நான் என்னை உணர்ந்து கொண்ட பின்னர், தலைவனான் உன்னையும் அறிந்து கொள்ளும்படியாக எனக்கு ஒரு வார்த்தை,'இப்படித்தான் செய்ய வேண்டும்' என்று சொல்லுவாய்!

61. **களியேகண் டுஉன்னுடைய கைப்பிடிப்போ மென்றுசற்றே**

**எளியேன் முகம்பார்த்து இரங்காய் பராபரமே.**

பராபரமானவனே! உன்னுடைய கைகளைப் பிடித்து மகிழ்ச்சியினை அடைந்திடலாம் என்று ஏங்குகின்ற ஏழை எளியவனாக என்னுடைய முகத்தினைப் பார்த்து சிறிதாவது என்மீது இரக்கம் கொள்வாயாக.

62. **பாசவினை போக்கிப் பலபினையைப் பாழாக்கி**

**ஆசைவைப்போர் தங்கள் அருளே பராபரமே.**

பராபரமானவனே! பாசம் என்பதான நல்வினை, தீவினைகளை நீக்கி பல செயல்களையும் அழித்து விலக்கி உன்மீது பற்றுவைத்திருப்பவர்களுக்கு அருள் செய்திடக் கூடியவனே!.

63. **ஆளவரு வோம்என்று அன்பாய் ஒருவார்த்தை**

**ஏழை முகம்பார்த்து இயம்பாய் பராபரமே.**

பராபரமானவனே! நான் வந்த உன்னை ஆட்கொண்டு அருள்செய்திடுவேன் என்று இந்த ஏழ்மையின் முகத்தினைப் பார்த்து ஒரு சொல்லாவது சொல்வாயாக!

64. **நிலைகாட்டும் காயம் நிசமென்று நிச்சயித்த**

**புலையாட்டல் என்றுதள்ளப் போமோ பராபரமே.**

பராபரமானவனே! உண்மை இதுதான் என்று உணரச் செய்யக் கூடியதான, இந்த உடலும் உண்மையானது என்று உறுதியாக நினைத்துச் செயல்படக் கூடியதான புலையாட்டல்கள் என்றைக்கு விலகிச் செல்லுமோ?

65. **பார்க்கப் பலவிதமாய்ப் பலசமய மாகஒரு**

**வாக்கை வெளிப்படுத்தி வைப்பாய் பராபரமே.**

பராபரமானவனே! பார்ப்பதற்கு பல விதங்களாகவும் பல சமயங்களாகவும் உள்ள நீங்கள் எனக்கு ஒரு வார்த்தையினை வெளிப்படுத்திட வேண்டும்.

66. **ஆனால் எளியேனுக்கு ஆதரவே இல்லாமற்**

**போனால் உனக்கழகோ புகலாய் பராபரமே.**

பராபரமானவனே! உன்னுடைய அடியவன் நான் ஆனாலும் எனக்கு எந்த விதமான ஆதரவும் இல்லை என்பது உனக்கு அழகாகுமோ, அதனைச் சொல்ல வேண்டும்.

67. **நீச்சாப் பெருகிவர நிரம்பும் ஆனந்தவெள்ளம்**

**பாய்ச்சாயோ ஐயா பகராய் பராபரமே.**

பராபரமானவனே! அய்யா! நீங்காமல் பெருகி வந்து நிறைந்திடக் கூடியதான ஆனந்த மென்னும் வெள்ளம் பாய்ந்திடும் படியாகச் செய்திடுவாயா? என்று சொல்ல வேண்டும்.

68. **எத்தனையோ கெஞ்சும் எளியேன் தனக்குதவி**

**உற்றார் உனைத்தவிர உண்டோ பராபரமே.**

பராபரமானவனே! எண்ணிட முடியாததான அளவில் உன்னைக் கெஞ்சுகின்ற ஏழையான எனக்கு, உதவி செய்திடக் கூடிய உறவினர்கள் என்று, உன்னைத்தவிர எனக்கு வேறு யாராவது இருக்கின்றார்களா?

69. **கன்ன மிடுங்கருவி கரணமதைச் சுட்டோர்கள்**

**தன்னுக்குள் தானம் தனுவே பராபரமே.**

பராபரமானவனே! தவறு செய்திட உதவுகின்ற கருவிகளையும், காரணங்களையும், சுட்டொழித்தவர்களுக்குள், தானாகவே, நிறைந்திருக்கக் கூடிய தனுவானவன் நீயே ஆவாய்!

70. **காயாமற் காய்த்துக் கனிந்து சொரிவதற்கு**

**மாயமாய்ப் பூத்த மலரே பராபரமே.**

பராபரமானவனே! காயாமல் காய்ந்துக் கனிந்து, சொரிவதற்காக மாயமான முறையில் பூத்த மலர் நீயே!

71. **உயிருக் குயிரான வுட்கருவுக் குள்ளமைவே**

**தயையா யெனக்குதவி தந்தாய் பராபரமே.**

பராபரமானவனே! உயிரின் உயிராக விளங்கிடக் கூடியதான உட்கருவினுக்குள் இருக்கக் கூடிய அமைப்பே! என்மீதும் கருணைகாட்டி என்னை ஆட்கொள்ள வேண்டும்.

72. **அறிவை யறிவோருக் கானந்த வெள்ளமதாய்க்**

**கரையறவே பொங்குங் கடலே பராபரமே.**

பராபரமானவனே! உண்மை அறிவினை உணர்ந்தவர்களுக்குள்ளே, ஆனந்த வெள்ளமாகக் கரைகடந்து பொங்கிடக் கூடியதான கடல் போன்றவனே!

73 **மறைப்பொரு ளைக்காணா மடையனிவ றென்றியம்பிச்**

**சிரிப்பார் சிரிக்கிலென்ன செய்வேன் பராபரமே.**

பராபரமானவனே! வேதப் பொருள்களின் நிலைகளை உணர்ந்து காணாத அறிவு நிலையில் குறைந்த மடையன் இவன் என்று என்னைப் பார்த்துச் சொல்லிச் சிரிப்பார்கள் அப்போது நான் என்ன செய்வேன்?

74. **குறிவிளக்குங் குருவாடியைக் கொள்கையுடன் போற்றாமல்**

**அறிவு மயங்குகின்ற னையா பராபரமே.**

பராபரமானவனே! ஐயனே! கொள்கையினை விளக்கி உரைத்திடக் கூடிய குருவின் திருவடிகளை உயர்ந்த நோக்கத்துடன் வணங்கிப் போற்றுதல் செய்யாமல், நான் என்னுடைய அறிவு நிலையில் மயங்குகின்றேன்.

75. **வல்லாரைக் கெஞ்சி வலியாரைக் கால்பிடித்திட்**

**டில்லாரை நம்பி யிருந்தேன் பராபரமே.**

பராபரமானவனே! வலிமையுடையவர்களிடம் கெஞ்சியும், கால்களைப் பிடித்தும் வலிமை இல்லாதவர்களை நம்பியும் இதுவரை வாழ்ந்தேன்.

76. **சொல்லும் பதர்தூற்றிச் சூத்திரத்தைப் பாராமற்**

**கல்லுநெல்லும் போலக் கலந்தேன் பராபரமே.**

பராபரமானவனே! சொல்லக் கூடியதான பதர்போன்ற வார்த்தைகளைத் தூற்றி சூத்திரம் என்பதன் உண்மைப் பொருளினைப் பார்த்திடாமல், கல்லையும் நெல்லையும் போலக் கலந்து கிடந்தேன்.

77. **செயமுழுதுஞ் சுற்றியுமுன் சீர்பாதங் காணாமற்**

**றிகைத்தழுதே னீயுந் தெரிவாய் பராபரமே.**

பராபரமானவனே! பதினான்கு உலகங்களையும் சுற்றி வந்தும் கூட, உன்னுடைய திருவடிகளைக் காண முடியாமல் நான், என்ன செய்வதென்று புரியாமல் திகைத்து அழுது கொண்டிருந்தேன் என்பது உனக்கும் தெரியும்.

78. **கள்ளக் கருத்துகளைக் கட்டோ டறுத்தவருக்**

**குள்ளிருக்கு மெய்ஞ்ஞான வொளியே பராபரமே.**

பராபரமானவனே! தீய எண்ணங்களை அடியோடு ஒழித்து விட்டவர்களுக்கு உள்ளே எழுந்தருளியிருக்கக் கூடியதான உண்மையான ஞான ஒளியானவனே!

79. **கும்பிக் கிரைவிரும்பிக் கொடுப்பார் தமைந்தெடிச்**

**சம்பித் திரிந்தே சலித்தேன் பராபரமே.**

பராபரமானவனே! வயிற்றிற்கான உணவினைத் தேடித்தரக் கூடியவர்களைத் தேடித்தேடி திரிந்து என்னுடைய மனம் சலித்து விட்டேன்.

80. **காண்கலா வாசை கடித்தாலென் கான்முகமும்**

**வீங்காதோ வையா விதியே பராபரமே.**

பராபரமானவனே! காணக் கூடியவற்றில் எல்லாம் ஆசைப்பட்டு கடித்தால் என்னுடைய காலும் முகமும் வீங்கிவிடும் அல்லவா? தலைவனே! இது என்ன விதியோ?

81. **தூங்காமற் தூங்கித் தொழுதிருக்க வென்னுடைய**

**ஆங்கார மெல்லா மகற்றாய் பராபரமே**

பராபரமானவனே! தூங்காமல் தூங்கித் தொழுது வணங்கிக் கொண்டிருக்கக் கூடிய என்னடைய ஆணவங்களை எல்லாம் நீக்கிட வேண்டும்.

82. **தேனமிர்த மூறத் திவயமது ரஞ்சொரியத்**

**தானா யொருவார்த்தை தாராய் பராபரமே.**

பராபரமானவனே! தன் அமிர்தமானது ஊற்றெடுக்கவும், திவ்வியமான மதுரம் சிந்தவும் கூடியதான தன்மையினைப் போன்றதான ஒரு சொல்லினைத் தாமாகவே எனக்கு அருன் செய்யவேண்டும்.

83. **சாத்திரங் ளோதுஞ் சதுர்மறையோர்க் கெட்டாத**

**சூத்திரமாய் நின்ற சுழியே பராபரமே.**

பராபரமானவனே! சாத்திரங்களை எல்லாம் தெளிவாக ஓதிடக் கூடிய அந்தணர்களுக்கும் எட்டாத மந்திரப் பொருளாக நிற்கின்ற சுழியே!

84. **வேற்றொருவர் காணாத வேதாந்தத் துட்பொருளைப்**

**பார்த்தோர்க ளெய்தும் பலனே பராபரமே.**

பராபரமானவனே! மற்றவர்களால் உணர்ந்திட முடியாததான வேதாந்தங்களில் உணர்த்தப்பட்டுள்ள, ரகசியமான உண்மைப் பொருளினை உணர்ந்தவர்கள் அடைந்திடக்கூடிய பயனே!

85. **சாதி சனத்துடனே சார்ந்திருந்து பட்டதுயர்**

**போதுமபோ தும்போதும் போதும் பராபரமே.**

பராபரமானவனே! சுற்றத்தவர்களுடன் சேர்ந்து வாழ்ந்ததனால் இதுவரை அடைந்துள்ள துன்பங்களே எனக்குப் போதுமானதாகும்.

86. **உற்றாரை நம்பியிருந் தொருபலனுங் காணாமற்**

**செத்தா லெனக்கதுதான் சின்னம் பராபரமே.**

பராபரமானவனே! உறவினர்களை நம்பியிருந்து அதனால் எந்த ஒரு பயனும் இல்லாமல் இறந்துவிட்டால் எனக்கு அதுவே ஒரு அவமானச் சின்னமாகிவிடும்.

87. **செல்லு முறையறிந்து சித்திவழி காணாமற்**

**கல்லுமரம் போலானேன் கண்ணே பராபரமே.**

பராபரமானவனே! செல்லக் கூடியதான வழியினை உணர்ந்து சென்று, உன்னை அடைந்திடும் வழியினைப் பற்றித் தெரிந்திட மையினால், கல்லினையம், மரத்தினையும் போல நான் கிடந்தேன்.

88. **ஓகோ உனையறிந் தொருபலனங் காணாமற்**

**போகாமற் காத்தருளென் புணையே பராபரமே.**

பராபரமானவனே! என்னுடைய கண்போன்றவனே! அந்தோ! உன்னை உணர்ந்தும் கூட, அதனால் ஒரு பயனையும் காணாமல் போய்விடாதபடியாக என்னை நீ காத்து அருள் செய்திட வேண்டும்.

89. **உன்னை யறிவதற்கோ வுடலெடுத்தே னென்றென்னைச்**

**சின்னஞ்சொல் வார்கட்கென் செய்வேன் பராபரமே.**

பராபரமானவனே! உன்னை உணர்ந்திடுவதற்குத்தானா இந்த உடலினை எடுத்தேன் என்று நினைத்து என்னை கேலி செய்பவர்களுக்கு நான் என்ன பதில் சொல்வேன்?

90. **தெரியாத வின்பத் தெளிவா யருண்மையமாய்ப்**

**பரிபூ ரணமுடனே பாராய் பராபரமே.**

பராபரமானவனே! யாரும் அறிந்திடாத ஆனந்தத்தின் தெளிவாகவும், திருவருள் மயமாகவும், இருக்கக் கூடியதான பரிபூரணத்தினால் நீ என்னைச் சிறிது தயவுடன் பார்த்து அருள் செய்திட வேண்டும்.

91. **ஆச்சி தனைத்தேடி யாசைவைத் தலையாமற்**

**பூச்சியா யேனோ பிறந்தேன் பராபரமே.**

பராபரமானவனே! ஆச்சியினைத்தேடி அவள் மீது ஆசை வைத்து அன்பு கொண்டு அலைந்திடாமல் பூச்சியாக ஏன் பிறந்தேனோ?

92. **காசை விரும்பிக் கலங்கிநின் றுன்பாத**

**ஆசை விரும்பா தலைந்தேன் பராபரமே.**

பராபரமானவனே! உன்னுடைய பாதங்களில் ஆசை வைத்து அலைந்திடாமல் பணத்தின் மீது ஆசை வைத்து, அதனால் கலங்கி மனதுடன் அலைந்து கலங்கித் திரிகின்றேன்.

93. **சாகாமற் செத்துதயச் சச்சிதா னந்தமயப்**

**பாகமா யாகமுகம் பாராய் பராபரமே.**

பராபரமானவனே! நான் சாகாமல் இருக்க வேண்டும். அப்படி ஒருவேளை மரணம் நேர்ந்தாலும், தோன்றக் கூடியதான சத்துச் சித்த ஆனந்த நிலைகளை அடைந்திட தேவரீர் திருமுகம் பார்த்து அருள் செய்திட வேண்டும்.

94. **வாராயோ வையா வந்திறங்கிக் கொண்டணைக்கப்**

**பாராயோ சற்றே பகராய் பராபரமே.**

பராபரமானவனே! வரமாட்டாயா? அப்படி வந்தாலும் மனதில் கருணையுடன் எனக்கு அருள் செய்திட வேண்டும் என்று எண்ணிட மாட்டாயா? இச்செய்தியினைப் பற்றி எனக்கு சிறிது கருணை செய்ய வேண்டும்.

95. **ஆசைவழிப் பாசநெறி யத்தனையுங் கட்டறுத்து**

**வாசிதனி லேற்றியெனை வைத்தாள் பராபரமே.**

பராபரமானவனே! ஆசை என்ற வலையினைத் தோற்றுவிக்கக் கூடிய பாசத்தின் வழிகளை எல்லாம் கட்டறுத்து என்னை சரம் என்கிற குதிரையின் மீது ஏற்றி ஆட்கொள்ள வேண்டும்.

96. **வேஷந் தனைப்போட்டு வேதாந்த சாத்திரத்தைக்**

**காசு பணம்பறிக்கக் கற்றேன் பராபரமே.**

பராபரமானவனே! வேஷங்களைப் போட்டு வேதாந்த சாத்திரங்களைப் பணம் சம்பாதிக்க வேண்டும் என்பதற்காகவே நான் கற்றுக் கொண்டேன்.

97. **செய்தலெல்லாங் குற்றஞ் சிறியேன் றனக்கிரங்கிக்**

**கைதூக்கிக் கொண்டருளென் கண்ணே பராபரமே.**

பராபரமானவனே! என்னுடைய கண்ணே! நான் செய்தவை அனைத்தும் தவறுகளே ஆகும். ஆனாலும் என்மீது மனமிரங்கி, என்னைக் கை தூக்கிவிட்டு ஆதரிக்க வேண்டும்.

98. **மாளா மயக்கறுத்து மனக்கறையைத் தான் தழுவி**

**ஆளாக்கிக் கொள்வாயென் றையா பராபரமே.**

பராபரமானவனே! நீக்கிட முடியாததான மயக்கங்களையும் நீக்கி, மனதின் களக்கங்களையும் நீக்கி, என்னை உன்னுடைய அடிமையாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

99. **நாட்டமங்கு மிங்கிருக்க நாதாந்த முத்திநிலை**

**காட்டா யணைந்தருளென் கண்ணே பராபரமே.**

பராபரமானவனே! என்னுடைய கண்ணே! பார்வையானது இங்கும் அங்கும் அலைகின்ற போது நாதாந்தத்தின் மோட்ச நிலையினைக் காட்டமாட்டாய். ஆனாலும் என்னைச் சேர்த்துக் கொண்டு அருள் செய்திட வேண்டும்.

100. **சிந்ததை தனை தெளிந்து சித்திமுத்தி பெற்றுயர்ந்த**

**உன்றன் குணங்குடியார்க் குயிரே பராபரமே.**

பராபரமானவனே! மனதினை தெளிவடையச் செய்து, முத்தியினையும், சித்தியினையும் பெற்று உயர்நிலையடைந்த உன்னுடைய குணங்குடியார்க்கும் உயிராய்த் திகழ்பவனே!

## வினாக்கள்

1. யாக்கை நிலையாமையில் திருமூலர் கூறும் கருத்துக்களை எடுத்துரைக்க.
2. செல்வம் நிலையில்லாதது என்பதற்கு திருமூலர் கூறும் காரணங்களை விளக்குக.
3. வெற்றி வேற்கை எடுத்துரைக்கும் வாழ்வியல் அறங்களை எடுத்துரைக்க.
4. பாராபரனை குணங்குடியார் எவ்வித நிலைகளை அடையவேண்டுமென வேண்டுகிறார்?

5. பதினெண்கீழ்கணக்கு அல்லாத பிற நீதிநூற்கள் குறித்து கூறுக.

## பாடநூல்கள்

1. ஆ.வேலுப்பிள்ளை, தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், பாரி புத்தகப் பண்ணை, சென்னை.
2. திருக்குறள், பரிமேழலகர் உரை.
3. நாலடியார், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.
4. நான்மணிக்கடிகை, இன்னாநாற்பது, இனியவை நாற்பது, திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி, பழமொழி நானூறு, ஆசாரக்கோவை – சைசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.
5. முதுமொழிக்காஞ்சி – சாரதாபதிப்பகம், சென்னை.
6. நீதிநூற்கொத்து - மூதுரை, நல்வழி, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
7. பாரதிதாசன் கவிதைகள், பாரதிதாசன்.
8. திருமூலர், திருமந்திரம்.
9. வெற்றிவேற்கை, சரசுவதி புத்தக சாலை, சென்னை.
10. பராபரக்கண்ணி, குணங்குடி மஸ்தான் சாகிபு, சாரதா பதிப்பகம், சென்னை.

**பார்வை நூல்கள்**

1. சாமி சிதம்பரனார், செம்மொழி இலக்கிய அறநூல்களில் தமிழர் வாழ்வு, ராணி வெளியீடு, சென்னை.
2. ராஜ் கௌதமன், அறம் அதிகாரம், விடியல் பதிப்பகம், சென்னை.

**முனைவர்.த.க.ஜாஸ்மின் சுதா,**

உதவிப்பேராசிரியர்,

தமிழியல்துறை,

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,

திருநெல்வேலி -12.